கல்கி

தேர்தல் ஸ்பெஷல் - IV

KALKI 15.2.98 ரூ. 4.50



ஜெ. பிரசாரம்:

— நேரடி ரிப்போர்ட்



தேர்தல் '98



மெரினாவில் ஜெ:

"அது யாருங்க மூணாவது பிரதமர்?"

மெரினாவில் ஜெயலலிதா கூட்டிய வேட்பாளர் அறிமுகக் கூட்டத்திற்கு மாலை நான்கு மணிக்கெல்லாம் மக்கள், கூட ஆரம்பித்து விட்டனர். கடற்கரையெங்கும் புதிதாக முளைத்த கடைகளில் வியாபாரம் கோலாகலமாக நடந்தது. இளிப்பச்சை சேலையணிந்த அ.தி.மு.க. மகளிர்கள், கூட்டம் கூட்டமாக வந்தனர். அவர்கள் வரும்போது ஆட்டோவில் இருந்த மைக் செட்டுக்காரர் அ.தி.மு.க. பிரசார கேசட்டைப் போட்டார்.

"ஒவ்வொரு நாளும் குண்டு வெடிக்குது யம்மா யம்மா" - விரகதாபக்குரல் ஒலித்தது!

எந்தவித வெட்கமோ அச்சமோ இல்லாமல் கண்களை சொக்க விட்டு டிஸ்கோ ஆடினர். பின், இரண்டு இரண்டு பேராகக் கட்டிப்பிடித்து ஒவ்வொரு 'யம்மா யம்மா'வுக்கும் முத்தமழை பொழிந்தனர். ஜோடியில்லாமல் தனித்து விடப்பட்ட ஒரு கிழவி பாம் பாட்டம் ஆடினார்.

ஐந்தே முக்காலுக்கெல்லாம் கூட்டம் நிரம்பி விட்டது. வீடியோ கேமரா, பார்வையாளர்கள் பக்கம் திரும்பியதும்

இரண்டு விரல்களைக் காட்டினர். ஒரு பையன் ஆர்வக்கோளாறு காரணமாக எதேச்சையாகக் கையை உயர்த்தினான். பிடறியில் அடி விழுந்தது.

"விரல விரிச்சு வச்சுத்தான் கையசைக்கணுமா? இப்படி ரெண்டு விரலைக் காட்டி அசை!" என்று வெண்ணிலவே வெண்ணிலவே பாட்டு பாணியில் அசைத்தார். பையன் கஜோல்போல அசையும் இரு விரல்களையே பார்த்தான்.

ம.தி.மு.க., பா.ம.க. கட்சிக்கொடிகள் நிரம்பவே தென்பட்டன. ஜனதா, தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சிகளின் கொடிகள் கண்ணுக்குத் தென்படவில்லை.

கூட்டம் உண்மையில் பெரிய அளவில் கூடியிருந்தது. வரவேற்றுப் பேசிய காளிமுத்து, வேட்டி கட்டிய இருவர் சாதிக்க முடியாததைச் சேலைகட்டிய எங்கள் தலைவி சாதிப்பார் என்றதும் படு கரகோஷம்! இந்த உற்சாகத்தில் பெண்கள் மத்தியில் பொரிகடலை விற்ற இளவட்டம் சிக்கிக் கொண்டார். எழுந்து ஆட்டம்போட்ட மகளிர், பொரிகடலைப் பையனை அலாக்காகத் தூக்கிப் பந்தாடினர். பின், மணலில் போட்டு உருட்டி எடுத்தனர். ஆள் தப்பியதே பெரும்பாடாகி விட்டது!

போலீஸ் ஓடிப் போய், "ஏய் பேய்களா ஆளவிடுங்க" என்று மிரட்டினர். பையன் பொரி பையைத் தூக்கி, ஒரே ஓட்டம் ஓடினான். பெண்கள், "தமாகக்கு செஞ்சா கூட இந்த 'கருணாநிதி' போலீசுக்குப் பிடிக்காதே?"என்றனர். போலீஸுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

சுப்ரமணியசாமியின் மழலைப் பேச்சுக்குப் பெரிய கைதட்டல் கிடைத்தது. வை.கோ.வை 'பொரச்சி பொயல்' என்றும் ராமதாசைத் தமிழக ராஜீவ் காங்கிரஸ் தலைவர் என்றும் சொன்னதும் கூட்டமே சிரிப்பில் ஆழ்ந்தது.

மூன்றாவது பட்டுப் புடைவை பானுமதிக்கு

கல்கி-சரவணா ஸ்டோர்ஸ் இணைந்து வழங்கும் பட்டுப்புடைவைப் பரிசுப் போட்டி-3க்குக் கேட்கப்பட்ட கேள்வி: 'புத்தபிட்சுக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நாடு எது?'

பதில்- ஹாங்காங்.

"உத்திர பிரதேசக்காரர் தமிழ்ல பேசறதுன்னா பெருமையில்லையா?" என்றார் ஒரு தீவிர அ.தி.மு.க. தொண்டர். சோழவந்தானுக்குக் கிடைத்த கதி இது!


"மார்ச் 25ம் தேதிக்குப் பெறாகு அவா ஆச்சி இருக்காது! அவா பசங்கல்யாம் என்னா பண்றார்? மதுரைலே அழகிரி தாதாகிரி பண்றார். மெட்ராசிலே மேயர், மேயறார்! கொய்மூதூரில் ஒத்தர்..." (அதுயார் என்று சுவாமிதான் சொல்ல வேண்டும்.) என்பது போலத் தமது டிரேட்மார்க் குற்றச்சாட்டுக்களை ஜோசியம் கலந்து பேசினார் சுவாமி.

இடையிடையே வாஜ்பாயும், அத்வானியும் இவரது பேச்சை ஜெ.யிடம் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தனர். வை.கோ. பேசும்போது, வாஜ்பாய் கேட்காத போதும் ஜெயலலிதா தானாக முயன்று விளக்கினார்.

"நீங்கள் பிரதமரானதும் தி.மு.க. உங்கள் வாசலில் வந்து நிற்கும். அதை அனுமதிக்கக் கூடாது" என்று வை.கோ. கூறியதை ஜெ. மொழி பெயர்த்தார்.

அதைவிட, "மத்திய மந்திரி சபையில் கூட்டணிகளுக்கு இடம் கொடுப்பதாக பாரதிய ஜனதா உறுதியளித்திருக்கிறது" என்று வை.கோ. சொன்னதும் படு உற்சாகமாக அத்வானியிடமும், வாஜ்பாயிடமும் விளக்கினார். அவர்கள் இருவரும் கேட்டுவிட்டுத் தலை

• மெரினாவில் கூடிய கூட்டம்



ஆயிரக்கணக்கானோர் சரியாக எழுதி விட்டதால், குலுக்கலில் தேர்வாகி, பட்டுப் புடைவைப் பரிசு பெறுபவர்,

கே.சி. பானுமதி
101 ஏ, பாரதி, தெரு-2,
முத்துசாமி லே அவுட், கோவை - 43

வாழ்த்துக்கள்!

யைத் திருப்பிக் கொண்டனர். வைகோ.வின் பேச்சில் நம் கவனத்தைக் கவர்ந்த விஷயம்- அவர் 'புரட்சித் தலைவி' என்று தவறியும் குறிப்பிடாதது. புலிகள், ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு பற்றி வாய்திறக்காதது.

அத்வானி, வாஜ்பாயின் பேச்சை மொழி பெயர்த்த ஆர்.கே. குமாரின் பேச்சு அலங்காரம் ஏதுமற்று, இயல்பாக இருந்தது- அத்வானி பிரம்மாண்டமான கூட்டத்தைப் பார்த்ததும் ஐஸ் வைத்துப் பேசினார்.

"அதோ அங்கே அண்ணா இருக்கிறார். அங்கே எம்.ஜி.ஆர். இருக்கிறார். அங்கே "ஜெயலலிதா இருக்கிறார்" என்றதும் குமாரை பரபரக்கப் பார்த்தார். நல்லவேளை, குமார் ஜெயலலிதா இங்கே இருக்கிறார்" என்றார்.

வாஜ்பாயியின் பேச்சில் வழக்கமான நகைச்சுவை மிஸ்ஸிங்.

"ஜெயின் கமிஷன் விவகாரத்தில் அரசைக் கவிழ்த்தார்கள். இப்போது அது பற்றியே பேச மறுக்கிறார்கள். ஒருவேளை இதற்கும் பின்னால் மன்னிப்புக் கேட்பார்களோ என்னவோ!" என்று காங்கிரஸைக் குட்டிய ஓரிடத்தில் மட்டும் சிரிப்பலை!

கடைசியாகப் பேசினார் 'அம்மா'. பொருந்தாக் கூட்டணி என்று தம் அணியைக் குறிப்பிடுபவர்களையெல்லாம் ஒருபிடி பிடித்தார். "இத்தனை நாள் ஒருவர்காலை ஒருவர் வாரிவிட முயன்றுவிட்டு, தேர்தல் சமயத்தில் மட்டும் மூப்பனாரும் கருணாநிதியும் நட்பு காப்பது என்ன, கொள்கைக் கூட்டணியா?" என்று கேட்டார்.

எழுதி வைத்துப் படித்த பேச்சாதலால், ஜெ.வின் பேச்சில் உணர்ச்சி இல்லை. என்ன தான் அவர் குரலை மேலும் கீழுமாக உயர்த்தி, இறக்கிப் பேசினாலும், மோனோ ஆக்டிங் போலத்தான் இருந்தது.

"பதினெட்டுமாத ஆட்சியில் என்மீதும் என்னைச் 'சுற்றி இருந்தவர்கள்' மீதும் வழக்குகள் போட்டது தவிர கருணாநிதி வேறு என்ன செய்தார் உருப்படியாக?" என்று கேட்டபோது முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த உ.பி.ச. சசிகலாவின் முகம் இறுகிக் கவிழ்ந்து கொண்டது!

இருபத்தெட்டு நாள் தம்மை சிறையிலடைத்த கடுப்பும் வெறுப்பும் ஜெ.வின் பேச்சில் மிக வெளிப்படையாகத் தெரிந்தன

நல்லவேளையாக, பல தொண்டர்களின் பிரார்த்தனை பலித்தது. ரஜினிகாந்த் பெயரை ஜெயலலிதா பயன்படுத்தவில்லை. "உஸ் அப்பாடா" என்று பெருமூச்சு விட்டனர், பாட்டாளி மக்கள் கட்சியினர்.


"பதினெட்டு மாதத்தில் மூன்று பிரதமர்கள் ஆளும்படி செய்துவிட்ட ஐக்கிய முன்னணி தேவையா" என்று வீராவேசமாக ஜெ. இறுதியில் கேட்டபோது,

பக்கத்திலிருந்தவர், "தேவேகௌடா, குஜ்ரால்... இன்னொரு ஆளு..." என்று விரல்விட்டு திரும்பத்திரும்ப எண்ணிப் பார்த்தார். அவருடைய கணக்கு ரொம்பவும் ஆழ்ந்து போகவும் கூட்டத்தில் ஏதாவது ஆகிவிடக் கூடாது என்பதற்காக, "வாஜ்பாய்" என்றோம்.

"இன்னும் அவர் பிரதமரே ஆகலையே அதெப்படி வந்திருக்க முடியும்?" என்றதை வாஜ்பாய் கேட்டிருந்தால் சென்னைக்கு அடுத்தமுறை சத்தியமாக வரமாட்டார்! ●

— தில்லப்பா, சிக்கல் சிவராமன்

படங்கள் : **சௌந்தர்ராஜன்**





• மலர்ப் பாதை

மாதாகி ஜெ!

• மக்கள் வெள்ளத்தில் ஜெ!

கடந்த வாரம் பூந்தமல்லியிலிருந்து ஆரம்பமானது, 'மாண்புமிகு அம்மா'வின் தேர்தல் பிரசார சுற்றுப் பயணம். ஆம்; புரட்சித் தலைவி அது இது என்கிற அடைமொழிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாகக் காணாமல் போய், இப்போது 'மாண்புமிகு அம்மா' அல்லது வெறும் 'அம்மா' என்றுதான் பல்வேறு இடங்களிலும் பேனர்களைக் கட்டியிருந்தார்கள்!

பூந்தமல்லிக்கு மாலை மூன்று மணிக்கு வருவதாகப் பேப்பர்களில் முழுப்பக்க விளம்பரங்கள். ஜெ.வின் தேர்தல் பிரசாரம் அங்கிருந்துதான் துவங்குகிறது என்பதாலும் போயஸ் தோட்டத்திலிருந்து புறப்பட்டு, அவர் வந்து பேசுகிற முதல் இடம் அதுதான் என்பதாலும் ஒருவேளை அவர் சரியான நேரத்துக்கு வந்து விடக்கூடும் என்பதால் நாம் பிற்பகல் இரண்டேகால் மணிக்கே அங்கு ஆஜரானோம்!

பூந்தமல்லி பஸ் நிலையத்தின் வெளியே சிறிதாக ஒரு மேடை போட்டு அங்கே ஜெ. மாதிரியே வேஷம்போட்ட ஒரு பெண் இரண்டு விரல்களைக் காட்டிக் கொண்டிருந்தார். மேடைக்குக் கீழே எம்.ஜி.ஆர். மாதிரி இன்னொருவரும் வேஷம் போட்டுக் கொண்டிருந்தார். 'இன்பமே உந்தன் பேர் பெண்மையோ...' என்ற பாடலுக்கு

ஓர் ஆணும் பெண்ணும் ரெக்கார்ட் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தார்கள்! ரெக்கார்ட் டான்ஸ் என்றால் சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன! கூட்டமே (சுமார் ஆயிரம் பேர் இருக்கலாம்) வாயைப் பிளந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது!

'அம்மா'வை வரவேற்பதற்கு இதுபோதுமா என்று நாம் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தபோது, திடீரென்று ஒரு டெம்போ வந்தது. டெம்போ முழுக்கப் பூக்கள். போக்குவரத்தை நிறுத்திவிட்டு கூடைகளில் வாரி வாரி ரோட்டில் தூவினர். மேடையிலிருந்து சுமார் ஐந்நூறு அடி தூரத்துக்கு மேல் தார் ரோடு பூரோடாக மாறி விட்டது.

"சார்! அந்தம்மா இந்தப் பூப்பாதையில் நடந்து வந்து மேடையில் ஏறிப் பேசப் போறாங்களா?" நம்மிடம் கேட்டார் ஒருவர்.

"அப்படியெல்லாம் வருவாங்கன்னு தோணலைங்க. செக்யூரிடி காரணத்துக்காக அவங்க வேனிலிருந்து கீழே இறங்குவாங்களான்னே தெரியலீங்களே!" என்றோம் நாம்.



• ஜெ. வேனிலிருந்தபடியே பிரசாரம்

"வேனுக்காகவா பூப்போடுவாங்க. இருக்காதுங்க. நடந்துதான் வருவாங்க. வரணும்!" என்று நம்மிடம் எக்கச்சக்க எதிர்பார்ப்புகளோடு பேசினார் அவர்.

நமக்கு ஒரு சந்தேகம். "ஒருவேளை ஜெ. வேனை விட்டுக் கீழே இறங்கிப் பேசுவாரோ?" என்கிற நமது சந்தேகத்தைக் கட்சிக்காரர் ஒருவரிடமே கேட்டோம்.

"சொல்ல முடியாதுங்க. திடீர்னு அவங்க இறங்கிணாங்கன்னா என்ன பண்றது? அதுக்குத்தான் பூப் போட்டிருக்கோம்!" என்றார்.

"இந்த வாட்டி அம்மா கட்சி ஜெயிக்கறமாதிரி தெரியுது இல்லை!" என்று கூட்டத்திலிருந்து மூன்று நரிக்குறவர்களிடம் பேச்சை ஆரம்பித்தோம்.

"அதெல்லாம் தெரியாது சாமி. வர்றாங்கன்னு சொன்னாங்க. பார்க்கலாம்னு நிக்கறோம்!" என்றனர் அவர்கள்.

நமது கண்ணுக்குத் தெரிந்து இரண்டே இரண்டு மகளிர் அணித் தொண்டர்கள்தான் நின்றிருந்தனர். ஏதாவது பேச்சுக் கொடுக்கலாம் என்று பக்கத்தில் செல்லுகிற சமயம், "இன்னாயா தள்ளி நில்லு!" என்று வேறொரு நபரை அவர்களில் ஒருவர் முறைத்தபோது நாம் அப்படியே ஜகா வாங்கிக் கொண்டோம்.

சரியாக மூன்றரைமணி. "மாண்புமிகு அம்மா" வருகிறார் என்று அறிவிப்பு. வந்தே விட்டார். பூப் பாதையில் வேன். மஞ்சள் வண்ணச் சேலையில் ஜெ. அவரது சீட்டுக்கு எதிரிலுள்ள ஃப்ளோரசண்ட் விளக்குகளின் வெளிச்சத்தில் முகம் ஜொலிக்க ஜெ! (வரும் வழியில், நிகழ்ச்சி நிரலில் இல்லாத போரூர் பகுதி மக்களிடமும் பேசியதால் அரை மணி லேட்!)

• டூப் ஜெ!



மேடைக்கு அருகே வேன் வந்து நின்றது. 'ஒரு தமிழரான மூப்பனார், பிரதமராவதைத் தடுத்த தி.மு.க.' பற்றியும், 'தங்கத்தைக் கூட வாங்கிவிடலாம்; வெங்காயத்தை வாங்க முடிகிறதா? என்னுடைய ஆட்சிக் காலத்தில் விலைவாசி இப்படியா இருந்தது?' என்றெல்லாம் சுமார் பன்னிரண்டு, பதின்மூன்று நிமிடங்கள் வேனுக்குள்ளிருந்தபடியே (ஏ.சி.வேன் என்பதால் கண்ணாடியைக் கூடக் கீழே இறக்கவில்லை) பேசினார்.

பக்கத்தில் திறந்த ஜீப்பில் அந்தத் தொகுதி (ஸ்ரீபெரும்புதூர்) வேட்பாளர் (அ.தி.மு.க.) வேணுகோபால் கும்பிட்டபடி நின்று கொண்டிருந்தார்.

"கவலைப்படாதப்பா. நீதான் இந்த வாட்டி எம்.எல்.ஏ!" என்றார் கூட்டத்திலிருந்த ஒரு தொண்டர்!

"இன்னாபா நீ பேஜார் பண்றியே! இது எம்.பி. எலெக்ஷன்ப்பா!" என்று இன்னொருவர் திருத்த, "அட, இன்னாவோ ஒண்ணு. இத்தப் போய் புட்டுக்கினியே... வுடுவியா!" என்று அவர் சொல்ல, பக்கத்திலிருந்தவர்கள் சிரிக்க, ஜெவும் பேச்சை முடித்துக் கொண்டு புறப்பட்டார்.

அவர் புறப்படுகிறபோது, காவித் தலைப்பாகையுடன் காணப்பட்ட பி.ஜே.பி. தொண்டர் ஒருவர், "மாதா கி ஜெ!" என்று சொல்லி விட்டு, திருப்பிச் சொல்லுவார்கள் என்று பக்கத்திலிருந்தவர்களைப் பார்த்தார். யாருமே கண்டுகொள்ளாமல் போகவே, பாவம்! சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டோமோ என்கிற வெட்க உணர்ச்சி முகத்தில் கவிய, கூட்டத்தில் கரைந்து போய் விட்டார்!

— சார்லஸ்

மன்னிக்க

பாப்ரி மசூதியை உடைத்ததற்காக, நரசிம்மராவுக்குத் தேர்தலில் டிக்கட் கிடையாது என்று கேசரி சொன்னதும் காங்கிரஸ் கட்சி மீது மக்களின் அனுதாப அலை வீசத் தொடங்கி விட்டது! நீதிபதி ஜெயின் உதவிகூட இல்லாமல், ரொம்பவும் கஷ்டப்பட்டு இப்படி ஒரு காரணம் கண்டுபிடித்து அறிவித்ததோடு, காங்கிரஸ்காரர்கள் பாப்ரி மஸ்ஜித் ப்ளூ ஸ்டார் என்று பழைய நிகழ்ச்சிகளுக்கு மன்னிப்புக் கோர ஆரம்பித்திருக்கிறார்கள்... இந்த நல்ல காரியங்களை அவர்கள் எப்படித் தொடர்வார்கள் என்று நம் கற்பனை இதோ.

அர்ஜுன்சிங் : நரசிம்மராவ்தான் பாப்ரி மசூதியை இடித்தார் என்று மட்டும் சொன்னால் போதாது. ஒவ்வொரு தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் நாம் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறோம் என்று குறைந்தபட்சம் மூணு தடவையாவது சொல்லி விட வேண்டும்.

ஏ.கே. ஆன்டனி : அதெப்படி? நரசிம்மராவ் அன்னிக்கு அயோத்தியிலேயே இருக்கலியே?

அர்ஜுன்சிங் : இருக்கணும்கிற அவசியம் இல்லே. போபால் விஷ வாயு வெளியான உடனே, என் குடும்பத்தை மட்டும் பத்திரமா ராவோட ராவா போபாலை விட்டுக் கூட்டிட்டுப் போய்ட்டேன். அப்படியும் விபத்துக்கு, முதலமைச்சரா இருந்த என்னோட தலையைப் போட்டு உருட்டலையா?

கேசரி : மன்னிப்புக் கேட்டுக்கிறதுதான் சரி. அப்பத்தான் மைனாரிடி நம்மை நம்புவார்கள்.

தங்கபாலு : மன்னிப்புக் கேட்டுக்கிட்ட கையோடு, ஆளுக்கு மூணு தோப்புக் கரணமும் போட்டுடலாம். சிம்பதி கூடுதலாக் கிடைக்கும்.

அர்ஜுன் : லிபரலைசேஷன் காரணமா பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டும், ஏழைகள் ஏழையாகவே இருப்பதுக்கும் வேணும்னா நரசிம்மராவ் மீதே குற்றம் சொல்லிடலாம். சோனியா அப்படித்தான் என்கிட்ட சொல்லச் சொன்னாங்க.

மன்மோகன் : நோ. நோ. புதிய பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஏதோ எனக்குக் கொஞ்ச நஞ்சம் பாராட்டு இப்பத்தான் கிடைச்சிருக்கு. இன்னும் 20-25 வருஷத்துலே அதனோட பலன் நிச்சயம் தெரியும். அதை மட்டும் டச் பண்ண வேணாம்னு கேட்டுக்கறேன்.

கேசரி : அதுக்குத்தான் 'வறுமையை ஒழிப்போம்'னு புதுசா ஸ்லோகன் ஒண்ணு போட்டுட்டமே....

அர்ஜுன் : யாரோட வறுமைன்னு கேப்பாங்க. இப்பல்லாம் ஜனங்க ரொம்ப அலர்ட். சுக்ராமோட வறுமையையும், ஹர்ஷத் மேத்தாவோட வறுமையையும் ஒழிச்ச மாதிரியான்னு கேப்பாங்க!

சிந்தியா : ஜனங்களோட வறுமையை அவங்களாத்தான் ஒழிச்சுக்கணும். மக்கள் ஒவ்வொருத்தரோட வறுமையையும் நாம போய்ப் போய் ஒழிச்சிட்டிருந்தா, மந்திரி வேலையைப் பாக்கறது எப்படி?

கருணாகரன் : நர சிம்மராவுக்கு எஸ்.பி.ஜி. பாதுகாப்பை இன்னமே எடுத்துடலாம். செலவு குறையும். அதை எடுத்து வறுமையைக் கொஞ்சமாவது ஒழிச்சுடலாம்!

அர்ஜுன் : வேற எது எதுக்கு மன்னிப்புக் கேக்கலாம்? யோசிச்சு ஒரு லிஸ்ட் போட்டுட்டா நல்லது.

பிரணாப் : ஜெயின் அறிக்கைல தமிழர்களைப் பழிச்சுட்டார்னு, மொத்தமா தமிழர்கள் எல்லாரையுமே புகழ்ந்து தள்ளிட்டேன். பெரியார், ராஜாஜி, காமராஜ் எல்லாரையும் பாராட்டியாச்சு. யாரோ சத்தியமூர்த்தின்னு ஒருத்தரைக்கூடப் பாராட்டிட்டோம். போதாதா என்ன?

தங்கபாலு : காமராஜரையே மறந்துட்டாங்க தமிழர்கள். சத்தியமூர்த்தியையா ஞாபகம் வச்சுக்கிட்டிருக்கப் போறாங்க!

சரத்பவார் : செயின்ட் கிட்ஸ் வழக்குல நரசிம்மராவ் சிக்கிக்கிட்டிருக்கார். ஜே.எம்.எம். வழக்கில மாட்டிட்டிருக்கார். லக்குபாய் பாடக் வழக்குல சிக்கிட்டிருக்கார். போஃபர்ஸ்ல கூட இன்வால்வ்ட். எல்லாத்துக்கும் ஒவ்வொண்ணா மன்னிப்புக் கேக்கறதுக்குள்ள அடுத்த தேர்தல் வந்துருமே?

கருணாகரன் : சோனியா ரொம்ப க்ளவர். 'ப்ளூ ஸ்டாரு'க்கு இறந்து போன மாமியார் சார்புல மன்னிப்புக் கேட்டுட்டாங்க. நாம்ப தப்பிச்சோம்.

சரத்பவார் : எல்லாத்துக்கும் காங்கிரஸ் கட்சியோ, நாங்களோ காரணம் இல்லே. நரசிம்மராவ்தான் காரணம். அவரோட சொந்த லாபத்துக்காக இந்த ஊழல் எல்லாம் பண்ணார்னு சொல்லிடலாம். சோனியாவும் ஒத்துப்பாங்க. மீட்டிங்குலயும் பேசிருவாங்க. கூட்டம் மொத்தமும் காங்கிரசுக்கு வோட்டுப் போட்டு

டும்.

திவாரி : இப்ப எமர்ஜன்சி கொண்டு வந்ததுக்கும் மன்னிப்புக் கேக்கணும்கறார் வாஜ்பாய்.

பிரணாப் : இப்படியே போய்க்கிட்டிருந்தா ஜவாஹர்லால் நேரு '47 ஆகஸ்ட் 15ஆம் தேதி பதவி ஏத்துக்கிட்டதிலேருந்து ஒவ்வொண்ணுக்கும் மன்னிப்பாக் கேட்டுக் கிட்டே இருக்கணும். தேர்தல் அறிக்கையா, மன்னிப்புக் கோரிக்கையான்னு ஜனங்க வெறுத்துப் போயிடுவாங்க.

அர்ஜுன் : எல்லாம் சொல்லிட்டோம். யார் பிரதமர்னு மட்டும் சொல்லலியே?

பவார் : அதை ரிசல்ட் வந்தப்பறம் சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கலாம். இப்பவே எதுக்கு?

கேசரி : வாஜ்பாய்தான்னுட்டாங்க பி.ஜே.பி. ஐக்கிய முன்னணி சார்புல கர்ஜித்துக்குக் கூடப் பயப்படாம 'நான் ரெடி'ன்னுட்டார் ஜோதி பாசு. நாம்பளும் சொல்லிட வேணாமா? நான் வேணா பிரதமரா இருந்துடறேனே? இந்தத் தலைவர் பதவி ரொம்ப பேஜார். இதை நீங்க யாரானா எடுத்துக்கலாம்.

பிரணாப் : இந்திரா காந்தி போய்ட்ட உடனேயே நான் ட்ரை பண்ணேன். ராஜீவ் குறுக்கே வந்தார். இப்பத்தான் ராவும் இல்லியே? நான்தான் பிரதமரா இருக்கணும்.

அர்ஜுன் : எதுக்கும் சோனியாவைக் கேப்போம். அவங்க என்னைத்தான் சப்போர்ட் பண்ணுவாங்க. வேணா பாருங்க.

மன்மோகன் : சோனியாஜி என்னைத்தான் பிரதமர் ஆக்கணும்னு நினைச்சுக்கிட்டிருக்காங்க. இது எனக்கும் அவருக்கும் மட்டும் தான் தெரியும்.



தங்கபாலு : மெஜாரிடி கிடைச்சப்புறம் அதைப் பத்தி யோசிக்கலாமே? இப்பவே எதுக்கு?

கேசரி : இல்லே. இப்பவே ஆரம்பிச்சாத்தான் தேர்தல் முடிஞ்சு, வோட்டு என்ற வரைக்குமாவது நான் தான் பிரதமர்னு சொல்லிக்கிட்டிருக்கலாம்...

பவார் : பழையபடி ஐக்கிய முன்னணிக்கு அவுட்சைடு சப்போர்ட்டு தான்னா ரொம்ப கஷ்டமாயிடும். பழியைப் போடறதுக்கு நரசிம்மராவ் கூட இருக்க மாட்டார்!

வேண்டுகிறோம்!

கேசரி : இந்தத் தடவை அவுட்சைடு சப்போர்ட் கிடையாது. இன்சைடு சப்போர்ட்டு தான். அதாவது நமக்கு பிரதமர் பதவி கொடுத்தா சப்போர்ட்டு.

பவார் : கரெக்ட்! அதுல நல்ல எக்ஸ்பீரியன்ஸ் வந்திடுச்சு உங்களுக்கு. ஈஸியா பண்ணிடலாம் நீங்க. அப்புறம் காலை வாரி விட ஏதாவது காரணம் கிடைக்காமயா போயிடும்?

அர்ஜுன் : பயப்படவே வேண்டாம். ஜெயின் ரிப்போர்ட் பாக்கியைத் தாக்கல் செய்யணுமே! ஜெயின் மேலே பழியைப் போட்டுத் தப்பிச்சுக்கலாம்!

கேசரி: ஆமாம்! அதுக்கெல்லாம் யார் கிட்டேயும் மன்னிப்பு கேட்கத் தேவையில்லை!

— சாருகேசி

45

சொற்ப பாவமே பண்ணியவரானாலும் அவருக்கும் ஒரு ஸ்வப்னம் மூலம் பகவான் தன்னை உணர்த்துகிறார். என்ன ஸ்வப்னம்...? தடாரென்று மரம் முறிந்து விழுகிறது; காற்று அடிக்கிறது; பாம்பு புஸ்ஸென்று சீறிக் கொண்டு கடிக்க வருகிறது.

இப்படியெல்லாம் ஸ்வப்னத்திலே கண்டு அலறியடித்துக் கொண்டு எழுந்திருக்கும்போது அந்தப் பாவம் நிவ்ருத்தியாகி விடுகிறது.

ஆகையினாலே ஸ்வப்னம் என்பது சுப சூசகமாகவும் இருக்கலாம், அசுப சூசகமாகவும் இருக்கலாம்.

ஸ்வப்ன சாஸ்திரத்தில் 3360 வகை சுப சகுனங்களும், வேறு 3360 அசுப சகுனங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன!

அழகான ஸ்த்ரீ கையிலே தங்கக் குடத்தோடு வந்தால் அது அசுபசகுனம்!

அதனால்தான் போன கதையிலே விட்டு விட்டு வந்த அந்த ஆசார்யர் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தார்.

எழுந்து உட்கார்ந்தவருக்கு மறுபடியும் தூக்கம் வரவில்லை.

காலையில் சிஷ்யர்களெல்லாம் வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருக்கையில், ஸ்வப்னத்தில் கண்ட அந்த ஸ்த்ரீயே வருகிறாள்! கையில் குடத்தோடு வருகிறாள்!

நடுங்கிப் போய்விட்டார் அவர்!

அந்தப் பெண்ணோ, அவரையும் தாண்டி பர்ணசாலைக்குள்ளே போய் உள்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்!

நடுங்கிப் போய்விட்டார் – சிஷ்யர்கள் வருகிற நேரமாயிற்றே; ஒரு ஸ்த்ரீ உள்ளே போய்விட்டாளே! எவ்வளவு கதவிடித்தாலும் அவள் வெளியே வரவில்லை!

இவர் என்ன பண்ணினார்...?

குடிலுக்கு மேல் ஏறிவிட்டார். ஏறி ஓலைகளையெல்லாம் பிரித்தார். அங்கே இரண்டு பெரிய மூங்கில் கழிகள். அதிலே கணுக்கள் கூர் கூராக இருக்கின்றன. உள்ளே குனிந்து



குறையொன்றுமில்லை

பார்த்தார் – ஒருத்தரையும் காணும். அதனால் என்ன பண்ணினார்... இரண்டு கால்களையும் உள்ளே விட்டுக் கொண்டார்! விட்டுக் கொண்டால், கீழேயும் போக முடியவில்லை; மேலேயும் வர முடியவில்லை. மூங்கில் கணுக்களில் இடுப்பு அகப்பட்டுக் கொண்டு, அது கீறி ரத்தமாகக் கொட்டுகிறது!

அப்போது சிஷ்யர்களெல்லாம் வருகிறார்கள். அவர் சொல்லித் தந்தபடி இந்த்ரியங்கள் வித்வான்களை ஆகர்ஷிக்காது என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்! சொன்னபடி வந்தவர்கள், பர்ண சாலை கூரையில் இவர் மாட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து, கிட்டே வந்து கேட்கிறார்கள் :

"மேலே என்ன பண்ணுகிறீர்கள்....?"

அதற்கு குரு பதில் சொல்கிறார் :

"நான் மேலே என்ன பண்ணுகிறேன் என்பதை அப்புறமாகச் சொல்கிறேன். நேற்று நான் திருத்திய மந்திரத்தை முதலில் நீங்கள் மாற்றியெழுதிக் கொள்ளுங்கள் : பலவான் இந்த்ரியக்ராம : வித்வான்ஸபி கர்ஷதி – கர்ஷதி கர்ஷதி கர்ஷத்யேவ!" என்றார்.

ஒரு தடவைக்கு மூன்று தடவையாய் கர்ஷதி கர்ஷதி... என்றது எதற்காக?...

இந்த்ரியங்கள் ரொம்ப பலம் வாய்ந்தவை. அவை வித்வான்களையும் இழுக்கும். இழுக்கும் இன்னும் இழுக்கும், மேலும் இழுக்கும்... என்பதால் கர்ஷதி கர்ஷதி கர்ஷத்யேவ என்றார்.

சொன்னதும் 'பொத்'தென்று உள்ளே விழுந்தார். உள்ளே ஒருத்தரையும் காணவில்லை!

வந்தது யார்...?

சாஸ்திரமே வந்திருக்கிறது!

அதுவே பெண் உருக்கொண்டு அவரைத் திருத்தியிருக்கிறது.

சாஸ்திரத்தைத் திருத்த நமக்கு சக்தி உண்டா! மஹரிஷிகளெல்லாம் சிரமப்பட்டு, நினைத்து நினைத்துப் பார்த்து எது உண்டோ அதை எழுதினார்களேயொழிய தாங்களாகக்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



அருள்வாக்கு

ஆத்மாபிவிருத்தியில் ஓரளவுக்கு மேலே போகப் போக மனஸின் ஒருமுக தியானத்துக்கு வாக்கு, காரியம் ஆகியவையே இடைஞ்சலாகத் தான் ஆகும். காரியம், ஸ்தோத்ரம், மந்திரம் எல்லாமே அப்போது நின்று போய்விடும். ஆனால் இது தானாகவே விட்டுப் போகிற ஸமாசாரம். தவளையை உதாரணமாகச் சொல்வது வழக்கம். தவளை ஜலத்தில் தான் முட்டை போடும். அப்புறம் முட்டையிலிருந்து வெளியே வந்துவிட்டும் சில காலம் மீன் மாதிரி ஜலத்தில் மட்டும்தான் இருக்கும். அந்த ஸ்டேஜில் அதற்கு நிலத்திலே ச்வாஸிப்பதற்கு வேண்டிய லங்ஸ் கிடையாது. மீன் மாதிரி ஜலத்தில் கரைந்திருக்கிற ஆக்ஸிஜனைத் தனக்குள்ளே இழுத்துக் கொள்ளும் உறுப்பு (gills) மட்டும்தான் அப்போது தவளைக்கு உண்டு. அப்புறம்தான் அது வளர வளர, இந்த உறுப்பு எப்படி மறைந்தது என்றே தெரியாமல் தானாக மறைந்து, அதற்கு நிலத்திலேயிருந்து கொண்டு, காற்றிலேயுள்ள ஆக்ஸிஜனை ச்வாஸிக்கக்கூடிய லங்ஸ் உண்டாகிறது. இப்படி ஹையர் ஸ்டேஜுக்குப் போகும்போது தானாகச் சடங்கு, மந்த்ரம் எல்லாம் நின்று போகும். அதற்காக ஆரம்பத்திலேயே இதெல்லாம் வேண்டாம், மனஸ் சுத்தம் போதுமென்றால், அது தவளை முதலில் ஜலத்திலிருக்கும்போதே லங்ஸ்தான் வேண்டும் என்று தனக்கு இருக்கிற ச்வாஸ அவயவத்தையும் விட்டு விட்டு... விட்டால் என்ன ஆகும்? உயிரையும் விட வேண்டியது தான்...



வெளிச் சின்னங்கள், வெளிக்காரியங்கள், வெளி வித்தியாஸங்கள் இவற்றின் மூலம்தான் உள்ளே ஒரு அடையாளமும், காரியமும், பேதமும் இல்லாமல் ஆகிற நிலையை அடைய முடியும். முதலிலேயே கார்யத்தைக் கொடுக்காமல் மனஸை மட்டும் வைத்துக் கொண்டு தியானம் பண்ணு என்றால் மனஸ் ரொம்ப நேரம் கண்டபடி ஓடிவிட்டு, அப்புறம் எழுந்து விடத்தான் செய்யும்; அல்லது களைத்துத் தூக்கத்தில் கொண்டு விடும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

கற்பனை பண்ணி ஒரு சாஸ்திரத்தை எழுதவில்லை. அதைத் தப்பு என்று சொல்லி நாம் மாற்றப் பார்த்தோமானால் இவருக்கு நடந்ததுதான் நடக்கும்.

இவ்வாறு இந்த்ரியங்கள் வித்வான்களையும் இழுக்கக்கூடியவையானதினாலே ஆந்தரங்கிக் சத்ரு என்று அதைச் சொல்லியிருக்கிறது. அந்தரங்கமாய் நமக்குள்ளேயே இருக்கிற சத்ரு. அதை விளக்க இன்னொரு கதை...

ஒரு ராஜ சமஸ்தானம். அதிலே ராஜகுமாரிக்கு வித்யை சொல்லிக் கொடுக்கிறார் ஒரு ஆசார்யர். அவருக்கு எழுபது வயது. அந்தப் பெண் இப்போது இளமை யௌவனத்தை அடைந்து, பதினெட்டு வயதில் இருக்கிறாள். அவள் யுவதியாய் நிற்பதைப் பார்த்து, வரத்தகாத ஆசை இவருக்கு வந்து விட்டது. அந்த ராஜகுமாரியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்கிற ஆசை! ஆசார்யராயிற்றே.... அவருக்கு இப்படியொரு ஆசை வரலாமா...?

வந்து விட்டது! இந்த்ரியம் அவ்வளவு பலம் வாய்ந்தது!

உடனே அந்த ஆசார்யர் என்ன பண்ணினார்... ஆஸ்தான ஜோதிடரைக் கூப்பிட்டுச் சொன்னார் : "இந்தப் பெண் இன்னும் ஒரு வாரம் இங்கே இருந்தால் ராஜ்யமே கரிக்கட்டையாகிவிடும் என்று ராஜாவிடம் சொல்லி விடுங்கள்... அப்படிச் சொன்னதும் ராஜா உங்களிடமே 'என்ன பண்ணலாம்' என்று யோசனை கேட்பான்... அவனிடம் சொல்லுங்கள். ஒரு பெட்டியிலே இந்தப் பெண்ணை வைத்து, நதியிலே விட்டு விடும்படிச் சொல்லுங்கள். அவனும் விட்டு விடுவான். அதற்கப்புறம் நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்றார்.

ஆஸ்தான ஜோதிடரும் வித்வான் சொன்னதற்கேற்ற மாதிரி ராஜாவிடம் போய்ச் சொல்லி விட்டார்.

ராஜாவும், பாவம்... பெண்ணிடம் ஆசை இருந்தாலும் ஊர் அழிந்து விடப்போகிறதே என்ற பயத்தில், ஒரு பெட்டியைப் பெரிதாகக் கொண்டு வந்து, அவளை அதிலே உட்கார வைத்துப் பூட்டி நதியிலே விட்டு விட்டான்.

பெட்டி, நதியிலே அடித்துக் கொண்டு வருகிறது. இவர் என்ன பண்ணினார். இந்த வித்வான்.... நதியின் ஏழாவது துறையிலே காத்துக் கொண்டிருக்கிறார் – பெட்டிக்காக.

அந்தச் சமயம் பக்கத்து தேசத்து ராஜா, வேட்டையாடிவிட்டு நதியின் நாலாவது துறையிலே படுத்துக் கொண்டிருக்கிறான். அப்போது இந்தப் பெட்டி வருகிறது... உடனே

ராஜகுமாரன் பார்த்தான்... "அதோ பெட்டி ஒன்று வருகிறதே அதை எடுத்துக் கொண்டு வா!" என்றான்.

எடுத்துக் கொண்டு வந்து, பூட்டை உடைத்துப் பார்த்தால், மஹாலக்ஷ்மி மாதிரி பெண்! அவளும் இவனைப் பார்த்தாள். இவனும் அவளைப் பார்த்தான். இரண்டு பேரும் காந்தர்வ முறையிலே கருத்தொருமித்து, கந்தர்வர்கள் பண்ணிக் கொள்ளக்கூடிய விவாகம் – காந்தர்வ விவாகம் பண்ணிக் கொண்டார்கள். ஆபரணத்தை மாற்றி விவாகம் செய்து கொண்டார்கள்.

உடனே, நடந்த விருத்தாந்தத்தை அவள் சொன்னாள். ஆசார்யனுடைய குயுக்தியைச் சொன்னாள். இளவரசன் பார்த்தான்... அவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு பண்ணி... அப்போதுதான் வேட்டையாடி ஒரு கரடியைப் பிடித்துக் கட்டியிருக்கிறான்... அந்தக் கரடியைப் பெட்டிக்குள்ளே அடைத்துப் பூட்டி, மறுபடியும் நதியிலே விட்டு விட்டான்!

ஏழாவது துறையில் காத்திருந்தாரே ஆசார்யர்.. அவருடைய சிஷ்யர்கள் பெட்டி மிதந்து வருவதைப் பார்த்தார்கள். ஒரு சிஷ்யன் ஓடிப் போய், "ஆசார்யவய்யா! பெட்டி வருகிறது, பெட்டி வருகிறது!" என்றான்.

"எடுத்து வாருங்கள்! எடுத்து வாருங்கள்!" என்றார் ஆசார்யர்.

அங்கே உள்ளே ஒரு பாழடைந்த தேவாலயம் இருந்தது... அங்கே கொண்டு போய்ப் பெட்டியை வைக்கச் சொன்னார்.

"நீங்களெல்லோரும் வெளியே போயிடுங்கள்... நான் உள்ளே கதவை மூடிக் கொள்வேன்... என்ன ஓசை வந்தாலும் திறக்கக் கூடாது..." என்றார்.

அப்படியே சிஷ்யர்களும் வெளியேறினார்கள்.

இவர் கதவைப் போட்டுக் கொண்டு, மெதுவாகப் பூட்டை உடைத்துப் பெட்டியைத் திறந்தார்... திறந்தாரோ இல்லையோ.... மஹா கோபத்தோடு இருந்த கரடி எகிறி அவர் கழுத்தைப் பிடித்துக் கொண்டது!

அவர் எதிர்பார்க்கவேயில்லை! நடுங்கிப் போய் விட்டார்.

"ஐயோ! கரடி கழுத்தை நெரிக்கிறதே..." என்று கத்தினார்.

வெளியே நின்ற சிஷ்யர்கள் அத்தனை பேரும் "ததாஸ்து!" என்றார்கள்!

அந்தக் கரடியிடமிருந்து விடுபட்டு வெளியிலே குத்துயிரும் குலையுயிருமாக வந்து விழுந்தார். அப்போது அவர் சொல்கிறார் :

"என்னுடைய சரித்திரம் உலகத்துக்கு ஒரு



''அதிகமான கட்சிகளோட கூட்டணி வைக்காதீங்கன்னு அப்பவே சொன்னேன், தலைவர் கேட்கலை...''

''ஏன், என்னாச்சு?''

''எல்லா கட்சிகளுக்கும் சீட் ஒதுக்கினது போக, நமக்கு ஒரு சீட்டுகூட மிஞ்சலை!''

– பாம்பன் செ. சல்மான்

பாடமாக இருக்கட்டும். வரத்தகாத நேரத்திலே காமம் வந்தது எனக்கு. அதனால் இப்படி பரிபவப்பட்டேனே... நான்! கரடி வந்திருக்காவிட்டால் எனக்கு புத்தி வந்திருக்குமா...!"

இந்த மாதிரி இந்த்ரியங்கள் பெரியோர்களையே கெடுக்கிறது. எவ்வளவு சாஸ்திர பாண்டித்யம் இருந்தாலும் அது மொத்தமும் மறந்து போய் விடுகிறது.

நமக்கு ஆந்தரிகமான (அந்தரங்கமான) சத்ரு இந்த்ரியங்கள். அந்த இந்த்ரியங்களை அடக்கி ஆள வேண்டுமென்றால், அதற்கு உபாயமாக இருக்கக்கூடியவன் விஷ்ணுதான். அவனே தூரத்தில், நமக்கு வெளியே இருக்கும் படியான பாவங்களையும் போக்கக்கூடியவன், ஆந்தரிக சத்ருவான இந்த்ரியங்களையும் போக்கக்கூடியவன். அல்ப விஷயத்திலே நம் மனம் போகவிடாமல் தடுக்கிறான்.

அதற்காக பகவான் என்ன பண்ணுகிறான்... எப்போதுமே நம்முடன் இருந்து ரக்ஷிக்கிறான் – அவன் திருவடியைப் பற்றின அத்தனை பேரையும் ரக்ஷிக்கிறான். எங்கேயிருந்தோ வரவேண்டுமானால் காலம் ஆகும் என்பதனாலே, அருகேயே இருந்து ரக்ஷிக்கிறான்.

பக்கத்திலேயேயிருந்து சரணாகத ரக்ஷணம் பண்ணுவதனாலே அவன் பெயர் விஷ்ணு.

இந்த சரணாகத ரக்ஷணமாகிய யக்ஞத்தை அவனும் மஹாலக்ஷ்மியும் இணைந்து நடத்துகிறார்கள். ஸ்ரீயஃபதித்துவம் என்கிற குணத்தை இதிலே பார்க்கிறோம்.

(தொடரும்)

கட்டுவதற்கு ஒரு புடவை இல்லாமல் பலர் இருக்க ஒருவருக்குப் பத்தாயிரம் புடவைகளா? ஆயிரம் செருப்புகளா?





ஒவ்வொரு நாளும்
ஒரு புடவையாகக்
கட்டிப் பார்த்தாலும்
முழுவதையும் கட்டிமுடிக்க
30 ஆண்டுகள்
வேண்டுமே !

ஆயிரம்
வண்ண வண்ணச்
செருப்புகள் !
- ஜொலிக்கும்
புடவைகளுக்கு
பொருத்தமாக

நல்லாட்சி தொடர வழி வகுப்பீர் !

ஒரு ரூபாய் சம்பளத்தில்

இப்படி ஒரு வாழ்க்கையா?

ஊழல் பணத்தில்

ஆடம்பர வேட்கையா?

நேர்மையான நல்லாட்சி

என்றும் தொடர

ஆதரிப்பீர்

உதயசூரியன்

தமிழ் மாநில காங்கிரஸ்

இந்திய கம்யூனிஸ்ட்

லஞ்ச லாவண்ய மதவெறிக் கூட்டணியை முறியடிப்பீர் !!

வெளியீடு : தி.மு.க. அண்ணா அறிவாலயம், சென்னை.

சமீபத்தில் சென்னை வந்திருந்த பிரபல மலையாள நாவலாசிரியர் எம்.டி. வாசுதேவன் நாயர், 'கல்கி'க்குப் பிரத்தியேகப் பேட்டி அளித்தார். அதிலிருந்து :

"சினிமா எனக்கு இரண்டாம்பட்சம்!"

● **மலையாள எழுத்துலகம் எப்படி இருக்கிறது இன்று?**

ரொம்பச் சுறுசுறுப்பாக இருக்கிறது. புதிய புதிய எழுத்தாளர்கள் நிறைய எழுதுகிறார்கள். மலையாளச் சிறுகதைத் தொகுப்புகளும், நாவல்களும் நிறையவே விற்பனை ஆகின்றன. புதிய புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவை வாசகர்களை ஈர்க்கவும் செய்கின்றன. ஒரு டஜன் சிறுகதை எழுத்தாளர்கள் பெயரை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லலாம். குறிப்பிடத்தக்கவர்கள் என்று ராமன் உண்ணி, கொச்சு பாவா இவர்கள் பெயரைச் சொல்லலாம். புத்தகங்கள் நிறைய விற்கின்றன என்பதே நல்ல அடையாளம் அல்லவா?

● **தமிழ் – மலையாளப் படைப்புகளில் ஏதாவது வேறுபாடுகள் காண்கிறீர்களா?**

தமிழில் பெரும்பாலும் தொடர்கதைகளாக வெளியாகி, பிறகே புத்தக வடிவில் வருவதாக அறிகிறேன். ஆனால் மலையாளத்தில், அப்படித் தொடராக வராமலே நேரிடையாகப் புத்தகமாக வருமானால் கூட, வாங்கிப் படிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. அந்த நூல்களின் விற்பனையும் அதிகம்!

● **மலையாளத்திலும் நிறையத் தொடர்கதைகள் வெளியாகின்றன அல்லவா?**

வெளியாகின்றன. ஆனால் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்களிடம் ஒரு சாப்டர், இரண்டு சாப்டர்கள் முதலில் எழுதி வாங்கிக் கொண்டு தொடரை ஆரம்பித்து விடுகிறார்கள். மலையாளத்தில் நாங்கள் அப்படிச் செய்வதில்லை. முழு ஸ்கிரிப்ட்டும் எழுதி வாங்கிக் கொண்ட பிறகே, நாவலைத் தொடராக வெளியிட ஆரம்பிக்கிறோம்.

● **மலையாளத் திரைப்படங்கள் பலவும், முதலில் நாவல்களாக வெளிவந்து பிரபலமாகி, பிறகே திரைப்படங்களாக வழங்கப் படுகின்றன.** தகழியின் 'செம்மீன்', 'ரெண்டு இடங்கழி' என்று உதாரணம் கூடச் சொல்லலாம். தமிழில் அப்படி முடிவதில்லையே... ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ஒரு விதிவிலக்கு....

என்னுடையதிலும் கூட, 'ஓளவும் தீரவும்' புத்தகமாக வந்து பின்னர் திரைப்படமாயிற்று. ஆனால் 'நிர்மால்யம்', 'வாரிக்குழி' 'பந்தனம்', 'கடவு' ஆகியவை நேரிடையாக நான் சினிமாவுக்கு என்றே எழுதியவை.

● **நீங்கள் சினிமா உலகில் நுழைந்தது தற்செயலா, திட்டமிட்டா?**

நான் ஓர் எழுத்தாளன். 1960களின் கடைசியில், சிலர் என்னைத் திரைப்படங்களுக்கு ஸ்க்ரிப்ட் கேட்டு வந்தார்கள். என்னுடைய கதைகளையே திரைக்கு ஏற்ற மாதிரி வசனம் எழுதித் தரச் சொன்னார்கள். அப்படித்தான் திரைப்படத் துறைக்கு வந்தேன். முழு நேரத் திரைப்பட வேலை என்பதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை.

● **எழுதியது திரைப்படமாக வரும்போது, திருப்தி அடைந்ததுண்டா?**

எழுத்தும், திரைப்படமும் வெவ்வேறு வகை மீடியம். வார் அன்ட் பீஸ் நாவலை அப்படியே சிதைக்காமல் திரைப்படம் ஆக்குவது என்றால், குறைந்தபட்சம் 90 மணி நேரங்களாவது வேண்டும். ஆனால் இரண்டரை மணி நேரத்தில் வழங்க வேண்டும் என்கிறபோது, அதற்கேற்ற மாற்றங்களைக் கொண்டு வந்துதான் ஆக வேண்டும். எழுதியபடியே படத்தில் கொண்டு வந்து விட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

● **தமிழ்ப் படங்களோடு மலையாளப் படங்களை ஒப்பிட்டுச் சொல்லுங்**

கனேன்....

பழைய தமிழ்ப் படங்களில், வாழ்க்கையுடன் ஆன ஒரு சிறு தொடர்பு இருந்தது. இப்போது, அப்படி எந்தப் படத்தையும் நான் பார்க்கவில்லை. வாழ்வின் சில பிரச்னைகள் கூடப் படத்தில் பிரதிபலிக்கவில்லையோ என நினைக்கிறேன். மலையாளத்தில் ஏதாவது ஒரு பாயின்ட்டில், - இட் ஹேஸ் ரிலேஷன்ஷிப் வித் ரியல் லைஃப்.

● பத்திரிகை ஆசிரியராக இருந்தும் கூட (மாத்ருபூமி), இப்போதும் நிறைய எழுத முடிகிறதே உங்களால்?

முன்பு பத்திரிகை உருவாக நிறைய நேரம் செலவழிக்க வேண்டியிருந்தது. இப்போது மேற்பார்வையோடு சரி. அதனால் நேரம் கிடைக்கிறது. திரைப் படங்கள் எனக்கு இரண்டாம்பட்சம் தான். எழுத்துக்குதான் முதல் இடம்.

● உங்கள் மிகச் சிறந்த படைப்பு எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

என்னுடைய ஒவ்வொரு நாவலும், என்னைப் பொறுத்தவரை, மிகச் சிறந்த படைப்புதான். ஆனால் உங்களைப் போல் என்னிடம் கேட்பவர்களிடம், 'த பெஸ்ட் இஸ் யெட் டு கம்' என்று தான் சொல்லுகிறேன்!



– എം.ടി. വാസുദേവൻ നായർ

(எம்.டி. வாசுதேவன் நாயர்)

● நீங்கள் எழுத வந்தது எப்படி என்று சொல்லவில்லையே?

நான் நிறைய படிப்பேன். டால்ஸ்டாயையும், டாஸ்டாவ்ஸ்கியையும் படித்துப் பிரமித்திருக்கிறேன். அவர்கள் மாதிரி எழுத முடிவதில்லையே என்று வருத்தம் கூடப்பட்டிருக்கிறேன். பிறகு மலையாளத்திலேயே எஸ்.கே. பொற்றேகாட், வைக்கம் முகமது பஷீர், தகழி இவர்களின் படைப்புகளைப் படித்துவிட்டு, அவர்களைப் போல நானும் ஓர் எழுத்தாளனாக ஆக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. எழுதும் முறையும், அநுபவங்களும் சேர்ந்து கைவரப் பெற்ற பிறகு, எழுதுவது எளிதாகி விட்டது.

● இடதுசாரி அரசியல் கேரளத்தில் வேரூன்ற, இலக்கியமும் ஒரு காரணமா?


ஆமாம். ஆரம்பத்திலிருந்தே நிலமும், பிரபுத்துவமும், உழவனும், உழைப்பும் பலரது எழுத்துக்களில் பிரதிபலித்தன. தகழியின் 'ரெண்டு இடங்கழி,' கேசவ தேவின் நாவல்கள் போன்றவற்றைக் குறிப்பாகச் சொல்லலாம்.... இலக்கியத்தின் வாயிலாக மக்களின் மனமும் வெளிப்படலாயிற்று.

● நீங்கள் எந்த அரசியலையும் சாராது போனது எப்படி?

ஆரம்பத்தில் இடதுசாரி இலக்கியங்கள் என்னைக் கவர்ந்தன. பிறகு ஏராளமாகப் படிக்கத் தொடங்கிய பிறகு, எனக்கென்று ஒரு தனிப்பட்ட சிந்தனையும், போக்கும் உருவாயின. அதற்குப் பிறகு என் தனித்தன்மையைக் காண்பிக்க, எந்தக் கட்சியையும் சாராமல் இருந்து விட விரும்பினேன். ○

சந்திப்பு : **நம்பி**

படம் : **யோகா**





1998 பிப்ரவரி 15
ஈசுவர மாசி 3
மலர் : 56
இதழ் : 29

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




உணர்ச்சிகளைத் தூண்டி வோட்டு வேட்டை!

கையில் சின்முத்திரை காட்டிச் சிரிக்கிறார் வாஜ்பாய்! பி.ஜே.பியின் முக்கால் பக்க நாளிதழ் விளம்பரம், ஜாதி மத வேறுபாடின்றி அனைவரும் அக்கட்சியை ஆதரிப்பதாகத் தெரிவிக்க முயற்சி செய்கிறது.

ஆனால், அவர்களின் தேர்தல் அறிக்கை, அயோத்தியில் ராமர் கோயிலை மீண்டும் கட்டியே தீருவோம் என்கிறது! 'அணு ஆயுதங்களை நாமே உற்பத்தி செய்வோம்' என்கிறது. – இந்த இரண்டு காரியங்களால் மலரப் போவது ராம ராஜ்யம் அல்ல; ரணகள ராஜ்யம்தான்!

காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது ஷரத்தை ரத்து செய்வோம்; பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவோம் என்றெல்லாம் மத அடிப்படையிலான உணர்ச்சிகளை விழிப்பு கொள்ளச் செய்கிறது பி.ஜே.பி.

பி.ஜே.பியின் 'நிலையான ஆட்சி; தகுதி மிக்க பிரதமர்' என்ற கோஷம், கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அதை நிஜமாக்க என்ன வழிமுறைகளைக் கையாளப் போகிறோம்? திட்டங்கள் என்ன? சிறுபான்மையினரிடையே பாதுகாப்புணர்வை வளர்க்க, வேரூன்றச் செய்ய என்ன வழித்தடங்களைப் பின்பற்றலாம்...? என்பதற்கெல்லாம் பி.ஜே.பியிடம் பதில் இல்லை.



உணர்ச்சிபூர்வமான அணுகுமுறையுடன் கட்சிகள் தேர்தலில் இறங்குவதென்பது நம் நாட்டில் புதிய விஷயமல்ல... ஆனால், சீரிய சிந்தனை அடித்தளம் கொண்டிருந்த பி.ஜே.பி கூட இப்படி திசைமாறிப் போய் குறுக்குவழியில் ஜெயிக்க முற்படுவதை வாக்காளர்கள் கவனிக்க வேண்டும்.


பி.ஜே.பியின் கூட்டணிக் கட்சியான அ.தி.மு.கவிடம் நாம் அதிகம் எதிர்பார்க்க வில்லைதான்... அருமையான ஆட்சி வாய்ப்பை வீணடித்து அவப்பெயர் தேடிக் கொண்ட அக்கட்சியின் தலைவி, பசுத்தோல் போர்த்திய புலியாகத் தமது தேர்தல் பிரசாரத்தை நடத்துகிறார். 'நான் நிரபராதி. எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. விசாரணைகள், வழக்குகள், தீர்ப்புகள்... எல்லாமே பழிவாங்கல் நடவடிக்கை...' என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொள்ளாத குறையாக வலம் வருகிறார்.

கடந்த காலத்தில், எம்.ஜி.ஆரின் நிழலாக ஜெயலலிதாவைக் கண்ட எளிய மக்களின் அனுதாபத்தை மீண்டும் தமது பக்கம் இழுத்துக் கொள்ளவே அவர் முயன்று வருகிறார்.

அனுதாப வாக்குகளைத் தமது கட்சிக்கு அள்ளித்தர முயன்று வரும் மற்றொரு தலைவி சோனியா காந்தி, 'சுதந்தரத்துக்காகப் போராடிய குடும்பத்தைச் சேர்ந்தவர்', 'நாட்டுக்காக உயிரையே விட்டவர்களின் நெருங்கிய உறவினர்...' – இந்த விஷயங்களைச் சொல்லியே தமது அந்நியத் தன்மையை அழித்துக் கொள்ளப் பார்க்கிறார் சோனியா. வாக்காளர்களின் அங்கீகாரம் வேண்டுகிறார்.

'நான் பாரதப் புதல்வி' என்று முழங்கி விட்டு, ப்ரியங்கா, ராஹுல்லுடன் வாரிசு அரசியல் தொடர்வதற்கான வாய்ப்புகளை ஆராய்கிறார்!

காங்கிரஸ் புரிந்த ஊழல்கள், போபர்ஸ் முதல் உரபேரம் வரையிலான ஊழல் விசாரணைகள் என்று அனைத்தையும் அனுதாபப் போர்வையால் உதறி மூடிவிட முடியும் என்ற நம்பிக்கையில் மாநிலம் மாநிலமாகச் சுற்றிக் கொண்டிருக்கிறார் சோனியா.



எந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையை எடுத்துப் பார்த்தாலும் மக்களின் உணர்வுகளுக்குத் தீனி போட்டு, அறிவை மழுங்கடித்து வோட்டுப் பெறுகிற ஒரே செயல் திட்டம்தான் பளிச்சிடுகிறது.

இவற்றிடையே சற்று வேறுபட்டு நிற்பது த.மா.காவின் தேர்தல் அறிக்கை மட்டுமே....

நிதியமைச்சர் சிதம்பரம் தயாரித்துள்ள இந்த அறிக்கை, தொலைநோக்குடன் தொழில் கொள்கை, நிதிக் கொள்கை பற்றிப் பேசுகிறது. எல்லோருக்கும் கல்வி, அடிப்படை வசதிகள் பெருக்கம் குறித்துப் பொறுப்புடன் குறிப்பிடுகிறது.

தாராளமயமாக்கல் கொள்கை தொடர்கிற அதே நேரத்தில், விவசாய அடிப்படையிலான தொழில்களின் பெருக்கத்துக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்றும் உறுதியளிக்கிறது. மொழிக் கொள்கை, மதச்சார்பின்மை, நதிநீர் இணைப்பு, அயலுறவுக் கொள்கை என அனைத்திலும் மிதமான, அறிவுபூர்வமான அணுகுமுறை பளிச்சிடுவது தெரிகிறது.

அரசியலில் பெண்களுக்கு 33 சதவிகித ஒதுக்கீடு நீங்கலாக, மற்றபடி இந்த அறிவுபூர்வமான அணுகுமுறை வித்தியாசமாகவும் வரவேற்கத்தக்கதாகவும் உள்ளது.

நம் நாட்டில் ஏறத்தாழ ஐம்பது சதவிகித மக்கள் எழுத்தறிவில்லாத பாமரர்கள்தாம். இவர்களை உணர்ச்சிபூர்வமாகக் கட்டிப் போடுவதோ, தட்டியெழுப்புவதோ எளிது. அப்படிச் செய்து, பதவிக்கு வருவதும் பின்னர் அவர்களைச் சுரண்டி ஏமாற்றுவதும்தான் அரசியல் என்றாகிவிட்டது!

இந்த ஏமாற்று அரசியலைப் புறக்கணித்து, பகுத்தறிவு அரசியலை வரவேற்கும் விதமாக வாக்காளர்களின் தீர்ப்பு அமைய வேண்டும். அதற்கு ஓர் ஆரம்பப் பிள்ளையார் சுழியாவது இந்தத் தேர்தலில் போடப்பட்டால் மகிழலாம். ●

●●

ரெண்டு கையையும் துஆ கேக்கற மாதிரி வெச்சுக்கிட்டு ஏதோ மனசுக்குள்ள முணுமுணுக்கற பரிமளச்செல்வத்த ஆச்சரியத்தோட பாத்தார் மீராபாய். 'என்ன பண்றான் இந்தப் பையன்?'

●●

நோன்பு

வீடியோ கோச் நெடுஞ்சாலைல வேகமா போயிட்டிருந்தது.

வெளியிலே நல்ல வெயில். பயண அலுப்பில ஜனங்க அரைகுறைத் தூக்கத்துல இருந்தாங்க. சன்னலோர சீட்டுல இருந்த மீராபாய்க்குத் தூக்கமும் வரல. மனசுல நிம்மதியும் இல்ல. நெனப்பெல்லாம் திருச்சி பாலக்கரைக் கடை மேலதான்.

பாலக்கரைக் கடைய செல்வராசுக்கு வாடகைக்கு விட்டு... ஆச்சு, அதுவும் பத்து வருசம். வாடகையெல்லாம் நல்லாத்தான் தர்றாரு மனுசன். ஆனா, பக்கத்துக் கடை ஆளுங்கள்ளாம்தான் மீரா பாய்கிட்டே திரும்பத் திரும்பச் சொன்னாங்க. "பாய், செல்வராசைக் காலி பண்ணச் சொல்லுங்க. மஸ்தான் யாவாரமில்லாம சுத்தறான். ஏதாவது பிளாஸ்டிக் கடை வச்சுக் குடுத்துருவோம். லைன் முழுக்க நம்மாளுங்க கடை ஆயிரும். ஏதாவது பிரச்னைன்னா நாங்க ஒன்னுமின்னா இருந்துக்குவோம். நீங்க பாட்டுக்கு மெட்ராசுக்குப் போயி செட்டிலாயிட்டீங்க. பிரச்னைன்னா அது எங்களுக்குத்தானே?"

இந்தக் கடைசி பாயிண்ட்ல கொஞ்சம் அசந்துட்டாரு மீராபாய்.

செல்வராசு கிட்ட இந்தத் தடவ கறாரா பேசிப்பிட வேண்டியதுதான். அதுக்காகத்தான் இந்தப் பயணம்.

பக்கத்து சீட்ட திரும்பிப் பாத்தார். சின்ன வயசுப் பையன். இங்கிலீசு நாவல் படிச்சுக்கிட்டு வந்தாரு. பேரு பரிமளச்செல்வம். டிராவல்ஸ்காரன் லிஸ்ட்ல கையெழுத்துப் போடறப்பவே கவனிச்சாரு மீராபாய். நல்ல பேருன்னு மனசுல நெனச்சுக்கிட்டாரு.

விழுப்புரம் பக்கத்துல ஒரு மோட்டல்ல பஸ் நின்னது. இறங்கிப் போயி முழுசா எட்டணா குடுத்து ஒதுங்கிட்டு பஸ் ஏறிக்கிட்டார். வழக்கமா ஒரு சாயா அடிக்கறது உண்டு. இப்ப ரமலான் நோன்பு இருக்கறதால அதுவும் கிடையாது. கேசட்டுக் கடைல வியோனி கலக்கிட்டிருந்தாரு. அரை மணி நேரம் கழிச்சி பஸ் புறப்பட்டது. வெயிலே சுத்தமா இல்ல. 'ஆறே காலுக்கு நோம்பு திறக்கணும்'. மணி பார்த்துக் கொண்டார்.

வீடியோவுல போட்ட படம் ரொம்பவும் இரைச்சலா இருந்துச்சு. ஏதாவது தஸ்பீஹ் ஓதலாம்னாக்கூட இடைஞ்சல்தான். பரிமளச்செல்வம் தடிமனான இங்கிலீசு புஸ்தகத்தை மூடி உள்ளே வெச்சுட்டார் பைக்குள்ள இருந்து ஒரு டிபன் பாக்சை எடுத்துத் தெறந்தார்.

ரெண்டு கையையும் துஆ கேக்கற மாதிரி வெச்சுக்கிட்டு ஏதோ மனசுக்குள்ள் முணுமுணுக்கற பரிமளச்செல்வத்த ஆச்சரியத்தோட பாத்தார் மீராபாய். 'என்ன பண்றான் இந்தப் பையன்?'

அப்புறமா அந்தப் பையன் பண்ணின

நிஷாந்தன்

காரியம்தான் இவருக்குத் தூக்கி வாரிப் போட்டுச்சு. 'டப்பாவுல இருந்து ஒரு பேரீச்சம்பழம் எடுத்து வாயில போட்டுத் தண்ணி குடிக்கறானே, நம்மாளுங்க நோம்பு தொறக்கறமாதிரி.'

தெகைச்சுப் போயி வாய் தொறந்தே கேட்டுட்டாரு. 'தம்பி என்ன பண்றீங்க நீங்க?''

'ஏன்' என்பது போல் தல நிமிந்து பாத்து அவரு சொல்றாரு.

''நோன்பு திறக்கறேன். ஏன் சார்?''

'நோம்பா?... தம்பீ... உன் பேரு... பரிமளச் செல்வமில்லே?''

''ஆமாம் சார். அதனால என்ன?''

''நீங்க எங்காளுக மாதிரி இசுலாமா?''

'கடகட'ன்னு சிரிச்சுப்புட்டாரு பரிமளச்செல்வம்.

''ஏன் சார் இப்படியெல்லாம் பிரிச்சுப் பேசறீங்க? நோம்பு இருக்கறது மனசுக்குத் தெளிவு தருது. உடம்புக்கு பலம் தருது. ஆரோக்கியம் தருது. வாழ்க்கைல தன்னம்பிக்கையையும், ஆன்ம சுத்தியும் கெடைக்குது. இதெல்லாம் முஸ்லீமா இருந்துதான் பெறணுமா என்ன? நான் திருச்சி ஜமால் காலேஜ்லதான் படிச்சேன். அப்போயிருந்து வருசா வருசம் நோன்பு இருக்கேன். இறைவன்கிறது நம்ம எல்லாருக்கும் ஒருத்தன்தானே சார்? மதத்தின் பேரால ஏன் சார் படைச்சவனைக் தேவலப் படுத்தணும்?''

சாட்டையால அடிபட்ட மாதிரி கலங்கிப் போனாரு மீரூபாய்.

''அடடே, பேச்சு [redacted]சுத்துல மறந்துட்டேன். [redacted]ளும் நோன்பு முடிக்கணுமில்லே,




இந்தாங்க, பேரீச்சம் பழம் எடுத்துக்குங்க.''

மௌனமா எடுத்துக்கிட்டாரு மீராபாய். அப்போ காவேரிப் பாலத்துல வௌக்கெல்லாம் எரியத் தொடங்கிருச்சு.

''நேரம் போறதே தெரியாம எத்தனை நாள் உங்களோட பேசிகிட்டிருந்தேன்; எத்தனை சினிமாவுக்கு ஆசைப்பட்டு உங்களோட வந்திருக்கேன், இதையெல்லாம் யோசிக்காம எப்படி இன்னொரு பெண்ணைக் கல்யாணம் கட்டப்போறதா சொல்றீங்க?''

''தப்பு! தப்பு! இதையெல்லாம் யோசித்துப் பார்த்ததினால் தான் அந்த முடிவுக்கு வந்திருக்கேன்.''

- வீ.எஸ். கணேசன்



கோவை பாராளுமன்ற மார்க்சிஸ்ட் வேட்பாளர் வாபஸ் ஆனதன் பின்னணியில் ஓர் அலசல் ரிப்போர்ட்:

கோவை: கடைசி நேரக் குளறுபடிகள்!

'தி.மு.க.வுடன் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கடைசி நேரத்தில் தேர்தல் உடன்பாடு கொண்டது. அதன்படி கோவை தி.மு. கழக வேட்பாளர் வேட்புமனு வாபஸ்' என கோவையில் மாலை தினசரி ஒன்று அவசரச் செய்தி வெளியிட, தலைமைக் கழகத்திற்கு, மாநில மையத்திற்கு என ஒரே செல்லுலார் போன் மயம்... ஏகப்பட்ட குழப்பங்கள், கோவை கட்சிகளின் வட்டாரத்தில்.

அன்று மாலை சிங்காநல்லூரில், கூட வேண்டிய தி.மு.க. செயல் வீரர்கள் + வேட்பாளர் அறிமுகக் கூட்டம் இதனால் மூன்று மணி நேரத் தாமதம். அதிலும் ஏக களேபரம். சாரிசாரியாய்த் திரும்பும் தொண்டர்கள்....



• மு. இராமநாதன், க. ரா. சுப்பையன்

குழப்பத்தின் காரணமாய் மிகத் தாமதமாக வந்தார் தி.மு.க. வேட்பாளர் க. ரா. சுப்பையன். "செய்தி பொய்... கூட்டம் இருக்கிறது... திரும்பி வாருங்கள்!" – காரில் வந்தபடியே அனைவரையும் திருப்பியழைத்துப் போக, பின்னாடியே ஒன்றரை வருட முன்னாள் எம்.பி. மு. இராமநாதன், இரா. மோகன், எல்லோரையும் சமாதானப்படுத்தும் முகமாய் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி ஆகியோர்.

"நம் வேட்பாளர் வாபஸ் என்பது பொய்ச் செய்தி. நம்ப வேண்டாம்... மாறாக மார்க்ஸிஸ்டு பார்ட்டிதான் நமக்கு ஆதரவாக மனு வாபஸ் பெற்றுக் கொண்டனர். தனி மேடையில் நமக்காகப் பிரசாரமும் செய்யப் போகிறார்களாம்! இப்போதுதான் செய்தி வந்துள்ளது....!"

– என அறிவித்ததுதான் தாமதம் – ஒரே கர கோஷம். மீறிடும் உற்சாகம்.

"ஏய்யா... போன தடவை ரெண்டே முக்கால் லட்சம் வோட்டு வித்தியாசத்துல நம்ம ஜெயிச்சோம். இப்ப 'CITU' தொழிற்சங்கமும், ஜனதாதளமும் நமக்கு ஏக ஆதரவு... இப்படி கைவசம் நாம அஞ்சு லட்சம் வோட்டை வச்சுட்டு இருக்கறப்பவே, பிஜேபிக்காரன் பெரிய ஊர்வலம் நடத்திட்டான்... பணத்தை ஏகமா இறைக்கிறான்... ஜெயிச்சுடுவான் போலயிருக்குன்னு நம்மளே மிரண்டு போனா என்னாய்யா அர்த்தம்...?"

– தம் கொங்கு பாஷையில் தொண்டர்களுக்கு 'டானிக்' கொடுத்துக் கொண்டிருந்தார் மு. ராமநாதன்.

"அண்ணனுக்கு சீட் கொடுக்கலைன்னு வருத்தம்தான்... ஆனாலும் எப்படி சமாளிக்கிறார் பார்த்தியா...?" – பக்கத்தில் கிசுகிசுப்பு.

"கலைஞர் ஏன் இவருக்கு சீட் கொடுக்கலை தெரியுமா...?"

"ஏன்... நம்ம கோட்டமேட்டுக் கலவரம் தானே...?"

"போப்பா... இவரு நின்னா நீயும் நானும் முதல்ல தேர்தல் வேலை செய்வமா...? சொல்லு...?"


வெளியே இது மாதிரி பல சலசலப்புகள்.

"அவங்க என்ன கணக்குப் போட்டு என்ன சார் செய்யறது...? நாங்க நிற்காத தொகுதியெல்லாம் எங்க ஆதரவு கைக்குத்தான்...!" எனக் கண் சிமிட்டினார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

இவர்கள் இப்படியென்றால், மார்க்சிஸ்டுகள் வேறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தி.மு.க. – த.மா.கா.வுடனான தொகுதிப் பங்கீட்டின்போதே இவர்களுக்கென்று சுட்டிக்காட்டப்பட்ட கோவை தொகுதி, இப்போது தாமே வலிய வந்து விட்டுக் கொடுக்க வேண்டிய கட்டாயம்... 'தோழர்களுக்குள்' உணர்ச்சிக் கொந்தளிப்பும், அதிருப்தியும் இல்லாமலில்லை. "இவ்வளவு தூரம் பெருந்தன்மையாய் நாங்கள் நடந்து கொண்டும் (மனுதாக்கல் செய்த ஆறு தொகுதிகளில் நான்கு வாபஸ்) இந்த தி.மு.க. – த.மா.கா. விட்டுக் கொடுக்



• மார்க்ஸிஸ்டுகள் உற்சாகம் : வாபஸ் பெறப் போனபோதல்ல; முதலில் வேட்புமனு தாக்கல் செய்யப் போனபோது...



• சி. பி. ராதாகிருஷ்ணன்



• ஆர். கிருஷ்ணன்



• பி. ஆர். நடராஜன்

காதது எவ்வளவு அசிங்கம்.... கேவலம்....'' என்றும் பேசுபவர்கள் இருக்கிறார்கள்.

''இப்படி நடக்கும் என்று நான் கொஞ்சங் கூட எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கை காட்டின தொகுதியையே எந்தப் பிரதிபலனும் இல்லாம விட்டுக் கொடுத்து....''

- விரக்தியுடன் ஒரு தோழர் மாவட்ட மையத்தில் ஒரு பத்திரிகையாளரிடம் புலம்பிக் கொண்டிருந்தார்.

''நாங்க மட்டும் கனவா கண்டோம்... நாலு தொகுதி சிபிஎம் வாபஸ்னதும் அதுல இது ஒண்ணா இருக்கும்னு கொஞ்சம் கூட நினைக்கலை...!''

- பதிலுக்கு அங்கலாய்ப்பாய் அவர்.

இந்த நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மனு வாபஸ் பெற்ற வேட்பாளர் பி.ஆர். நடராஜன் நம்மிடம் பேசும்போது, ''இது மையம் எடுத்த சரியான முடிவு... அதற்கு அனைவரும் கட்டுப்பட வேண்டியது ரொம்ப முக்கியம். அவங்க எங்களை (மீதி 2 தொகுதிகளில்) ஆதரிக்கிறார்களா என்று கேட்பது இந்த இடத்தில் சற்றும் பொருந்தாது. ஒரு மதச் சார்புக் கட்சி வெற்றி பெற நாங்களே இடம்கொடுத்துவிடலாகாது என்கிற உயரிய நோக்கிலேயே, பாஜக போட்டியிடும் தொகுதிகளில் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து, வாபஸ் பெற்றுக் கொண்டோம். அவர்களுக்கான பிரசார யுக்தி (தனி மேடை) குறித்து எங்கள் செயற்குழு கூடி முடிவு செய்யும்....'' என்றார்.

மார்க்சிஸ்டு வேட்பாளர் 31-ந் தேதி மனு வாபஸ் பெற்றதுதான் தாமதம். ஒரே நாளில் கோவையில் ஏராளமான தி.மு.க. தோரணங்கள்... கட்சியின் தேர்தல் அலுவலகங்கள்... சுவர் இடம் பிடிப்பு... என ஒரே அமர்க்களம்! அதிலும் சென்னை மேயர் ஸ்டாலின் வந்ததுதான் தாமதம். தி.மு.கவினர் விழாக் கோலமே பூண்டு விட்டனர்.

வேட்பாளர் இறக்கை கட்டிக் கொண்டு பறந்த இக்கட்டான சூழ்நிலையிலும் படாதபாடு பட்டு தி.மு.கழக வேட்பாளர் சுப்பையனை அவரது இல்லத்தில் பேட்டிக்காக சந்தித்து, 'இந்தக் கடைசி நேரக் குழப்பங்கள் உங்கள் வோட்டுக்களை வெகுவாய் பாதிக்காதா' எனக் கேட்டோம்.

''கண்டிப்பாக பாதிக்காது... மாறாக, நிறையவே சாதிக்கும்! கடைசி ஆறு மணி நேரத்தில் கலைஞராகவே பார்த்துத் தேர்வு செய்து நிறுத்தின வேட்பாளர் நான்! அவரின் கணிப்பு சரியானதாகத்தான் இருக்கும்! இப்போது, தொகுதி உடன்பாடு ஏற்றுக் கொள்ளாத சிபிஎம் எங்களுக்காகத் தம் மனுவை வாபஸ் பெற்று, பிரசாரமும் செய்யப் போவதாக அறிவித்துள்ளது. அத்தோடு

ஜனதாதளம், ரஜினி, சரத் ரசிகர்கள்... முக்கியமான அனைத்து தொழிற்சங்கங்கள்... என ஆதரவு நீளுகிறது...

"மக்களுக்கு ஜெ. மீதான கோபம் இன்னும் தீரவில்லை. பி.ஜே.பிக்கு வோட்டுப் போடவும் யாரும் தயாராயில்லை. பிஜேபிக்காரர்கள் குண்டு வெடித்த இடத்திலெல்லாம் சீட்டுக் 'கேட்டு' வாங்கி நின்றிருக்கிறார்கள். பொதுவாக யாருமே அமைதியான இடத்தையே விரும்புவார்கள்... ஆனால் இவர்கள்...? இதிலிருந்தே தெரியவில்லையா... அவர்கள் அமைதி விரும்பிகள் அல்ல என்று? மக்கள் – அதுவும் கோவை மக்கள் அமைதியாக வாழ ஆசைப்படுபவர்கள்... சிந்தித்து வோட்டளிக்கக்கூடியவர்கள்... இருந்தாலும் நாங்கள் கடுமையாய் உழைக்க வேண்டியிருக்கிறது. காரணம் அவர்கள் பின்னே இருக்கும் பணபலம்... பெரும் கோடீஸ்வரர்கள்...!" என்கிறார் இவர்.

தி.மு.க. வேட்பாளர் சுப்பையன், கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்தே கட்சியோடு ஐக்கியமானவர். கழக உடன்பிறப்புகளின் வழக்குகளுக்கு ஆஜராகும் வழக்குரைஞர் என்பதால் தொகுதியில் ரொம்ப ஃபெமிலியர் என்று ஒரு சாரார் சொல்கிறார்கள். 'பெரிய மனிதர்களையே கவனிக்கும் இவர், சாமான்யனைக் கண்டுகொள்ளாதவர். அதனால் உடன்பிறப்புக்களின் வேலை மிக மந்தமாகும்' என இன்னொரு சாரார்!

"ஏதோ கம்யூனிஸ்டு கட்சிக்கு மாற்று வேட்பாளர் என நினைத்திருந்தோம். பாரய்யா அதிர்ஷ்டம்... அவங்களே வாபஸ் வாங்கி... இவரையே ஆதரித்து... பார்த்துட்டேயிரு... அண்ணன் கலபமா ஜெயிச்சுடுவாரு...!" என்று அழுத்தமாய் சிலர் அதிர்ஷ்டத்தையும் நம்புகின்றனர்.

இவர்களின் சூழல் பாதி குழப்பத்திலும் அதிர்ஷ்டத்திலும் ஓடிக் கொண்டிருக்க, இவரை எதிர்க்கும் பா.ஜ.க. வேட்பாளர் சி.பி. ராதாகிருஷ்ணனோ (அ.தி.மு.க. கூட்டு) தொகுதியை ஒரு ரவுண்ட் 'ட்ரயல்' பார்த்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

மனிதர் மனுதாக்கலின்போது பிரம்மாண்ட ஊர்வலம் நடத்தி அனைவரையுமே கலங்கடித்துள்ளார். சென்ற இரண்டு பொதுத் தேர்தல்களில் முறையே 48,000; 44,000 வோட்டுக்களை இத்தொகுதியில் தன்னந் தனியே அறுவடை செய்த பா.ஜ.க., இப்போது அ.தி.மு.க.வுடன் கூட்டு சேர்ந்ததில் வெற்றியே கிட்டி விட்ட மாதிரியான உற்சாகத்தில் புரள்கின்றனர்.

"இந்தக் குழம்பின கூட்டணிக்கு வோட்டுப் போட்டு மேலும் நாட்டைக் குழப்ப ஜனங்க யாரும் தயாராயில்லை. அதை வரும் தேர்தல்ல நீங்களே பார்க்கப் போறீங்க... 'அல்-உமா'வை தி.மு.க. அரசு கட்டவிழ்த்து விட்டு, கண்டுகொள்ளாமலும் இருந்ததுதான் சமீபத்திய கலவரத்திற்குக் காரணம். இதை மக்களும் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளார்கள். இந்துக்கள் எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள் என்றெண்ணி இவர்கள் செய்யும் தவறுகளை இனியும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்...

"அதே போல் ஒட்டுமொத்த முஸ்லீம் சமுதாயம் என்பது வேறு... தீவிரவாத அமைப்பு என்பது வேறு. தி.மு.க. ஒட்டுமொத்த முஸ்லீம் சமுதாயத்தை ஆதரிப்பது போல் பாசாங்கு செய்து கொண்டு, 'அல்-உமா'வின் தீவிர வாதத்தை வளர்க்கிறது... நாங்கள் அமைதி விரும்பிகளல்ல என்பது தவறான பிரசாரம்... நாங்கள் ஆளும் மாநிலங்களில் எங்காவது இப்படிக் கலவரங்களும் வன்முறைகளும் நடந்ததுண்டா...? அமைதிக்குக் குந்தகம் விளைந்ததுண்டா...? ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்... இங்கே மட்டும் ஏன் கலவரம் பிறக்கிறது... குண்டுகள் வெடிக்கிறது...? இங்கிருக்கும் கலவரச் சூழலுக்கு மாநில அரசே பொறுப்பு..."

– இந்த 40 வயது சி. பி. ராதாகிருஷ்ணன் பி.பி.ஏ. படித்தவர். 1972 முதல் ஜனசங்கம் + பா.ஜ.க.வில் அங்கம் வகிக்கும் இவர் கோவையில் மூன்று முறை எம்.பியாக இருந்த சி.கே. குப்புசாமி (காங்கிரஸ்)க்கு அண்ணன் மகன்.

சி. கே. குப்புசாமி காங்கிரஸில் சீட் கேட்டிருந்தும் கிடைக்கவில்லை. காரணம் கட்சி மாறல் நடவடிக்கை என்று கிசுகிசுக்கிறது காங்கிரஸ் வட்டாரம். ஒருவேளை தன் சித்தப்பாவுக்கு சீட் கிடைத்திருந்தால் இவரின் சொந்தபந்த வோட்டுக்கள் பாதி பிரிந்திருக்கும். இப்போது தம் சித்தப்பா கூடத் தமக்கே வோட்டுப் போடக்கூடிய சூழல் உருவாகியிருப்பதாக சொல்லிச் சிரித்தார் பாஜகவின் சி. பி. ராதாகிருஷ்ணன்.

இவர்களையெல்லாம் சுத்தமாய் ஓரங்கட்டிப் பேசினார் ஆர். கிருஷ்ணன் (காங்கிரஸ்). மூன்றாவது அணி – தனித்துப் போட்டியிடும் வேட்பாளர். இவர் சார்பாய் அங்கொன்றும், இங்கொன்றுமாய் சில சுவரொட்டிகள். சில தொண்டர்களுடன் 'தூங்கும்' தேர்தல் அலுவலகங்கள்.

"தொழில் தேக்கம்... அபரிமித விலைவாசி பஸ் கட்டணம்... கலவரம், குண்டுவெடிப்பு... எல்லாமே ஆளுங்கட்சி மேல ஜனங்களுக்கு வெறுப்பே ஏற்பட்டிருக்கு. மேலும் இந்தப் பொருந்தாத கூட்டணிக்கு வோட்டுப் போட யார் இனி வருவாங்க. கூட்டணிக் கட்சிகளுக்குத் தகுந்த மரியாதை கொடுக்காததனால் அவங்களும் எங்களுக்கு வோட்டளிக்கும் சாதகமான நிலை உருவாகியிருக்கு. பாஜகன்னா முஸ்லீம் மட்டுமல்ல; இந்துக்களும் வோட்டுப் போடவே பயப்பட்றாங்க... சோனியா அம்மா, பிரியங்கா வருகை எங்களை இன்னும் உற்சாகப்படுத்தியுள்ளது...!" என்றார்.

கட்டுரை, படங்கள் : **கா. சு. வேலாயுதன்**

தேர்தல் '98

நீலகிரி தொகுதியில் மறுபடி நிற்கிறார் முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு. நாலு முறை நீலகிரி தொகுதியின் எம்.பி.யாக இருந்தாலும் சென்றமுறை ஜெ. எதிர்ப்பு அலையில் தோல்வி கண்டவர். பழைய உத்வேகத்தை மீண்டும் கைக்கொண்டு, தம் தொகுதியில் முதலிடத்திற்கு முன்னேறிக் (பிரசாரத்தில்) கொண்டிருக்கிறார். பிரபுவை அவர் இல்லத்தில் சந்தித்துப் பேசினோம்...



• பிரபு

எஸ்.ஆர்.பி. பீல்டிலேயே இல்லை!

— முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு பேட்டி

கல்கி: த.மா.கா.ரஜினியின் முதுகில் சவாரி செய்கிறது என்றீர்கள். நீங்கள் இப்போது (காங்கிரஸ்) சோனியாவின் பின்னால்...! இது என்ன காங்கிரஸ் கலாசாரம்...?

பிரபு: மற்றவர்கள் மாதிரி சோனியா காந்தி தனிமனிதரல்லவே. பண்டிட் நேருவின் பாரம்பரிய வாரிசு... தியாகம் செய்த குடும்பத்தின் சொத்து. இந்தக் குடும்பம் நாட்டுக்குச் செய்த சேவை உலகமே அறியும். இந்த நாட்டை முன்னேற்ற அவர்கள் பாடுபட்டதைப் போல், வேறு யாரும் பாடுபட்டதில்லை. அதைக் குறை கூறப் பிறருக்கு அருகதையில்லை. த.மா.கா. அவர்கள் பெயரைச் சொல்லி, அவர்கள் குடும்பப் பெயரைச் சொல்லி வந்தவர்கள், வளர்ந்தவர்கள். கடைசி நிமிடம் வரை பதவி சுகம் நுகர்ந்து, மந்திரி சபையிலேயே அங்கம் வகித்து, கட்சிக்குச் சோதனை வந்தபோது விசுவாசமில்லாது விலகிப் போனவர்கள்... இப்போது கூட ராஜீவ் காந்திக்கு எதிரானவர்களுடன் - ஜெயின் கமிஷன் காட்டிக் கொடுத்த பின்னாலும் கூட அவர்களுடன் ஒட்டிக் கொண்டு, திரிகிறார்களே... 'சோனியா வந்தவுடன் வருவேன்' என்றவர்கள், ஏன் இன்னும் வரவில்லை...?

கல்கி: சோனியா வந்தவுடன் பெரிய மாற்றம் வந்திருப்பதாக நம்புகிறீர்களா...?

பிரபு: நிச்சயமாக. வடக்கில் எங்கள் அலைதான் வீசிக் கொண்டிருக்கிறது என்று நீங்களே எழுதிவிட்டு, இப்படிக் கேட்கிறீர்களே...?

கல்கி: நாங்கள் இப்போது கேட்பது தெற்கில்... குறிப்பாக உங்கள் தொகுதியில்...



• எஸ்.ஆர்.பி.

பிரபு: கண்டிப்பாக. அவர்கள் கூட்டணியில் இருந்தாலும் கூட, பார்வை இங்குதான் விழுந்து கொண்டிருக்கிறது. ரஜினி ரசிகர்கள் அவர்களை ஆதரிப்பது என்பது கூட அவர்களின் வெறும் வார்த்தைதான். எங்கள் தொகுதியில் ரஜினி ரசிகர்கள் பலரும் இப்போது காங்கிரஸுக்காகக் கடுமையாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்... அ.தி.மு.க., தி.மு.க.விலிருந்தும் ஆயிரக் கணக்கானோர் வந்து கட்சியில் இணைந்து

கொண்டிருக்கிறார்கள். இது எதிரணிகளுக்கும் நன்றாகவே தெரியும். இவ்வளவும் நடப்பது... சோனியா வந்த பின்னால்தான்!

கல்கி: ஊட்டி இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை ஏற்கனவே பல்வேறு பிரச்னைகளால் ஓடாமல் கிடந்ததாகவும்... சமீபத்தில்தான் ஐ.மு. அரசின் முயற்சியால் நிதி ஆதாரம் கிட்டி, சிறப்பாக நடைபெறுவதாய் சன் டீ.வி. சிறப்புச் செய்தி கூட வெளியிட்டதே..!

பிரபு: அந்நிறுவனத்திற்கு மட்டுமல்ல, வேறு எந்தத் தொழிலுக்கும் தொகுதியில் ஐ.மு.எந்த உபகாரமும் செய்யவில்லை. இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலைக்கு நான் அமைச்சராக இருந்தபோதே 65 கோடி ரூபாய் சேங்ஷன் செய்யப்பட்டது. அதில் 32 கோடி ரூபாய் முதலிலேயே தரப்பட்டது. பிறகு வந்த ஆட்சியில் மீதியைக் கொடுத்தனர். அதுகூட ஆட்சி, செய்ததல்ல. தானாக வர வேண்டிய ஒதுக்கீடு! அது அவர்கள் சாதித்ததாகக் கூறிக் கொள்வது வெட்கம். அனைத்துத் தொழிற்சங்கமும் கூடி அதற்கு எனக்கு நன்றி கூடத் தெரிவித்தன.

சரி... இப்போதைய எம்.பி., எஸ்.ஆர்.பி. சாதித்ததை ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்? பிரச்னையேயில்லாமல் செல்வச் செழிப்பாய் இருந்த 'விஸ்கோஸி'லேயே (ரேயான் தொழிற்சாலை) ஏகப்பட்ட பிரச்னை. இன்றுவரை அதைத் தீர்த்து வைத்துள்ளாரா? மூடி மூடி மறைத்து வருகிறார்களேயொழிய ஏதாவது செய்ததுண்டா...? சிறு விவசாயிகளுக்குக் கூலி நிர்ணயம், சரியாக செய்து தர முடியவில்லை இந்த எம்.பி.யினால்!

கல்கி: 'எந்த அரசு வந்தாலும் இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே நகர்ந்தாக வேண்டும்' என்று நிதி அமைச்சர் கூறுகிறாரே...!

பிரபு: சிதம்பரம் முதன் முதலில் இங்கிலாந்து சென்றபோது நாட்டை மீண்டும் அடிமையாக்கத் தயார் என்பது போலத்தான் பேசினார். அவரின்-அதன் பின்னாலிலான செயல்பாடுகள் கூட அப்படித்தான் இருக்கின்றன. ஏழை மக்களுக்கு ரேஷன் மூலம் உணவுப் பொருள் வழங்கிய அன்னை இந்திரா, ராஜீவின் உன்னதப் போக்குகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, உலக வங்கி சொல்லும் காரணங்களுக்காக, போதை மருந்து விநியோகிப்பவருக்குச் சலுகை கொடுத்தார்! சி.ஆர். பன்சாலியின் நிதிக் கம்பெனி, ஊழலில் கொழுத்தது. அதற்கு பேங்கிங் லைஸென்ஸ் கொடுத்தனர். அதில் சுமார் 1000 கோடி ஊழல் நடந்திருப்பதாகத் தகவல். இந்தியன் பாங்க் ஊழலுக்கு இன்னும் எந்த முடிவும் காணோம்! ஏன், 'கவுடே மறைந்து விட்டதோ...?' என்கிற சந்தேகம் பலருக்கும் உள்ளது.

கல்கி: நீங்களே மிகப் பெரிய தொழிலதிபர். அரசியல்வாதி, முன்னாள் அமைச்சர். இந்த நிலையில் உங்கள் தொழிலகத்தையே பூட்டி வைத்து (ராதாகிருஷ்ணா மில்) ஆயிரக்கணக்கான தொழிலாளிகளை வாட வைப்பது எந்த வகையில் நியாயம்..? அது சார்ந்த பிரசாரம் கூட ஒரு வகையில் சென்ற தேர்தலில் உங்கள் தோல்விக்கு ஒரு காரணம் எனப் பேசப்படுகிறதே...?

பிரபு: பலரும் இப்படித்தான் புரியாமல் பேசுகிறார்கள். இப்போது நான் எந்தக் கம்பெனியிலும் டைரக்டராக இல்லை. சொந்தத் தொழிலும் செய்வதில்லை. முழுக்க முழுக்கப் பொது வாழ்க்கைக்கு வந்து விட்டேன். நான் பொது வாழ்க்கைக்கு வந்தபின் குடும்பத்தையே பார்க்கவில்லை. பிஸினஸை எப்படி நடத்த முடியும்? என் சகோதரர்கள், உறவினர்களுக்குக் கூட நான் பொது வாழ்விற்கு வந்த பின் 'புது லைசன்ஸ்' எதுவும் வாங்கக் கூடாது என்று 'ஸ்ட்ரிக்ட்' ஆர்டர் போட்டுள்ளேன். ஆனால் இதே தொகுதி எம்.பி. (அமைச்சர் எஸ்.ஆர்.பி.) மருமகனுக்குக் கேஸ் உரிமம் பெற்றுத் தருகிறார். உறவினர்களுக்குச் சலுகைகள் செய்கிறார்.

கல்கி: தமிழ்நாட்டைப் பொறுத்தவரை த.மா.க-தி.மு.க. வலுவாய் இருப்பதாகப் படுகிறதே...?


பிரபு: அப்படியெல்லாம் இல்லை. ஐக்கிய முன்னணி ஐக்கியம் இல்லாத ஆட்சி. ஐக்கியமற்ற ஓர் அரசு. 14 கட்சி கூட்டாட்சியில் அவங்களுக்குள்ளேயே சண்டை. ஏறும் விலைவாசியில், இறங்கும் தொழில் வளர்ச்சியில் மக்கள் இனி வாழ முடியுமா என்கிற சந்தேகத்தையே உருவாக்கியுள்ளது. நீங்களே சொல்லுங்கள், நம் நாட்டில் வெங்காயம் இறக்குமதி பண்ணினதாகச் சரித்திரம் உண்டா...? சுங்கவரி ஏற்றுவது, இறக்குவது என இண்டஸ்ட்ரீயை சுத்தமாகப் படுக்க வைத்து விட்டனர். லட்சுமி மெஷின் ஒர்க்ஸ், திருப்பூரில் பனியன் கம்பெனிகள் பல ஏற்றுமதி வர்த்தகத்தில் பயங்கரமாய் அடிபட்டுக் கிடக்கிறது. டீசல் விலையேற்றத்தினால் பொதுமக்களின் அத்தியாவசியப் பொருட்கள் அபரிமிதமாய் விலையேறிப் போய் விட்டன. எல்லாவற்றிற்கும் மேலாய் இந்த ஸ்திரமற்ற அரசை மக்கள் நம்பவில்லை. ஸ்திரமான ஆட்சியை காங்கிரஸ்தான் கொடுக்கும். இதுதான் நிஜம். இதை மக்களும் புரிந்து கொண்டேயிருக்கிறார்கள்... காங்கிரஸுக்கு வடக்கே ஏராளமாய் சீட்டுக் கிடைப்பது போலவே இங்கும் தமிழகத்தில் குறைந்தது பதினைந்து இடங்களை நாங்கள் பெற்று விடுவோம். சோனியா வருகை இன்னும் கூடுதலாக்கும்!

கல்கி: நீலகிரி தொகுதியைப் பொறுத்தவரை உங்களுக்குச் சரியான போட்டி யார்?

பிரபு: ம்... சரியான போட்டி... எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் (த.மா.கா), மாஸ்டர் மாதனும் (பி.ஜே.பி.) சரியான போட்டிதான். ஆனால் இரண்டாமிடத்திற்கு! முதலாமிடத்தில் எனக்கும் மாதனுக்கும்தான் போட்டி. எஸ்.ஆர்.பி. எங்கள் பீல்டுலேயே இல்லை! ●

சந்திப்பு, படங்கள்: **கேயெஸ்வி**

KALKI SHOPPING PAGE



காது கேளாதவர்களை காது கேட்கச் செய்யும் Dr. சாமிகிரி சித்தருக்கு 9.9.93 அன்று திருசெந்தூர் தேவஸ்தானத்தில் அமரர் திருமுருக கிருபானந்த வாரியார் அளித்த பாராட்டுப் பத்திரம்

"ஊனம் உற்றவர்க்கு உதவுவது சிறந்த தானமாகும். அன்பர் சாமிகிரி சித்தர் காது கேட்காதவர்களுக்கு தான் தரும் அரிய மருந்தால் காது கேட்கும்படி செய்து உதவுகின்றார். இவர் சித்தர் பரம்பரையில் வந்தவர். இவர் காது கேட்க வைத்து புனர்வாழ்வு தருகின்றார். இவர் ஆச்சரியமான முறையில் சிகிச்சை செய்து வருகின்றார். இவருடைய தொண்டு வாழ்க" என வாழ்த்து வழங்கினார்.

காது கேட்காதவர்களே வாருங்கள்!

காது வலியா? இரைச்சலா? சீழ்வடிகிறதா? சரியாகக் காது கேட்கவில்லையா?

2. வேளை சிகிச்சை பெற்று, சந்தேகமில்லாத சந்தோஷத்தோடு காது கேட்டுச் செல்லுங்கள். அறுவை சிகிச்சை செய்தும் குணம் ஆகாதவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும். ஆனால் காது கருவியை உபயோகித்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில்லை. காது கேளாதவர்களே காது கேட்கச் செய்யும்.

டாக்டர் சாமிகிரி சித்தர்
அரசு பதிவு பெற்ற ஓமியோபதி சித்த மருத்துவர்
காதொலி நிலைய சித்த மருத்துவமனை
401, கிராஸ்கட் ரோடு, காந்திபுரம்,
கோயம்புத்தூர்-641 012.
போன்: 234215 மருத்துவமனை, 473291 வீடு.

படித்தும் கேட்டும் பக்தி பரவசத்தில் ஈடுபடச்செய்யும் புத்தகங்கள் கேசட்டுகள்

14.03.1998 சனிக்கிழமை அன்று மாலை 6.51(வா) 8.36(க) 8.35(ம)-ல் வரும் காரடையான் நோன்பன்று விரதமிருந்து காமாக்ஷி அம்மனின் அருளைப் பெற

காமாக்ஷி பூஜை	ரூ.	2.50
ஸ்ரீ காமாக்ஷி அம்மன் விருத்தம்	ரூ.	2.50
சாவித்ரி பாடம்	ரூ.	4.00
சாவித்ரி உபாக்யானம் G.C.T. 6014	ரூ.	25.00

தபால் செலவு தனி

கிடைக்குமிடம்

தபாலில் பெற — நேரில் பெற

கிரி டிரேடிங் ஏஜென்ஸி

58.2, டிபாஸ்லி கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை – 4. போன்: 494 3551.

10, கபாலீசுவரர் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை – 4. போன்: 494 0376, 494 2530.

ஃபேக்ஸ் : 91-44-495 3821

அன்பே... அருளே...

-பரணீதரன்



இந்நூலைப் படிக்கும்பொழுது நான் எனது எனக்கு என்ற மாலைகள் விலகி படிப்பவர் எழுதியவர் என்ற மாயத் தோற்றங்கள் மறைந்து அன்பும், அருளும் ஓர் உருவான சத்தியப் பொருளான மஹா பெரியவாளின் விஸ்வரூப தரிசனம் மட்டுமே ஒவ்வொருவரின் மனதில் நிறைந்திருக்கும்.

விலை ரூ.35/-

பவானி புக் சென்டர்

19, ஸ்டேஷன் ரோடு,
சென்னை-33 போன்: 4838124

வெற்றிகரமான 41வது ஆண்டு சேவையில்...

உங்கள் குடும்ப சிக்கனத்திற்கு அவசியமானவை

கமலா ஸ்டோர்ஸ்

எவர் சில்வர் பாத்திரங்களே! திருமண காலங்களிலும் இதர குடும்ப விசேஷங்களிலும் உபயோகிக்கத்தக்க எல்லா ரக எவர்சில்வர் மற்றும் பித்தளை, செம்பு, அலுமினியம் பாத்திரங்கள் வாங்க சிறந்த இடம்:

கமலா ஸ்டோர்ஸ்

பாத்திர வியாபாரம்
16, காந்திபுரம், கோவை – 12.
போன்: 233489/233274

சேலம் தொகுதி நிலவரம்



• வாழப்பாடியின் தேர்தல் அலுவலகம்




• அழகாபுரம் பகுதி: கவரெல்லாம் சைக்கிள்

மூன்று காங்கிரஸ் போட்டியிடும் ஒரே தொகுதி சேலம். வாழப்பாடியும், தங்க பாலுவும் நேருக்கு நேர் மோத, மூப்பனார் மட்டும் போட்டியிட்டிருந்தால் மூன்று தமிழக காங்கிரஸ் தலைவர்கள் 'நேருக்கு நேருக்குநேர்' மோதியதாக இத்தொகுதி சரித்திரம் படைத்திருக்கும். ஏற்கனவே சுமார் 1,20,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற த.மா.கா. வேட்பாளர் தேவதாஸ், தம் தொகுதியைத் தக்க வைத்துக் கொள்ளுவாரா என்பதுதான் இங்கே இன்றைய முக்கிய எதிர்பார்ப்பு.


"வன்னியர் அதிகம் உள்ள பகுதி... அதனால் பா.ம.கவுடன் தோழமை கொண்டுள்ள வாழப்பாடியார்தான் ஜெயிப்பார்..." என்று சொல்லும் பா.ம.கக்காரர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்...

"சென்ற முறை தன்னந்தனியாய் 1,20,345 வோட்டுக்கள் வாங்கித் தோற்ற ரங்கராஜன் குமாரமங்கலம், தமது 'கவுண்டர்' இன ஓட்டை வாழப்பாடிதான் பெறுவார் எனக் கூறி விட்டதால், வெற்றி வாய்ப்பு அவருக்கே..." என்கிறார்கள் ஒரு சாரார்.

• மாரியப்பன்



• தேவதாஸ்



சேலம் ஃபைவ் கார்னரில் துவங்கி, தொப்பூர் வரையிலும், சேலம் டவுன், மல்லூர் வரையிலும் (சுமார் 80 கிலோ மீட்டர் தூரம்) நாம் வலம் வந்தபோது திரும்பின பக்கமெல்லாம் அ.தி.மு.க. கொடிகள்! ஜெ போஸ்டர்கள்... ஸ்பீக்கரில் எம்.ஜி.ஆர் படப்பாடல்களும், வாழப்பாடி விழிப்புணர்வு கேசட்டுமாய்க் காதை அடைக்கின்றன! இவை தவிர 'தண்ணியாய்' வேறு பணத்தை இறைத்திருக்கிறார் போலும் வாழப்பாடி!

வாழப்பாடியின் தேர்தல் அலுவலகம் பிரும்மாண்டமாய் ஓலையில் வேய்ந்திருந்தாலும் வழியில் எங்கும் கட் அவுட், அலங்கார வளைவு ஏதுமில்லை. தேர்தல் அலுவலகமே படு பிஸி. வாழப்பாடி, 'ஜெ' விசிட் நிமித்தம் அதை விட 'பிஸி' என்றனர்.

"அவரை சர்வ சாதாரணமா எப்பவுமே சந்திக்கலாம் சார்.. ஆனா முன்னாள் எம்.பி. (தேவதாஸ் த.மா.கா)வை நீங்க எப்பவுமே சந்திக்க முடியாது சார்...!"

– என்றார் ராஜீவ் காங்கிரஸ் தலைவர் ஒருவர்.


"வேலையெல்லாம் நல்லா நடக்குது சார்.. என்ன, சின்னத்துலதான் கொஞ்சம் குழப்பம்! பல கிராமங்கள்ல இப்ப இதுதான் ரெட்டை

வாழப்பாடி ஸ்டைல்:

ஆளுக்கொரு ஆப்பிள்!



• வாழப்பாடி



• தங்கபாலு



• வெங்கடாசலம்

இலை.. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா சின்னம்னு சொல்லி வோட்டுக் கேட்க வேண்டியதா யிருக்கு. அதுவும் போகப் போக சரியாயிடும் சார்... வீடு வீடாப் போய் வீட்டுக்கு ஒரு ஆப்பிள் கொடுத்து வோட்டுக் கேட்டாப் போச்சு...! (வாழப்பாடிக்கு ஆப்பிள் சின்னம்) அப்புறம் பாருங்க... சின்னத்தை ரொம்ப சுலபமா ஞாபகத்துல வச்சுக்குவாங்க!''

சின்னத்தைப் பரவலாய் அறிமுகப்படுத்த டன் கணக்கில் ஆப்பிள்கள் இறக்குமதிக்கு வெளி மாநிலங்களுக்கு ஆர்டர் கொடுத்திருப்ப தாகப் பரவலாய் பேச்சு...

''தங்கபாலு பெயரளவில்தான் தமிழ்நாடு தலைவர் – இ. காங்கிரஸுக்கு. இங்கே தொகுதி யில கத்தமா பூஜ்யம்.. எங்கள் அணி வெற்றி பெறுவது உறுதிங்கறதுக்கு முன்னாள் எம்.பி. தேவதாஸின் 'செயல்பாடு' ஒன்றே போதும்! (அத்தனை மோசம் என்கிறார்கள்!) ரெண்டு லட்சம் வோட்டுக்கு மேல எத்தனை வரும்ங் கறதுதான் எங்க கிட்டே உள்ள கேள்வி!'' என்று நம்மிடம் ஆணித்தரமாய்ப் பேசியவர் அ.தி.மு.க. மாவட்டச் செயலர் வெங்கடாசலம்.

'ஜெ' சேலம் விசிட் அடித்த அதே நேரத்தில் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் முன்னிலையில் 500 ம.தி.மு.கவினர் (கிச்சா பாளையம் சண்முகசுந்தரம் தலைமையில்) தி.மு.கவில் இணைய, சேலம், புதிய பேருந்து நிலையம் அருகில் செம கூட்டம்! இது பற்றி ம.தி.மு.க. பிரமுகர் குமாரிடம் கேட்டபோது,

''இது தேர்தல் ஸ்டண்ட் சார்... சண்முக சுந்தரம் பொறுப்புக் குழுவி லிருந்து எப்போதே நீக்கப் பட்டு விட்டார். இப்போது அவருடன் நிற்பது தி.மு.க. காரங்கதான். ம.தி.மு.க. அல்ல! தி.மு.கவினர் தி.மு.க.விலேயே இணைவது வேடிக்கையா யில்லை...?'' என்றார்.

நாம் சென்றபோது த.மா.கா கட்சி அலுவலகப் மிக்சர் கொறிப்பதும், டீ குடிப் பதுமாய், போஸ்டர் பிரிப்பது மாய், கார்களில் - ஜீப்களில் பறப்பதுமாய் ஏக களே பரம்! வேட்பாளர் தேவ தாஸை சந்திக்க முயன்ற போது, ''அவர் எங்கே... எப் படி... எப்போது இருப்பார்.. என்று உறுதியாய் சொல்ல முடியாது. வோட்டுக் கேட்டு ஸ்பீடாய் போய்க் கொண்டேயிருக்கிறார்...'' என்று சொன்னார்கள். எனினும் த.மா.கா. தலை வர் மாரியப்பனிடம் அவர் களின் வெற்றி வாய்ப்பு குறித்துக் கேட்டோம்.


''எங்களிடம் ஆறு எம். எல்.ஏ சார் (5 தி.மு.க. + 1 த.மா.கா.) அதோட ஒரு தி.மு.க. மேயர், தி.மு.க. அமைச்சர், ரஜினி, சரத் ரசிகர்கள், ஜனதாதள், மார்க்சிஸ்ட் பார்ட்டி... கூடுதலாய் நிறைய கட்சி கள்... இத்தனையும் இருக் கிற ஒரு அணியை எதிர்ப் பதற்கு யாருக்கும் ஒரு தெம்பு வேணும் சார்... நேற்றைய ஜெயலலிதா கூட்டம் எந்த மூலை? கலைஞரும் மூப்பனாரும் ஒரே மேடைக்கு வரட்டும்... பேசட்டும்.. நிலைமை என்னாகு துன்னு பாருங்க! எல்லாத்துக்கும் மேல.. ரஜினி!


• ஜெ: ஆப்பிளுக்கு வோட்டுப் போடுங்க...



லேட்டஸ்ட்


பொற்கோவில் மீது
படையெடுப்பு –
சோனியா கேட்டார்
மன்னிப்பு.





பாப்ரி மசூதி
தகர்ப்பு –
கேசரி கேட்டார்
மன்னிப்பு.

கூட்டணிக் கட்சிக்கு
இட ஒதுக்கீடு –
கருணாநிதி கேட்டார்
மன்னிப்பு.



பச்சை பாஷன்
போன வருஷம்
பிச்சை பாஷன்
இந்த வருஷம்.

— மூன்றி

பொறுத்திருந்து பாருங்க... தெரியும்!"

இ. காங்கிரஸின் தமிழ்நாடு தலைவர் கே.வி. தங்கபாலுவை சந்திக்க, அவர் தொகுதியின் நிலவரம் குறித்துக் கேட்க, அவர் வசிக்கும் அழகாபுரம் பகுதிக்குச் சென்றோம். 'கை'க்கு கடுகத்தனை விளம்பரம் கூடக் காணோம்! அத்தனையும் சைக்கிள், சைக்கிள்... ஆப்பிள் ஆப்பிள்! அவர் அந்தப் பகுதியில்தான் குடியிருக்கிறாரா என்று நம்முள் தோன்றிய சந்தேகத்தை அவர் வீட்டு முன் நின்றிருந்த கார்களும், கூட்டமும் 'பிரம்மாண்டமாய்' அவர் காம்பவுண்ட் சுவரில் வரையப்பட்ட 'கை'யுமே நிவர்த்தி செய்தன.

அவருக்கென்று பிரசாரத்திற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சில கார்கள் மட்டுமே... தன் தொகுதியிலேயே நிலைமை இப்படியென்றால் தமிழ்நாடு முழுக்க காங்கிரஸை எப்படிக் காப்பாற்றப் போகிறாரோ?

இதை அவரிடமே கேட்டபோது, "சோனியா மறுபடி பிரசாரத்துக்கு வரும்போது இங்கே வருவார் பாருங்கள்! அதற்குப்பின் சூடு பிடித்து விடும்" என்றார் நம்பிக்கையோடு.

"வாழப்பாடி போட்டியிடும் தொகுதியிலேயே நீங்களும் போட்டியிடுகிறீர்களே!"

"தவறு. அவர்தான் தொகுதி மாறி நிற்கிறார். இது என் சொந்த ஊர். நான் ஒரு தேசியக் கட்சியின் மாநிலத்தலைவர். எனக்கு இணையாக வாழப்பாடியாரை எப்படிச் சொல்லலாம்? அவர்கள் முதுகில் குத்திவிட்டு வெளியேறியவர்கள். சேலத்தின் வளர்ச்சிக்கு நான் செய்திருப்பது போல் வேறு யார் செய்திருக்கிறார்கள்?" என்று சூடாகக் கேட்டார்.

கொஞ்சம் பேச்சை மாற்றி, "த.மா.காவுக்கு ரஜினி, வாழப்பாடிக்கு ஜெயலலிதா, உங்களுக்கு சோனியா - இப்படி ஏன் எல்லாரும் யாரையாவது சார்ந்தே நிற்க வேண்டிய நிலைமை?" என்று கேட்டோம்.

"சோனியாவை இவர்களோடு ஒப்பிடாதீர்கள். அவருக்கு நிகர் யாருமில்லை. ஜெயலலிதா ஊழலில் திளைத்தவர். ஆனால் ரஜினியைக் குறை சொல்ல முடியாது. அவர் என் இனிய நண்பர்!" என்று போட்டார் ஒரு போடு!

ஆளுங்கட்சிக்கு நம் மக்களிடம் எப்படி வரவேற்பு இருக்கிறது என்கிற புலனாய்வில் இறங்கினோம்.

"பஸ்ஸுக்கு ரொம்பக் குறைச்சலாத்தானே ஏத்தியிருக்காரு நம்ம எம்.எல்.ஏ. இனி போட வேண்டியதுதான் அவருக்கு வோட்டு...!"

எடுத்த எடுப்பில் நக்கலாய்க் கேட்ட பெண்மணியிடம், இது எம்.பி. தேர்தல் என விளக்கப் போக,

"எந்தக் கருமாந்தரமா இருந்த எனக்கென்ன? எல்லாம் சேர்த்துத்தானே போட்டோம்.. அப்புறம் எப்படி வெங்காயம் இம்மாந்தூரம் ஏறுச்சு?" தொப்பூரில் நாம் வாங்கிக் கட்டிக் கொள்ளாத குறையாய் வந்ததுதான் பாக்கி.

அழகாபுரத்து டீக்கடைக்காரர் ஒருவர், "டீ தூள் என்ன விலை தெரியுமா சார்... ஒரு வருஷத்துல ஒத்தைக்கி ரெட்டையா மாறிப் போச்சு.. நாங்க ஒற்றைக்கு ரெட்டையா வோட்டுப் போட்டதனால வந்த வினை... இந்தத் தடவை எது மாறினாலும் ரெட்டை எலைக்கு (ஆப்பிள் என்பது கூடத் தெரியாமல்) வோட்டு மட்டும் மாறாது!"

'ஜெ' தம்முடைய தொகுதி விசிட்டின் போது ஒரேயொரு பொதுக்கூட்டத்தில் வெறும் 15 நிமிடம் மட்டும் பேசி, அதிலும் ஒரேயொரு வரி மட்டும் 'ஆப்பிள் சின்னத்தில் வாழப்பாடியாருக்கு வோட்டுப் போடுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்! அவர் சென்ற பின்னும் எம்.ஜி.ஆரின் பாட்டுப் போட்டு ரொம்ப நம்பிக்கையாய் ஜனங்களிடம் வோட்டுக் கேட்டுக் கொண்டிருந்தார் வாழப்பாடியார்.

ரஜினியை மலைபோல் நம்பி த.மா.கா... 100க்கு 100 சதம் சோனியாவை நம்பி தங்கபாலு... வாழப்பாடி மட்டும் 'இறைவோ இறையென்று' இறைத்துக் கொண்டிருக்கிறார், பணத்தை. அ.தி.மு.கவிற்கு, பி.ஜே.பிக்கு, பா.ம.கவுக்கு... ம.தி.மு.கவிற்கு என தொண்டர்களைத் தேடித் தேடி 'தண்ணி' பாய்கிறது. அது பயிருக்கு இறைப்பதா, விழலுக்கு இறைப்பதா என்பது இந்தவாரம் தெரிந்து விடும்! ●

கட்டுரை, படங்கள் : **ரோகிணி**

கொள்ளைக் கூட்டணியா ?
கொள்கைக் கூட்டணியா ?



ஆதரிப்பீர் ! தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்)

வாக்களிப்பீர் **சைக்கிள் சின்னம்**

தேர்தல் நாள் 16-2-98 22-2-98

த.மா.கா. முற்போக்கு கூட்டணியின் சின்னங்கள்

வெளியீடு : தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) சென்னை – 600 002.

வளமான தமிழகம் ! வலிமையான பாரதம் !

'அம்மா'வின் கனவு அம்போதானா?

வட்ட மேஜை:



பருத்தி சாகுபடியில் கொள்ளை லாபம் பெறலாம் என்ற பேராசையே. விவசாயிகள் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை அறிவிக்கவில்லை. இம் சரிக்கவில்லை. நாட்டில் பயிரிடு பைலஸ் நெல் பயிரிடு முறையில் முறையில் கிறார்கள்... (கட்டுரையில் வெளியாகியுள்ளதுபோல் பருத்தி அல்ல). தமிழ்நாட்டில் விவசாய இலாகா, பருத்தி சாகுபடியில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் நல்ல பயிற்சி அளித்துள்ளதால் இங்கே எந்த விபரீதமும் ஏற்படவில்லை. விவசாயிகள் இயற்கையோடு ஒன்றிய விவசாய முறைகளுக்கும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புக்கும் இனி கவனம் செலுத்த வேண்டும்.

சென்னை - 28, எஸ்.எஸ். நாகராஜன்.



கஞக்கு அளித்த முதல் பத்திரிகை கல்கிதான் என்று நினைக்கிறேன்!

திரப்பாளையம், பூங்கோதை கிருஷ்ணராஜ்.

✉ வடக்கே அடிக்கும் சோனியா அலையால் பி.ஜே.பி.க்குத் தடுமாற்றமென்றால்... ஏதேதோ கணக்குப் போட்டு அந்தக் கூட்டு கட்டியோடு 'அம்மா'வின் வைத்த கனவு அம்போதானா?!

சேலம்-2, சூர்யநிலா.

✉ சோனியாவின் தேர்தல் பிரசார அலை, பி.ஜே.பி.க்குக் கொஞ்சம் சீட்டுகளைக் குறைக்க வாமே தவிர, காங்கிரஸ் அதிக சீட் பெறலாம் என்பதெல்லாம் இயலாத காரியம்! இவர்களின் போட்டா போட்டியில் ஐக்கிய முன்னணியின் நிலைதான் ரொம்பவும் பரிதாபத்துக்குரியது.

சீர்காழி-10, ஆர். நடராஜன்.

ப்பூ...!

✉ நடிகை கௌசல்யாவின் வயதைப் பற்றிப் படித்ததும் காதுகளில் டன் கணக்கில் 'பூ' சுற்றப்பட்டு இருப்பதாக உணர்ந்தோம்! இந்த ஆண்டின் இணையற்ற ஜோக் இதுதான்!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக ராஜா.

கிண்டல் நயம்!

✉ 'காதலே நிம்மதி' விமர்சனம் கனகச்சிதம்! 'டாவுன்னா டாவு' நையாண்டி பாடலை செய்த விதம் நயம்.

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

நிறைவு

✉ நடுத்தரக் குடும்பத் தலைவனின் மனநிலையைப் பிரதிபலிப்பதாய் 'கார்த்திகேயன்' எழுதிய 'இடம்' சிறுகதை அமைந்திருந்தது. முடிவு நிறைவைத் தந்தது!

வலையபட்டி, எம். பாலசுப்பிரமணியன்.



✉ கல்கி(1.2.98)யில் வெளியான "பருத்தி விவசாயிகளின் தற்கொலை" என்ற ரிப்போர்ட் படித்தேன். இதில் எனது கருத்துக்கள் சரியாகத் தெரிவிக்கப்படவில்லை. பருத்தி விவசாயிகள் தற்கொலைக்கு முழுவதுமாக அரசைக் குறை கூற முடியாது. தற்கொலைக்கு முக்கிய காரணம்,



புரிந்தது!

✉ 'இரண்டு பெரிய கூட்டணிகளுக்கிடையே சிக்கிய எலி' என்று சோனியாகாந்தியை, வாழப்பாடியார் வர்ணித்ததிலிருந்தே அவர் என்றுமே நேரு குடும்ப விசுவாசி இல்லை... எம்.பி. பதவி விசுவாசிதான் என்பது புரிந்து விட்டது.

பெங்களூர், அ. சங்கரன்.

அம்போ!

✉ நேரடி ரிப்போர்ட் மூலம் வடமாநிலங்களின் தேர்தல் நிலவரங்களை வாசகர்

சவால் ஏன்?

✉ தேர்தல் முடியும்வரை இந்த காபந்து அரசால் ஒன்றும் செய்ய முடியாது என்று தெரியும். தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்து விட்டால் (?!) பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏற்படுத்திய துணிவுதான் சோனியாவின் சவாலுக்குக் காரணம் என்பதைத் தலையங்கம் புரிய வைத்து விட்டது!

வேலூர்-6, வே.த. கதிர்வேல்.

மகாத்மா Vs காந்தி!



ஃபெரோஸ் கான் - பிரபல இந்தி சினிமா டைரக்டர். இவரது சமீபத்திய படைப்பு மகாத்மா Vs காந்தி. சினிமா அல்ல; மேடை நாடகம்! இந்தி நாடகமல்ல; ஆங்கிலத்தில்.

சமீபத்தில் டில்லியில் இந்நாடகம் அரங்கேறிய போது, தலைநகரே ஒரு கணம் மூச்சடைத்துப் போனது! விஷயம் அப்படி.

ஒரு தேசத் தந்தையாக நாட்டுக்கு எத்தனையோ செய்திருக்கிற காந்தி, ஒரு குடும்பத் தலைவராக - குறிப்பாகத் தம் மகன்களுக்கு எப்படி ஒரு நல்ல அப்பாவாக இருக்கத் தவறி விட்டார் என்பதை வெகு உருக்கமாகக் காட்டியிருக்கிறார் ஃபெரோஸ்கான்.

நாடகத்தில் காந்தியாக நடித்திருக்கும் நஸ்ருதீன் ஷா, "இது ஒரு தேசத் தந்தை, தன் சொந்த மகனுக்குத் தந்தையாக இருப்பதில் கண்ட சிக்கல்களைச் சொல்கிறது" என்கிறார்.

'பிரகாஷ்னோ பாட்சாயோ' என்கிற பிரபலமான குஜராத்தி நாவலைத் தழுவி அஜித் தால்வி எழுதிய நாடகம் இது!

இதை நாலு முறை மாற்றி மாற்றி எழுதி, கருத்துச் சிதையாமல் ஆங்கிலத்துக்கு மாற்றி, வடிவமைப்பதில் வெகு சிரமப்பட்டார்களாம் டைரக்டர் ஃபெரோஸ்கானும் மொழி பெயர்த்த முகேஷ் ராஜத்யாக்ஷாவும்.

ஒரு சத்யாகிரகியாகவே தன் வாழ்க்கையைத் தொடங்கிய காந்தியின் மூத்த மகன் ஹரிலால், தடம் மாறிய கதையைக் கவித்துவமாகச் சொல்கிறது நாடகம். ஹரிலால் முஸ்லிமாக மதம் மாறினார். பிறகு ஆரிய சமாஜத்தில் சேர்ந்து, நிறைய அலைந்து, இனம் காண முடியாத பாலியல் நோயால் இறந்து போனார்.

"எல்லாவற்றையும் முயன்று பார்த்துவிட்டு நீங்கள் உங்கள் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள். இனி நான் முயன்று என் பாதையைத் தேர்ந்தெடுக்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தந்தையிடமிருந்து பிரிந்து போகிறார் ஹரி லால்.

"மழை மேகம் நிரம்பிய வானமே உங்கள் வசப்பட்டிருக்கிறது. அதில் ஒரு துளி நீரை உங்கள் மகனின் வாயில் தெளிப்பதில் என்ன கஷ்டம்?" என்று கேட்கிறார் ஹரிலால்.

தன் மேற்படிப்புக் கனவுகள் யாவும் கனவாகவே ஆகிவிட்டதற்குத் தந்தையைக் குற்றம்சாட்டுகிறார் ஹரிலால்.

மகனின் குமுறலில் உள்ள நியாயம் புரிந்தாலும் கணவரின் தேசநலன் நாட்டம் புரிந்து, அவரை எதிர்க்கத் துணியாத கஸ்தூரிபா, நாட்டுக்காகத் தன் தனி வாழ்க்கையின் சின்னச் சின்ன அபிலாஷைகளையும் தியாகம் செய்த மகாத்மா...

இந்த மூன்று பாத்திரங்களையே மையமாகக் கொண்டு சுழல்கிறது நாடகம்!

"என்னால் எத்தனையோ விஷயங்களைச் சமாளிக்க முடிந்தது. ஆனால் இரண்டு பேரை மட்டும் சமாளிக்க முடியவில்லையே" என்று ஜின்னாவையும் ஹரிலாலையும் பற்றி ஒரு காட்சியில் காந்தி குமுறுகிறார்!

ஒரு மேடை நாடகம் - திரைப்படம் அளவுக்குத் தொழில்நுட்ப ரீதியில் தரமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று பாராட்டுகிறார்கள் நாடகம் பார்த்தவர்கள்! கத்தி முனையில் நடப்பது போன்ற, பிரச்னைக்குரிய ஒரு விஷயத்தை பிரமிப்பூட்டக்கூடியவாக வத்தோடு கையாண்டிருக்கிறார் ஃபெரோஸ் கான்!

- ஜின்டு

நன்றி : வீக்

தமிழ்ப்புத்தக வரலாற்றில் வர்த்தமானன் பதிப்பகத்தின் மாபெரும் புரட்சி !
எவரும் துணியாத முயற்சி !! ஒரே தலைப்பில் இவ்வளவு பெரிய நூலினை இதுவரை யாருமே வெளியிட்டதில்லை, அதுவும் இவ்வளவு குறைவான விலையில் !!!

முன் வெளியீட்டுத் திட்டத்தின் மூலம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வியாச பாரதம், வால்மீகி இராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் ஆகிய நூல்கள் பெற்ற மாபெரும் வெற்றியினைத் தொடர்ந்து இப்போது இரண்டாம் பதிப்பாக - முன்வெளியீட்டு திட்டமாக வெளிவருகின்றன, பன்னிரு திருமுறைகள் !

அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களின்
பொருளாதரவுடன் மிகக் குறைந்த சலுகை விலையில் ! இலவச நூலுடன் !!

வழக்கம் போல்
சலுகை, சலுகை மேல் சலுகை, இலவச நூல் , தவணை முறை
ஆகிய அனைத்தும் உண்டு.

தேவாரம், திருவாசகம், திருமந்திரம், பெரியபுராணம்

முதலான நூல்கள் அடங்கிய

பன்னிரு திருமுறைகள்

மூலமும் உரையும் - 12000 பக்கங்களுக்கு மேல் - 24 தொகுதிகள்

விலை ரூ. 2500 . சலுகை விலை ரூ. 1000 மட்டுமே.

இச்சலுகை பிப்ரவரி 28 க்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே ! மேலும் முந்திக்கொண்டு பிப்ரவரி20க்குள் பதிவு செய்வோர்க்கு சலுகையுடன் 5 தொகுதிகளில் 1500 பக்கங்கள் கொண்ட **திருவிளையாடற் புராணம்** இலவசமாகக் கிடைக்கும்.

பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள்	ரூ. 2500.00
முன் வெளியீட்டுச் சலுகை	700.00
	ரூ.1800.00
இராமானந்தா அடிகளார் அறக்கட்டளையின் தலைவர் அருட்செல்வர். டாக்டர்.நா. மகாலிங்கம் அவர்கள் வழங்கும் உதவித் தொகை	800.00
சலுகை விலை	ரூ. 1000.00

பன்னிரு திருமுறை நூல்கள், ஆசிரியர்கள், பாடல்கள், தொகுதிகள், பக்கங்கள் - அட்டவணை					
திருமுறை எண்	நூல்கள்	ஆசிரியர்கள்	பாடல்கள்	தொகுதி	பக்கங்கள்
முதலாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1469	2	992
இரண்டாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1331	2	958
மூன்றாம் திருமுறை	தேவாரம்	திருஞானசம்பந்தர்	1348	2	1009
நான்காம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1069	1	827
ஐந்தாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	1015	1	648
ஆறாம் திருமுறை	தேவாரம்	திருநாவுக்கரசர்	980	1	734
ஏழாம் திருமுறை	தேவாரம்	சுந்தரர்	1026	1	750
எட்டாம் திருமுறை	திருவாசகம் திருக்கோவையார்	மாணிக்கவாசகர்	656 +400 = 1056	2	1375
ஒன்பதாம் திருமுறை	திருப்பல்லாண்டு	திருமாளிகைத் தேவர் உட்பட ஒன்பது பேர் பாடியவை	301	1	294
பத்தாம் திருமுறை	திருமந்திரம்	திருமூலர்	3047	3	1295
பதினொன்றாம் திருமுறை	தொகுப்பு	காரைக்கால் அம்மையார் உட்பட பன்னிருவர் பாடிய பாடல்கள்	1069	2	1068
பன்னிரண்டாம் திருமுறை	திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)	சேக்கிழார்	4286	6	2317

இந்தச் சலுகை விலையான ரூ. 1000த்தினை நான்கு தவணையில் செலுத்தலாம். அதாவது பிப்ரவரி 28க்குள் முதல் தவணை ரூ. 250 ; மார்ச் 28 க்குள் இரண்டாம் தவணை ரூ. 250 ; ஏப்ரல்28க்குள் மூன்றாம் தவணை ரூ. 250 ; மே 28க்குள் நான்காம் தவணை ரூ. 250 அனுப்புக.

ஒரே தவணையில் செலுத்துவோருக்கு சிறப்பு சலுகையாக ரூ.900 மட்டுமே!

ஜூன் பத்தாம் தேதியிலிருந்து, பணம் வந்த வரிசைப்படி நூல்கள் அனைத்தும், அதாவது பன்னிரு திருமுறைகள் 24 தொகுதிகள், திருவிளையாடற் புராணம் 5 தொகுதிகள் ஆக 29 தொகுதிகளையும் லாரி பார்சல் (A.B.T / TVS / POPULAR தங்கள் விருப்பப்படி) மூலம் அனுப்பப்படும். அனுப்பும் செலவினை மட்டும் லாரி அலுவலகத்தில் செலுத்தி புத்தகப் பார்சலை பெற்றுக் கொள்ளலாம். ஒரே தவணையில் (ரூ. 900) செலுத்துபவர்களுக்கும் இதன்படியே அனுப்பப்படும்.

நேரில் பதிவு செய்து நேரிலேயே பெற விரும்புவோர்க்கு : மேற் குறித்த மாதங்களில் எமது அலுவலகத்தில் பணம் செலுத்தி ரசீது பெற்றுச் செல்லலாம். ஜூன் மாதம் (சரியான தேதி ரசீதினில் குறித்து தரப்படும்) அனைத்து ரசீதுகளையும் கொண்டு வந்து கொடுத்து நூல்கள் அனைத்தையும் நேரிலேயே பெற்றுச் செல்லலாம். எமது அலுவலக நேரம் : 9 A.M. - 7 P.M. உணவு இடைவேளையின்றி. ஞாயிறு விடுமுறை.

மேலும் சில தகவல்கள் : 1. MO/DD அனுப்புவோருக்கு லாரி பார்சல் மூலம் தான் அனுப்பப்படும். நேரில் நூல்கள் தரப்பட மாட்டாது. 2. Cheque ஏற்கப்படமாட்டாது. 3. பிப்ரவரி 20 க்குள் பதிவு செய்வோர்க்கு மட்டுமே திருவிளையாடற் புராணம் (5 தொகுதிகள் இலவசம்)

இந்த அறிவிப்பில் அனைத்து விவரங்களும் தெளிவாக உள்ளதால், தொலைபேசியில் தொடர்பு கொள்வதையும் கடிதம் மூலம் விளக்கம் கேட்பதையும் தவிர்க்க வேண்டுகிறோம். இது எங்களைப் புத்தக வெளியீட்டிலே கவனம் செலுத்த பெரிதும் உதவும்.

பணம் அனுப்ப வேண்டிய முகவரி :

வர்த்தமானன் பதிப்பகம்
ஏ. ஆர். ஆர். வளாகம், 141, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், சென்னை - 17 ✆ 8257995.
பனகல் பார்க் அருகில்

நன்முயற்சிக்கு நல்வாழ்த்துக்கள்
அருட்செல்வர். டாக்டர். நா. மகாலிங்கம்,
தலைவர், இராமலிங்கர் அருட்பணி அறக்கட்டளை.

பத்மா ரவிசங்கர்

இன்று வாழ்வோம், போ!

பின்பற்றும் சிவப்பு அம்பாசடர்காரன் வெகு சாமர்த்தியசாலிதான். தக்க இடைவெளி விட்டிருந்தான். வாட்டசாட்டமாயிருந்தான். சிவப்புத் தொப்பி அணிந்திருந்தான். சிவப்பு அவனுக்குப் பிடிக்கும் போல! ஜீவாவின் ராங்சைடு சித்து வேலைகளுக்கு, திடீர் தகிடு தத்தங்களுக்குத் தயாராயிருந்தான்.

"வெள்ளை மாருதி வயர்லஸில் சிவப்பு அம்பாசடரை உஷார்படுத்தி இருக்க வேண்டும்! எப்படித்தான் மண் தூவுவது?" என்றான் குப்தா நர்வஸாக.

"இவனும் வெளிப்படையாகவே பின் தொடர்கிறான்! அதுதான் ஏன் என்று புரியவில்லை."

"அவர்கள் எதற்கும் துணிந்தவர்கள் ஜீவா! சரி. எப்படித் தவிர்ப்பது...?"

"தவிர்க்க வேண்டாம்!"

"என்னது!" என்று அதிர்ந்த குப்தா, "அப்புறம் எப்படி ஜீவா?"

"பின்பற்றட்டும்!" என்று சிரித்தான்.

"ஏய் ஜீவா! என்ன உன் திட்டம்?"

"நெருக்கமாக, வெளிப்படையாகப் பின் தொடர்கிறான். அதுவும் அலட்சிய மாக!"

"ஆம். அதுதான் திணறுகிறோம். இதுதான் அவன் பலம்."

"இல்லை. அதுதான் அவன் பலவீனம்! எப்போதும், மிதப்பவனை வீழ்த்துவது சுலபம்!"

ஜீவாவை வியப்புடன் பார்த்தான் குப்தா. சுற்றத் தொடங்கினான். வந்த வழியே திரும்பினான். கிளைச் சாலைகளில் புகுந்தான். வாலும் செல்வனே பின் தொடர்ந்தது. இருட்டக் காத்திருந்தான்.

பாண்டிச்சேரி அடைந்தபோது, இரவு ஏழு மணி. பிரதான சாலையில், அந்த ரெஸ்டாரெண்ட்.

விஸ்தாரமான பார்க்கிங். முனையில் நிறுத்தினான். சடாரென்று காரை எடுக்க ஏதுவாக. சிவப்பு அம்பாசடரும் பக்கத்திலேயே வந்து நின்றது.

கண்டு கொள்ளாமல், இருவரும் உள்ளே நுழைந்தார்கள். வெண் சீருடை வெயிட்டர்கள். மெனு பரிந்துரைக்கும் மகானுபாவர்கள். ஏசி. இசை. உணவகம் ஏறக்குறைய நிரம்பியிருந்தது.

ஒரு மூலைக்குப் போய் அமர்ந்தார்கள். சிவப்புத் தொப்பி, மற்றொரு மூலையில், அவனிடம் எந்தப் பாசாங்கும் இல்லை; இவர்களையே நேரடியாகப் பார்த்தபடி; முகத்தில் யாதொரு உணர்ச்சியும் தென்படவில்லை.

"தொப்பியுடன்தான் பிறந்தான் போல!"

"சொல்ல முடியாது. தொப்பியை எடுத்தால் மண்டைக்குள் பல் சக்கரமும், சர்க்யூட்டுகளுமாக இருக்கும்!"

உணவு வகைகள் வந்தன. பார்வை விலக்காத சிவப்புத் தொப்பி 'ரோபோ' உண்ணத் தொடங்கியதைக் கவனித்தான் ஜீவா.

"குப்தா, நிதானமாகச் சாப்பிடு. கை கழுவக் கூட எழுந்து கொள்ளாதே. நீ இங்கு இருக்கும் வரை சிவப்புத் தொப்பிக்குச் சந்தேகம் வராது!"

ஒரு வெயிட்டரிடம் விரல் உயர்த்தி அதீத அபிநயம் செய்து கேட்டான். தலைவா, பாத்ரூம் எங்கே? அங்கிருந்தே பின்புறம் வழி இருக்க வேண்டுமே... அப்படியே முன்புறம் வர வழி இருக்கிறதா....

இருந்தது! ரெஸ்டாரெண்ட் வாசல். ஜீவா முகத்தில் கவலை! கீழே, ஏதோ தேடினான். குனிந்த தலை. மெதுவான நடை. தேடும் கண்கள். எதிர்பார்த்தபடி, பார்க்கிங் பார்த்துக் கொள்ளும் பையன் அருகே வந்தான்.

"என்ன சார் தேடறீங்க?"

"என் பிரேஸ்லட் எங்கேயோ இங்கே நழுவி விழுந்திருக்கப்பா!"

"அடடா! நானும் சேர்ந்து தேடறேன் சார்."


"ம். தேடித் தந்தால் உனக்கு நூறு ரூபா பரிசு!"

"இதோ! நான் கண்டு பிடிச்சுடறேன் சார்!" என்றான் உற்சாகமாக.

"ஒன்று செய். நீ இங்கேயே தேடு. நான் பார்க்கிங் பக்கம் போய்த் தேடறேன். காரை உள்ளே கொண்டு வரும் போதும் கீழே விழுந் திருக்கலாம்."

பார்க்கிங். சில கார்கள். பல டூ வீலர்கள். விளக்குகளில் வர்ண அலங்காரம். அதனால் அதை எடுத்துப் பாக்கட்டில் போட்டுக் கொண் டான்.

மீதமிருந்த மூன்று டயர்களுக்கும் இதே 'காரியம்' செய்து வைத்தான். திருப்தியானான். ரெஸ்டாரெண்டிலிருந்து இவர்கள் கிளம்பு வார்கள். பின்னாலேயே வருவான் சிவப்புத் தொப்பி. வரட்டும்! கார் சக்கரங்களைப் பார்த் துத் திடுக்கிடுவான். திடுக்கிடட்டும்! காற்று அடித்துப் பார்ப்பான். பார்க்கட்டும்! விழிக் கட்டும்! ஒவ்வொரு டயராக உருப்படியாக்க முயற்சிக்க –



மழுப்பப்பட்ட ஒளி. நல்லதுதான்.

ஓசை வராமல்தான் செயல். இருந்தும்... தன் காரின் ஸ்டீரியோவைத் தட்டி விட்டான். டேஷ் போர்டிலிருந்து அதை எடுத்தான். அதை 'கீ' என்பார்கள்.

சிவப்பு அம்பாசடரின் ஒரு கதவை முயற் சித்துப் பார்த்தான். பூட்டியிருந்தது. முறுவலித் தான். தொப்பி உஷார்தான். சுற்றிலும் பார்த் தான். அருகே எவருமில்லை. தொலைவில், தேடும் பார்க்கிங் பையன். ஜீவாவும் தேடுவது போல் குனிந்தான். மேலும் குனிந்தான்.

சட்டென்று தரையில் தவழும் நிலைக்கு வந்தான். சிவப்புக் காரின் ஒரு டயரை அணுகி னான். அந்த கீயை நுழைத்துத் திருகினான். புஸ்ஸென்று வெளியேறும் காற்று... எவருக்குமே கேட்டிராது. ஸ்டீரியோவில் திடும் திடும் முழக் கம் வேறு. ட்யூபின் வால்வ் வெளியே வந்தது.

ஜீவா கார் எங்கோ பறந்திருக்கும்! ஒரு தேர்ந்த உளவாளியை மடக்குவது அவ்வளவு எளிதல்ல என் தொப்பி நண்பனே.. ஜீவா யார்? நிழல் நரிகளின் அரசன்! எவ்வளவு ஆசாமி களுக்கு எவ்வளவு விதங்களில் 'தண்ணி' காண் பித்திருக்கிறான்...! பல வருடங்களுக்குப் பிறகு, ஆக்ஷன்! ஆ... கூடும் சாகஸம்! ஏறும் பரவசம்! ஜீவாவுக்குள் ஜிவுஜிவுத்தது.

பிறகு, பையனை அழைத்தான். பிரேஸ்லெட் கிடைத்தது என்று பூர்த்தியாகும் பொய். இருந் தும், தேடிய உழைப்பிற்குச் சன்மானம். வந்த வழியே திரும்பினான். இன்னமும் உணவின் லயிப்பில் குப்தா; முறைப்பில் சிவப்புத் தொப்பி. ஜீவாவும் சாப்பிட்டான். சில நிமிடங் களில் –

சாலையில் சீராகச் செல்லும் ஜீவாவின்

''தலைவர் ஏன் கடுப்பா இருக்கார்?''
''பணமாலை போடறேன்னு சொல்லி யாரோ ஐந்நூறு ரூபா நோட்டை நிறைய ஜெராக்ஸ் எடுத்துப் போட்டுட்டாங்களாம்!''
— கி. திலகர்

கார்!

'தன் காரின் கதியைப் பார்த்ததும் அவன் முகம் போன போக்கைப் பார்த்தாயா?''

''ரசித்தேன் ஜீவா! குட் வொர்க்! தற்சமயம் வரை எதுவும் இல்லை. இனிமேல் வர வாய்ப்பே இல்லை. நிம்மதியாக இரவில் பயணம் செய்வோமா?''

''நான் தயார், குப்தா.''

''ஒதுங்கு. ஓய்வெடு. நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''வேண்டாம். எனக்குக் களைப்பில்லை. இன்னும் இரண்டு நாட்கள் கூட டிரைவ் செய்ய முடியும்.''

''அசுரன் நீ! உன் திறமைக்கு அந்த சவசவ வாழ்க்கை எதற்கு ஜீவா? விட்டு விடு. துடிப்பான என் சாகஸ உலகத்திற்கு வந்து விடு – நிரந்தமாகவே....''

மன ஆழம் தெரியாத புன்னகையை அவிழ்த்தான் ஜீவா.

''புன்னகைக்காதே! அவகாசம் எடுத்துக் கொள். நல்ல முடிவாகச் சொல்.''

சீரான வேகம். சில் காற்று. தண்ணென்ற நிலவு.

''உன் மனைவி பற்றிச் சொல். எங்கே சந்தித்தாய்?''

''சொல்கிறேன்!'' என்றான் மலர்ச்சியுடன். ஷீலா! ஷீலா! காதல் நினைவு களைப்பை விரட்டியது. ஷீலா! ஷீலா! என்னே அதன் சக்தி...! ஷீலா! ஷீலா! உற்சாகம் பிரவாகமாக.. ஷீலா..... ஷீலா...

நீமீல்! மிகச் சரியான குறி. ஜீவாவின் குறி என்று தவறியிருக்கிறது...? எங்கெங்கோ அலைந் தான். திரிந்தான். திட்டமிட்டான். பொறி வைத்தான். காத்திருந்தான். கடைசியில் இந்த மலைச் சரிவில் தன் துப்பாக்கிக்கு இலக்காகி வீழ்ந்தவன் பாகிஸ்தானின் ஏஸ் ஏஜண்ட்! இந்தியாவுக்கு ஒழிந்தது ஒரு நிரந்தரத் தலைவலி. தெரிந்ததும், ஆத்மா களிப்படைவார். மிகவும் திருப்தியான 'ஆபரேஷன்' இது. பெருமித முடன் ஜீவா பின் நகர... எதுவோ இடர... கால் வைத்த பாறை ஆட்டம் கண்டு நழுவ... அலறலுடன் ஜீவா கீழே விழ... அவன் உடம்பில் எதுவோ எதன் மீதோ மோத...

பல டன் எடையில் இமைகள். ஏதோ நெடி. எங்கோ லயமுடன் இனிய முணுமுணுப்பு. எதையும் அசைக்க முடியாமல் அசத்தலாக இருந்தது. உறுப்புகள் இருக்கிறதா. உணர்வும் இல்லையா... நான் ஜீவா, சரி. எங்கே நான்? கண்ணைத் திறந்தால் தெரிந்து விடும், எல்லாம். மெல்ல... மெல்ல...

முதலில், மசமசப்பாக இருந்தது. பின் ஒளிரும் மின்னல் போல ஏதோ உருவமாகியது. இறுதியில், அருகே இருந்தவளைப் பார்த்த ஜீவா –

''ஆ! நீங்களா! தேவதைக்கு இருபுறமும் இறக்கைகள் இருக்கும் என்பார்களே...''

குழறலாகச் சொல்லிவிட்டு மறுபடி கண்களை மூடிக் கொண்டான் ஜீவா. 'க்ளுக்' என்ற வெட்கச் சிரிப்பு. 'கடவுளுக்கு நன்றி!' என்று நெகிழ்ந்த தேன் குரல். முற்றிலும் புதிய சக்தி அவனுள் ஊறும் அதிசயம்! இதுவரை அறியாத பரவசம்! மறுபடி கண் திறந்தான்.

''மயக்கத்திலிருந்து விடுபட்டதுமே எப்படி அந்தக் கிண்டல் சாத்தியமாயிற்று!''

''கிண்டல் இல்லை! இறக்கை இல்லையே என்று அரை நினைவில் புரியாமல் சொன்னது உண்மைதான். ஆனால், இப்போது என் முழு நினைவும் உன்னை தேவதை என்றே உறுதிப் படுத்துகிறதே மிஸ்...''

''ஷீலா!'' என்றாள் முகத்தில் மின்சாரம் ஏற.

அவள் சென்றதும், தலைமை நர்ஸை அழைத்து விசாரித்தான்.

''ஷீலாவா தம்பி... தங்கமான பெண்! இந்த ஹாஸ்பிடலில்தான் அக்கவுண்ட்ஸ் செக்ஷனில் கிளார்க். வேலை முடிந்ததும், மாலை தவறாமல் வார்டுகளுக்கு வந்து பேஷண்ட்டுகள் குணமடையப் பிரார்த்தனை செய்வாள் ஷீலா! நீங்கள் நினைவின்றிக் கிடந்த நாட்களில் நேரம் கிடைத்த போதெல்லாம் வந்து கவனித்துக் கொண்டாள். பிரதிபலன் பாராது மிக்க விருப்பமுடன் வலிய உதவும் குணம். இக்காலத்தில், ஷீலா மாதிரி பார்ப்பது அரிது!''

ஜீவா நெகிழ்ந்தான். எங்கோ பிறந்தான். எங்கெங்கோ வளர்ந்தான். ஏதோ வாழ்ந்தான். உளவில் உழன்றான். விபத்தில் வீழ்ந்தான். விளைந்த அரிய தேவதை சந்திப்பு! எங்கே போய், எப்படி அறிமுகம்! கடவுளின் உன்னத கணக்குகளும், வழி முறைகளும்... இறைவா, உன் ஜீவாவின் நெஞ்சார்ந்த வந்தனம் என்றும்...

அடுத்த நாள் மாலையும் ஷீலா வந்தாள். வந்ததும் பிரார்த்தனை. ஜீவாவுக்கு உலகமே வண்ணமயமாகி விட்டது போலிருந்தது. ஏனோ குதிக்க வேண்டும் போலிருந்தது. சலைன் ட்யூப்கள் சுகம். மருந்து நெடி மிக



இனிமை. உத்தரத்தில் ஒட்டடை எவ்வளவு அழகு. காதலுக்கு எவ்வளவு சக்தி! பார்ப்பவை யாவும் மகிழ்ச்சியூட்ட....

"யப்பா! எவ்வளவு நேரம் பிரார்த்தனை?"

"பிரார்த்தனை என்றால் அவ்வளவு அலட்சியமா? நினைவின்றி எவ்வளவு நாட்கள்..! சிக்கலான மூன்று ஆப்பரேஷன்கள்! திறப்பீர்களா என்றாகி விட்டது. கடவுள்தான் உங்களைக் காப்பாற்றினார்!"

"அலட்சியம் ஏதும் இல்லை ஷீலா! உன்னுடன் பேச என்னுள் எழும் தவிப்பு. தினம் மாலைப் பொழுதிற்காகவே உயிரை வைத்திருப்பது போல் உணர்வு!"

"அது ஏன் ஜீவா!"

"அது...."

மறுநாள் மாலை.

"என்ன கண் மூடி இருக்கிறீர்கள்? வலிக்கிறதா?"

கண் திறந்த ஜீவா, "பிரார்த்தனை!"

"ஏன்? தாங்க முடியாத வலியா?"

இல்லையென்று தலையசைத்த ஜீவா, "வாழ்வில் முதல் முறையாகப் பிரார்த்தனை செய்தேன்! எல்லோருக்காகவும் பிரார்த்திக்கும் ஷீலாவுக்காக!" என்றான்.

ஷீலா உருகினாள்.

ஒவ்வொரு நாளும் வந்தாள். சில நாட்களில், கட்டுக்களைப் பிரித்தார்கள். காதலில் கட்டுண்ட உணர்வு. அவனால் நடக்கவே முடியவில்லை! முடமாகி விட்டானா... ஜீவா அதிர்ந்திருந்தான்.

"உளவு வேலை என்றில்லை. இனி எதற்குமே நான் லாயக்கில்லை ஷீலா!"

"நம்பிக்கை இழக்காதீர்கள் ஜீவா. உங்களால் முடியும்! எதுவும் முடியும்! ஆதரவாக நான் இருப்பேன்..."

"எப்போதும் இருப்பாயா? வாழ்க்கை முழுதும்...?" ஷீலா சொல்லப் போகும் பதிலில் தன் உயிர் என்பது போலப் பார்த்தான்...

ஜீவா நடக்கத் தொடங்கினான். மெல்ல... மெல்ல... ஷீலா என்ற தங்கப் பெண் உதவியுடன் விரைவில் ஊன்று கோலை விடுத்தான். உறுதியான முன்னேற்றம் உடல் நிலையில். காதலிலும்...

"இப்போதும் தினம் இரவு விரைவிலேயே தூங்கச் செல்கிறேன்!"

"தூக்கம் மீது அவ்வளவு ப்ரியமா?"

"இல்லை. ப்ரியம் உன் மீதுதான்! தூங்கியதும் கனவு! கனவிலும் ஷீலா!"

"என் விஷயம் வேறு! உறக்கம் வந்தால் தானே! காதல் தவிப்பு! எப்போது விடியும் என்று அடித்துக் கொள்ளும் ஜீவா!"

இப்போது ஜீவாவால் மெதுவாக நடக்க முடிந்தது. இருந்தும், தாங்கி நடக்கும் துணை நாடும் பாசாங்கு அவனிடம்!

"ஜீவா! நடக்க முடிந்தும், ஏன் என் தோள் பற்றுகிறீர்கள்?"

"ஏன்? பிடிக்கவில்லையா?"

"பிடித்திருக்கிறது! ஆனால், வலிக்கிறது ஜீவா! எவ்வளவு வலு!"

"சாரி ஷீலா! நேற்று வரை முரட்டு உளவாளிதானே...! விரைவில் சரியாக வரும்... எல்லாம்..."

அதிகாலை திருச்சி போய்ச் சேர்ந்தார்கள். தொந்தரவு ஏதும் இல்லாத நிம்மதியான பயணம். குப்தா முகத்தில் திருப்தி. லாட்ஜில் அறை எடுத்தார்கள். மகிழ்ச்சியுடன் இரண்டிரண்டு படிகளாகத் தாவி மாடியில் மறைந்தான் குப்தா. நிதானமாகச் சென்றான் ஜீவா. மாடிப் படிகளில் கால் வைத்தபோது –

பக்கவாட்டிலிருந்து திடுமென்று ஒரு தாடிக்காரன் வெளிப்பட்டான்!

"ஜீவா!" என்றான் கிசுகிசுப்பாக.

நின்றான். அழைத்தவனை உற்றுப் பார்த்தான். நடுத்தர வயதிருக்கும். ஒட்டுத் தாடி என்பது புரிந்தது.

"உன்னிடம் பேச வேண்டும்!"

"பேசு!"

"இங்கே இல்லை!"

"எங்கே?"

தாடிக்காரன் இடத்தைச் சொன்னான். காலை எட்டு என்று நேரம் குறித்தான். பின் –

"இது ரகசியம். உன் நண்பனுக்குக் கூடத் தெரியாமல் நீ தனியாக வர வேண்டும் ஜீவா!"

"உன்னை எதற்கு சந்திக்க வேண்டும்?"

தாடிக்காரன் பதில் சொல்லாமல் அவசரமாகக் கிளம்பினான்; ஏறக்குறைய ஓடினான்; பின்புற வழியே சடுதியில் மறைந்தான்!

யார் அவன்? எதுக்கு 'ஹஷ் ஹஷ்' மர்மம்? ஏன் ஒட்டுத்தாடி? ஓடிச் சென்றவனின் பின் பாக்கட்டில் உப்பலான உறுத்தல், துப்பாக்கி என்பது புரிந்தது. தனியாக வர வேண்டுமாம்!

வருகிறேன்....

(தொடரும்)

ஆனந்தமான விஷயம்! வந்துவிட்டது, ஐடிபிஐ ஃப்ளெக்ஸிபாண்ட்ஸ் 3ல் முதலீடு செய்யும் வாய்ப்பு.

ஐடிபிஐ இன்ஃப்ராஸ்ட்ரக்ச்சர் பாண்ட் '98

ஒரு வரி சேமிப்புத் திட்டம்

பிரிவு 88-ன் கீழ் வரிச்சலுகை மற்றும் ஆண்டிற்கு 12.5% வட்டி. பிரிவு 54EA & பிரிவு 54EB-ன் கீழ் மூலதன ஆதாய வரிச்சலுகைகளும் உண்டு.

முதிர்வு : 7 ஆண்டுகள். 3வது மற்றும் 5வது ஆண்டு இறுதியில் திருப்பிப்பெறும் தேர்வு (திருப்பிப்பெறும் தேர்வை 3வது ஆண்டு இறுதியில் அமல்படுத்தினால் வட்டி ஆண்டிற்கு 12.25% என்றவாறு வழங்கப்படும்). குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ குரோயிங் இன்டரெஸ்ட் பாண்ட் '98*

முதல் ஆண்டிற்காக வழங்கப்படும் ஆண்டிற்கான 11% வட்டி ஐந்தாவது வருடத்தில் ஆண்டிற்கு 18%ஆக வளருகிறது.

முதிர்வு : 5 ஆண்டுகள். (எந்த ஒரு ஆண்டு இறுதியிலும் திட்டத்திலிருந்து விலகும் தேர்வு). ஆரம்பத்தில் வெறும் ஒரு ஆண்டிற்காக முதலீடு செய்யுங்கள் ஆண்டிற்கு 11% வட்டி விகிதத்தில். நீங்கள் முதலீட்டை மேலும் தொடர்ந்தால் 2வது ஆண்டில் (11.50%), 3வது ஆண்டில் (13%) 4வது ஆண்டில் (15.50%) மற்றும் 5வது ஆண்டில் (18%) அதிகப்படியான வட்டியைப் பெறுகிறீர்கள். குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ டீப் டிஸ்கவுண்ட் பாண்ட் '98

ரூ. 12,750 முதலீடு 30 ஆண்டுகளில் 5 இலட்சம் ஆகிறது

இன்று ரூ. 12,750 முதலீடு செய்யுங்கள். 30 ஆண்டு களுக்குப் பிறகு ரூ. 5 இலட்சத்தைப் பெறுங்கள் (முடிவும் 13%). குறைந்த காலவரைக்கு முதலீடு செய்வதையும் நீங்கள் திட்டமிடலாம். (திருப்பித்தரும்/திரும்ப அழைக்கும் தேர்வை ஒவ்வொரு 5 வருட காலவரை இறுதியில் அமல் படுத்தலாம்.)

ஐடிபிஐ ரெகுலர் இன்கம் பாண்ட் '98*

வருடாந்தர வட்டி

ஆண்டிற்கு 13.25%

தேர்ந்தெடுங்கள் இவற்றிலிருந்து ஒன்றை (அ) ஆண்டிற்கு 12.50% மாதாந்தர வட்டி அல்லது (ஆ) ஆண்டிற்கு 13.25% வருடாந்தர வட்டி. முதிர்வு : 5 ஆண்டுகள். அனைத்து ஐந்து ஆண்டுகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட வட்டி விகிதம். குறைந்தபட்ச முதலீடு ரூ. 5000.

ஐடிபிஐ ஃப்ளெக்ஸிபாண்ட்ஸ் 3

பாதுகாப்பின் முத்திரை

அன்செக்யூர்ட் பாண்டுகளின் பப்ளிக் இஷ்யூ மூலமாக செய்யப்படும் மொத்தத் திரட்டு ரூ. 750 கோடிகள். கூடுதலாகப் பெறும் ரூ. 750 கோடிகளை வைத்துக் கொள்ளும் தேர்வு.

*இங்கு கொடுக்கப்பட்டுள்ள விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்ட விகிதங்களும் (விருத்தியடைந்த) மற்றும் டிசம்பர் 24, 1997 தேதியிடப்பட்ட வழங்கு பத்திரத்தின் / விண்ணப்பப் படிவத்தின் (படிவம் 2A) ஒரு பகுதியாகக் கருதப்படும் மற்றும் அங்கு கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களுக்குப் பதிலாகத்தக விளங்கும்.

பொறுப்பு மதிப்பீடு : கேர் மற்றும் க்ரிஸில் நிறுவனங்களின் AAA விவரங்களுக்கு வழங்கு பத்திரத்தைப் பார்க்கவும்	இஷ்யூ நடப்பிலிருக்கிறது இஷ்யூ 18 ஃபிப்ரவரி, 1998 அன்று முடிவுறுகிறது.

அனைத்து பாண்டுகளுக்கு உரித்தான பொதுவான அம்சம் : சிடிஎடி இல்லாததின் அதிகரித்த ... அனைத்து பாண்டுகளுக்கான வட்டி பிரிவு 80L ன் கீழ் ... வசதி உண்டு. பாண்டுகளை அடமானம் வைப்பதன் மூலம் கடன் வசதி பெறலாம்.

இடர்ப்பு நேர்வுக்குரிய நிலைமைகள் : கடன் இடர்ப்பு ஐடிபிஐ நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கியவர்கள் கடன்களைத் திருப்பி அளிக்காவிட்டால் நிறுவனம் பாதிப்பிற்கு உள்ளாகும். ... **வட்டி விகிதத்தால் இடர்ப்பு** ... **தளர்த்தப்பட்ட நிலைமைகளினால் இடர்ப்பு** ... **போட்டியினால் இடர்ப்பு** ... **இடைப்பட்டவர்களை தவிர்ப்பதால் ஏற்படும் இடர்ப்பு** ... **நடப்பிலான பொறுப்புகள்.** மார்ச் 31, 1997 அன்று ஐடிபிஐ நிறுவனத்தின் நடப்பிலான பொறுப்புகள் ரூ. 4579.57 கோடிகளாகும். ... **டிபென்ச்சர் மீட்பு ஒதுக்கீடு.** ... **பாண்டுகளின் தன்மை.** ... **முந்திய இஷ்யூக்கள்.** ஃப்ளெக்ஸி பாண்டுகள் (சீரிஸ் 2) பற்றிய தீர்வு காணாத கோரிக்கைகள் (31/10/97 அன்று) 53, ஃப்ளெக்ஸி பாண்டுகள் (சீரிஸ் 1) பற்றிய தீர்வு காணாத கோரிக்கைகள் (30/9/97 அன்று) 47 மற்றும் ... (31/10/97 அன்று) 10. **வரிப் பொறுப்புகள்.** வரிவிதிப்பு ஆண்டுகளான 1992-93, 1993-94 மற்றும் 1994-95க்கான வருமான வரி மதிப்புகள் தீர்வு காணாத நிலையில் உள்ளன. ... ரூ. 31.68 கோடிக்கு எதிராக ரூ. 28.35 கோடிகள் இவ்வாறாக ... மீதியுள்ள ரூ. 3.33 கோடிகளும் இவ்வாறாக விரைவில் ... என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Lead Managers to the Issue: SBI Capital Markets Ltd. 202, Maker Tower E, Cuffe Parade, Mumbai - 400005. Tel: (022) 218 9166. Fax: (022) 218 8332. **DSP Merrill Lynch Ltd.** Tulsiani Chambers, West Wing, 212 Backbay Reclamation, Mumbai - 400 021. Tel: (022) 204 8654. Fax: (022) 204 8518. **Enam Financial Consultants Pvt. Ltd.** 24, B. D. Rajabahadur Compound, Ambalal Doshi Marg, Fort, Mumbai - 400 023. Tel: (022) 265 0172. Fax: (022) 265 3193. **J. M. Financial & Investment Consultancy Services Ltd.** 141, Maker Chambers III, Nariman Point, Mumbai - 400 021. Tel: (022) 283 1237. Fax: (022) 204 2137. **Kotak Mahindra Capital Company (Company with Unlimited Liability)** Bakhtawar, 1st Floor, 229 Nariman Point, Mumbai - 400 021. Tel: (022) 282 6655. Fax: (022) 282 6632. **Principal Mktg. Co-ordinator: IDBI Capital Market Services Ltd. (A Wholly Owned Subsidiary of IDBI)** IDBI Tower, 13th Floor, Cuffe Parade, Mumbai - 400 005. Tel: (022) 216 0180. Fax: (022) 215 4256. **Registrars to the Issue: Investor Services of India Ltd.** Tenlex, Business Service Centre, Saki Vihar Road, Andheri (E), Mumbai - 400 072. Tel: (022) 850 1338. Fax: (022) 850 9201. **Karvy Consultants Ltd.** Unit - IDBI Flexi-3, 46, Avenue 4, Street No. 1, Banjara Hills, Hyderabad - 500 034. Tel: (040) 331 2454. Fax: (040) 311 1968. **Trustee to Bondholders: Bank Of Maharashtra** "Lokmangal", 1501, Shivaji Nagar, Pune 411 005. Tel: (0212) 322728. Fax: (0212) 323924.

H.O.: Industrial Development Bank of India. IDBI Tower, Cuffe Parade, Mumbai - 400 005 Tel: (022) 218 9117, FAX: (022) 218 1294 Grams: INDBANKIND

கல்கி கலெக்ஷன்



பொன்னியின் செல்வன்

பதினோறாம் அத்தியாயம்

திடும்பிரவேசம்

இந்நாளில் கும்பகோணம் என்ற பெயரால் ஆங்கில அகராதியிலேகூட இடம் பெற்றிருக்கும் நகரம், நம்முடைய கதை நடந்த காலத்தில் குடந்தை என்றும் குடமூக்கு என்றும் வழங்கப்பட்டு வந்தது. புண்ணிய ஸ்தல மகிமையையன்றி, 'குடந்தை சோதிட'ராலும் அது புகழ்பெற்றிருந்தது.

குடந்தைக்குச் சற்றுத் தூரத்தில் தென் மேற்குத் திசையில் சோழர்களின் இடைக் காலத் தலைநகரமான **பழையாறை**, வானை அளாவிய அரண்மனை மாடங்

அமரர் கல்கி

களுடனும் ஆலய கோபுரங்களுடனும் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

பழையாறை அரண்மனைகளில் வசித்த அரச குலத்தினர் அனைவருடைய ஜாதகங்களையும் குடந்தை சோதிடர் சேகரித்து வைத்திருந்தார். அப்படிச் சேகரித்து வைத்திருந்த ஜாதகங்களைப் புரட்டித்தான் கொடும்பாளூர் இளவரசி **வானதியின்** ஜாதகத்தை அவர் கண்டெடுத்தார்.

சிறிது நேரம் ஜாதகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பிறகு, சோதிடர் வானதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். திரும்ப ஜாதகத்தைப் பார்த்தார். இப்படி மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாரே தவிர, வாயைத் திறந்து ஒன்றும் சொல்லுகிற வழியைக் காணவில்லை.

"என்ன, ஜோசியரே! ஏதாவது சொல்லப் போகிறீரா, இல்லையா?'' என்று குந்தவை தேவி கேட்டாள்.

''தாயே! என்னத்தைச் சொல்வது? எப்படிச் சொல்வது? முன் ஒரு தடவை தற்செயலாக இந்த ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன். என்னாலேயே நம்ப முடியவில்லை. இப்படியும் இருக்க முடியுமா என்று சந்தேகப்பட்டு வைத்து விட்டேன். இப்போது இந்தப் பெண்ணின் திருமுகத்தையும் இந்த ஜாதகத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது, திகைக்க வேண்டியிருக்கிறது!''

"திகையும்! திகையும்! போதுமானவரை திகைத்துவிட்டுப் பிறகு ஏதாவது குறிப்பாகச் சொல்லும்!''

''இது மிகவும் அதிர்ஷ்ட ஜாதகம் தாயே! தாங்கள் எதுவும் வித்தியாசமாக நினைத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று சொல்கிறேன். தங்களுடைய ஜாதகத்தைக் காட்டிலும் கூட, இது ஒருபடி மேலானது. இம்மாதிரி அதிர்ஷ்ட ஜாதகத்தை நான் இதுவரை பார்த்ததேயில்லை!''

குந்தவை புன்னகை புரிந்தாள். வானதியோ வெட்கப்பட்டவளாய், "அக்கா! இந்த துரதிர்ஷ்டக்காரியைப் போய் இவர் உலகத்திலேயே இல்லாத அதிர்ஷ்டக்காரி என்கிறாரே! இப்படித்தான் இருக்கும் இவர் சொல்லுவதெல்லாம்!" என்றாள்.

"அம்மா! என்ன சொன்னீர்கள்? நான் சொல்வது தவறானால் என்னுடைய தொழிலையே விட்டுவிடுகிறேன்'' என்றார் சோதிடர்.

"வேண்டாம், சோதிடரே! வேண்டாம். அப்படியெல்லாம் செய்து விடாதீர். ஏதோ நாலுபேருக்கு நல்ல வார்த்தையாகச் சொல்லிக் கொண்டிரும். ஆனால் வெறும்னே பொதுப்படையாகச் சொல்கிறீரே தவிர, குறிப்பாக ஒன்றும் சொல்லவில்லையே? அதனாலேதான் இவள் சந்தேகப்படுகிறாள்!''

''குறிப்பாகச் சொல்ல வேண்டுமா? இதோ சொல்லுகிறேன்! நாலு மாதத்திற்கு முன்னால் அபசகுனம் மாதிரி தோன்றக் கூடிய ஒரு காரியம் நடந்தது. ஏதோ ஒன்று தவறி விழுந்தது. ஆனால் அது உண்மையில் அபசகுனம் இல்லை. அதிலிருந்துதான் இந்தக் கோமகளுக்கு எல்லா அதிர்ஷ்டங்களும் வரப்போகின்றன!''

"வானதி! நான் என்னடி சொன்னேன்? பார்த்தாயா?" என்றாள் குந்தவை தேவி.

''முன்னாலேயே இவருக்கு நீங்கள் சொல்லி வைத்திருக்கிறீர்கள் போலிருக்கிறது!" என்றாள் வானதி.

"பார்த்தீரா சோதிடரே, இந்தப் பெண்ணின் பேச்சை!"

"பேசட்டும் தாயே! இப்போது எது வேண்டுமானாலும் பேசட்டும்! நாளைக்கு மன்னர் மன்னனை மணந்து கொண்டு...''

''அப்படிச் சொல்லுங்கள். இளம் பெண்களிடம் கலியாணத்தைப் பற்றிப் பேசினால் அல்லவா அவர்கள் சந்தோஷமாகக் கேட்டுக் கொண்டிருப்பார்கள்?...''

''அதைத்தான் நானும் சொல்ல வருகிறேன், தாயே! திடுதிப்பென்று கலியாணப் பேச்சை எடுக்கக் கூடாது அல்லவா? எடுத்தால், இந்தக் கிழவனுக்குப் புத்தி கெட்டுவிட்டது'' என்று சொல்லி விடுவார்கள்!"

''இவளுக்குப் புருஷன் எங்கிருந்து வருவான்? எப்போது வருவான்? அவனுக்கு என்ன அடையாளம்? – ஜாதகத்திலிருந்து இதையெல்லாம் சொல்ல முடியுமா, சோதிடரே!''

"ஆகா! சொல்ல முடியாமல் என்ன? நன்றாய்ச் சொல்ல முடியும்!" என்று கூறிவிட்டு, சோதிடர் ஜாதகத்தை மறுபடியும் கவனித்துப் பார்த்தார். கவனித்துப் பார்த்

தாரோ, அல்லது கவனித்துப் பார்ப்பது போல் அவர் பாசாங்குதான் செய்தாரோ நமக்குத் தெரியாது.

பிறகு, தலைநிமிர்ந்து நோக்கி, "அம்மணி! இந்த இளவரசிக்குக் கணவன் வெகு தூரத்திலிருந்து வரவேண்டியதில்லை. சமீபத்தில் உள்ளவன்தான். ஆயினும் அந்த வீராதி வீரன் இப்போது இந்நாட்டில் இல்லை. கடல் கடந்து சென்றிருக்கிறான்!" என்றார்



சோதிடர்.

இதைக் கேட்டதும் குந்தவை, வானதியைப் பார்த்தாள். வானதியின் உள்ளத்தில் பொங்கிய உவகையை அவள் அடக்கிக் கொள்ளப் பார்த்தும் முடியவில்லை. முகம் காட்டி விட்டது.

"அப்புறம்? அவன் யார்? என்ன குலம்? தெரிந்துகொள்ள ஏதாவது அடையாளம் உண்டா?"

"நன்றாக உண்டு. இந்தப் பெண்ணை மணந்து கொள்ளும் பாக்கியசாலியின் திருக்கரங்களில் சங்கு – சக்கர ரேகை இருக்கும், அம்மா!"

மீண்டும் குந்தவை வானதியைப் பார்த்தாள். வானதியின் முகம் கவிந்து பூமியைப் பார்த்துக்கொண்டிருந்தது.

"அப்படியானால், இவளுடைய கைகளிலும் ஏதேனும் அடையாள ரேகை இல்லாமற்போகுமா?" என்றாள் குந்தவைப் பிராட்டி.

"தாயே! இவளுடைய பாதங்களை எப்போதாவது தாங்கள் பார்த்ததுண்டா?..."

"ஏன் சோதிடரே! இது என்ன வார்த்தை! இவளுடைய காலைப் பிடிக்கும்படி என்னைச் சொல்கிறீரா?"

"இல்லை; அப்படியெல்லாம் நான் சொல்லவில்லை. ஆனால் ஒருகாலத்தில் ஆயிரமாயிரம் மன்னர்குலப் பெண்கள், பட்ட மகிஷிகள், அரசிளங்குமரிகள், ராணிகள், மகாராணிகள், இந்தப் பெண்ணரசியின் பாதங்களைத் தொடும் பாக்கியத்துக்காகத் தவம் கிடப்பார்கள் தாயே!"

"அக்கா! இந்தக் கிழவர் என்னைப் பரிகாசம் செய்கிறார். இதற்காகவா என்னை இங்கே அழைத்து வந்தீர்கள்? எழுந்திருங்கள் போகலாம்!" என்று உண்மையாகவே பொங்கிவந்த கோபத்துடன் கூறினாள் வானதி.

"நீ என்னத்துக்குப் பதறுகிறாயடி, பெண்ணே! அவர் ஏதாவது சொல்லிக் கொண்டு போகட்டும்..."

"நான் ஏதாவது சொல்லி விடவில்லை. எல்லாம் இந்த ஜாதகத்தில் குறிப்பிட்டிருப்பதைத்தான் சொல்லுகிறேன். 'பாத தாமரை' என்று ஏதோ கவிகள் உபசாரமாக வர்ணிப்பார்கள். இந்தப் பெண்ணின் உள்ளங்காலைச் சிறிது காட்டச் சொல்லுங்கள். அதில் செந்தாமரை இதழ்களின் ரேகை கட்டாயம் இருக்கும்."

"போதும்! சோதிடரே! இவளைப் பற்றி இன்னும் ஏதாவது சொன்னால் என்னைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்பட்டு விடுவாள். இவளுக்கு வாய்க்கப் போகும் கணவனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்...."

"ஆகா! சொல்கிறேன்! இவளைக் கைப்பிடிக்கும் பாக்கியவான் வீராதி வீரனாயிருப்பான்! நூறு நூறு போர்க்களங்களில் முன்னணியில் நின்று வாகை மாலை சூடுவான். மன்னாதி மன்ன

னாயிருப்பான்; ஆயிரமாயிரம் அரசர்கள் போற்றச் சக்கரவர்த்தியின் சிம்மாசனத்தில் பன்னெடுங் காலம் வீற்றிருப்பான்...."

"நீர் சொல்வதை நான் நம்பவில்லை. அது எப்படி நடக்க முடியும்?" என்று கேட்ட குந்தவை தேவியின் முகத்திலே ஆர்வமும் மகிழ்ச்சியும் ஐயமும் கவலையும் கலந்து தாண்டவமாடின.

"நானும் நம்பவில்லை. இவர் எதையோ நினைத்துக் கொண்டு பேசுகிறார். இப்படிச் சொன்னால் தங்களுக்குச் சந்தோஷமாயிருக்கும் என்று கூறுகிறார்!" என்றாள் வானதி.

"இன்று நீங்கள் நம்பாவிட்டால் பாதகமில்லை. ஒருகாலத்தில் நம்புவீர்கள். அப்போது இந்த ஏழைச் சோதிடனை மறந்து விடாதீர்கள்...."

"அக்கா! நாம் போகலாமா?" என்று மறுபடி கேட்டாள் வானதி. அவளுடைய கரிய விழிகளின் ஓரங்களில் இரு கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

"இன்னும் ஒரே ஒரு விஷயம் சொல்லி விடுகிறேன். அதைக் கேட்டுவிட்டுப் புறப்படுங்கள். இந்த இளவரசியை மணந்து கொள்ளப் போகும் வீரனுக்கு எத்தனை எத்தனையோ அபாயங்களும், கண்டங்களும் ஏற்படும். பகைவர்கள் பலர் உண்டு..."

"ஐயோ!"

"ஆனால் அவ்வளவு அபாயங்களும் கண்டங்களும் முடிவில் பறந்து போகும். பகைவர்கள் படுநாசம் அடைவார்கள். இந்தத் தேவியை அடையும் நாயகன் எல்லாத் தடைகளையும் மீறி மகோந்நத பதவியை அடைவான்... இதைவிட முக்கியமான செய்தி ஒன்று உண்டு தாயே! நான் வயதானவன். ஆகையால் உள்ளதை ஒளியாமல் விட்டுச் சொல்கிறேன். இந்தப் பெண்ணின் வயிற்றை நீங்கள் ஒருநாள் பாருங்கள். அதில் ஆலிலையின் ரேகைகள் இல்லாவிட்டால் நான் இந்த சோதிடத் தொழிலையே விட்டு விடுகிறேன்...."

"ஆலிலையின் ரேகையில் என்ன விசேஷம், சோதிடரே?"

"ஆலிலையின் மேல் பள்ளிகொண்ட பெருமான் யார் என்பது தெரியாதா? அந்த மகாவிஷ்ணுவின் அம்சத்துடன் இவள் வயிற்றில் ஒரு பிள்ளை பிறப்பான். இவளுடைய நாயகனுக்காவது பல இடைஞ்சல்கள், தடங்கல்கள், அபாயங்கள், கண்டங்கள் எல்லாம் உண்டு. ஆனால் இந்தப் பெண்ணின் வயிற்றில் அவதரிக்கப் போகும் குமாரனுக்குத் தடங்கல் என்பதே கிடையாது. அவன் நினைத்ததெல்லாம் கைகூடும்; எடுத்ததெல்லாம் நிறைவேறும், அவன் தொட்டதெல்லாம் பொன்னாகும்; அவன் கால் வைத்த இடமெல்லாம் அவனுடைய ஆட்சிக்கு உள்ளாகும்; அவன் கண்ணால் பார்த்த இடமெல்லாம் புலிக்கொடி பறக்கும். தாயே! இவளுடைய குமாரன் நடத்திச் செல்லும் சைன்யங்கள் பொன்னி நதியின் புது வெள்ளத்தைப் போல் எங்கும் தங்குதடையின்றிச் செல்லும். ஜயலக்ஷ்மி அவனுக்குக் கைகட்டி நின்று சேவகம் புரிவாள். அவன் பிறந்த நாட்டின் புகழ் மூவுலகமும் பரவும். அவன் பிறந்த குலத்தின் கீர்த்தி உலகம் உள்ள அளவும் நின்று நிலவும்!...."

இவ்வாறு சோதிடர் ஆவேசம் வந்தவர் போல் சொல்லி வந்தபோது குந்தவை தேவி அவருடைய முகத்தையே பார்த்துக் கொண்டு, அவர் கூறிய வார்த்தைகளை ஒன்றுவிடாமல் விழுங்குபவள் போல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அக்கா!" என்ற ஈனமான குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"எனக்கு என்னமோ செய்கிறது!" என்று மேலும் தீனமாகக் கூறினாள் வானதி. திடீரென்று மயங்கித் தரையில் சாய்ந்தாள்.

"ஜோசியரே! சீக்கிரம் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்!" என்று குந்தவை சொல்லிவிட்டு, வானதியைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டாள். சோதிடர் தண்ணீர் கொண்டு வந்தார். குந்தவை தண்ணீரை வாங்கி வானதியின் முகத்தில் தெளித்தாள்.

"ஒன்றும் நேராது, அம்மா! கவலைப் படாதீர்கள்..." என்றார் சோதிடர்.

"ஒரு கவலையும் இல்லை. இவளுக்கு இது வழக்கம். இந்த மாதிரி இதுவரையில் ஐந்தாறு தடவை ஆகிவிட்டது! சற்றுப்

போனால் கண் விழித்து எழுந்திருப்பாள். எழுந்ததும் இது பூலோகமா, கைலாசமா என்று கேட்பாள்!'' என்றாள் குந்தவை.

பிறகு சிறிது மெல்லிய குரலில், "ஜோசியரே! முக்கியமாக ஒன்று கேட்பதற்காகவே உங்களிடம் வந்தேன். நாடு நகரங்களிலே சில காலமாக ஜனங்கள் ஏதேதோ பேசிக் கொள்கிறார்களாமே? வானத்தில் சில நாளாக வால் நட்சத்திரம் தோன்றுகிறதே? இதற்கெல்லாம் உண்மையில் ஏதேனும் பொருள் உண்டா? இராஜ்யத்துக்கு ஏதாவது ஆபத்து உண்டா? மாறுதல், குழப்பம் ஏதேனும் ஏற்படுமா?'' என்று இளையபிராட்டி கேட்டாள்.

"அதை மட்டும் என்னைக் கேட்காதீர்கள், தாயே! தேசங்கள், இராஜ்யங்கள், இராஜாங்க நிகழ்ச்சிகள் - இவற்றுக்கெல்லாம் ஜாதகமும் கிடையாது. ஜோசியமும் சொல்ல முடியாது. நான் பயின்ற வித்தையில் அதெல்லாம் வரவில்லை. ஞானிகளும், ரிஷிகளும், மகான்களும், யோகிகளும் ஒருவேளை ஞான திருஷ்டியில் பார்த்துச் சொல்லலாம். இந்த ஏழைக்கு அந்தச் சக்தி கிடையாது. இராஜரீக காரியங்களில் நாள், நட்சத்திரம், ஜாதகம், ஜோசியம் எல்லாம் சக்தியற்றுப் போய் விடுகின்றன...''

"ஜோசியரே! மிக சாமர்த்தியமாகப் பேசுகிறீர்! இராஜாங்கத்துக்கு ஜாதகம் பார்க்க வேண்டாம். ஆனால் என் தந்தையைப் பற்றியும் சகோதரர்களைப் பற்றியும் பார்த்துச் சொல்லலாம் அல்லவா? அவர்களுடைய ஜாதகத்தைப் பார்த்தால் இராஜாங்க ஜாதகத்தைப் பார்த்துபோல் ஆகிவிடும் அல்லவா?''

''சாவகாசமாக இன்னொரு நாள் பார்த்துச் சொல்கிறேன், அம்மா! பொதுவாக, இது குழப்பங்களும் அபாயங்களும் நிறைந்த காலம். எல்லோருமே சிறிது ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்...''

"ஜோசியரே! என் தந்தை, சக்கரவர்த்தி... பழையாறையை விட்டுத் தஞ்சாவூருக்குப் போனதிலிருந்து எனக்கு ஒரே கவலையாயிருக்கிறது.''

"முன்னமே சொன்னேனே, தாயே! மகாராஜாவுக்குப் பெரிய கண்டம் இருக்கிறது. தங்கள் குடும்பத்துக்கும் பெரிய அபாயங்கள் இருக்கின்றன. துர்க்கா



தேவியின் அருள் மகிமையினால் எல்லாம் நிவர்த்தியாகும்.''

"அக்கா! நாம் எங்கே இருக்கிறோம்?'' என்று வானதியின் தீனக் குரல் கேட்டது.

குந்தவையின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்த வானதி கண்ணிமைகளை வண்டின் சிறகுகளைப்போல் கொட்டி மலர மலர விழித்தாள்.

''கண்மணி! இன்னும் நாம் இந்த பூலோகத்திலேதான் இருக்கிறோம்! சொர்க்க லோகத்துக்கு அழைத்துப் போக புஷ்பக விமானம் இன்னும் வந்து சேரவில்லை. எழுந்திரு! நம்முடைய குதிரை பூட்டிய ரதத்திலேயே ஏறிக் கொண்டு அரண்மனைக்குப் போகலாம்!'' என்றாள் குந்தவை.

வானதி எழுந்து உட்கார்ந்து கொண்டு, ''நான் மயக்கம் போட்டு விழுந்துவிட்டேனா?'' என்றாள்.

"மயக்கம் போடவில்லை; அக்காவின் மடியில் படுத்துக் கொஞ்சம் தூங்கி விட்டாய்! தாலாட்டுக்கூடப் பாடினேன். உன் காதில் விழவில்லையா?''

"கோபிக்காதீர்கள், அக்கா! என்னை அறியாமலே தலை கிறுகிறுத்து வந்து விட்டது.''

"கிறு கிறுக்கும், கிறு கிறுக்கும். இந்த ஜோசியர் எனக்கு அப்படி ஜோசியம் சொல்லியிருந்தால் எனக்குக் கூடத்தான் கிறுகிறுத்திருக்கும்.''

''அதனால் இல்லை. அக்கா! இவர் சொன்னதையெல்லாம் நான் நம்பி விட்

டேனா?"

"நீ நம்பினாயோ, நம்பவில்லையோ? ஆனால் ஜோசியர் பயந்தே போய்விட்டார்! உன்னைப் போன்ற பயங்கொள்ளியை இனிமேல் எங்கும் அழைத்துப் போகக் கூடாது..."

"நான்தான் சோதிடரிடம் வரவில்லையென்று அப்போதே சொன்னேனே! நீங்கள்தானே...?"

"என் குற்றந்தான். எழுந்திரு, போகலாம். வாசல் வரையில் நாலு அடி நடக்க முடியுமா? இல்லாவிட்டால் இடுப்பில் எடுத்து வைத்துக் கொண்டு போக வேணுமா?"

"வேண்டாம்! வேண்டாம்! நன்றாய் நடக்க முடியும்."

"சற்றுப் பொறுங்கள், தாயே! தேவியின் பிரஸாதம் தருகிறேன், வாங்கிக் கொண்டு போங்கள்" என்று ஜோசியர் சொல்லிவிட்டு ஓலைச் சுவடியைக் கட்டத் தொடங்கினார்.

"ஜோசியரே! எனக்கு என்னவெல்லாமோ சொன்னீர்கள்; அக்காவுக்கு ஒன்றுமே சொல்லவில்லையே?" என்று வானதி கூறினாள்.

"அம்மா! இளையபிராட்டிக்கு எல்லாம் சொல்லியிருக்கிறேன். புதிதாக என்ன சொல்ல வேண்டும்?"

"அக்காவை மணந்து கொள்ளப் போகும் வீராதி வீரர்..."

"அசகாய சூரர்" என்று குந்தவை குறுக்கிட்டுச் சொன்னாள்.

"சந்தேகம் என்ன?... மகா பராக்கிரமசாலியான இராஜகுமாரர்..."

"முப்பத்திரண்டு சாமுத்ரிகா லட்சணமும் பொருந்தியவர்; புத்தியில் பிரகஸ்பதி; வித்தையில் சரஸ்வதி, அழகிலே மன்மதன்; ஆற்றலில் அர்ஜுனன்!"

"இளையபிராட்டிக்கு ஏற்ற அந்த ஸுகுமாரரான இராஜகுமாரர் எங்கிருந்து எப்போது வருவார்?..."

"வருகிறார், தாயே! வருகிறார்! கட்டாயம் வரப்போகிறார். அதி சீக்கிரத்திலேயே வருவார்."

"எப்படி வருவார்? குதிரை மேல் வருவாரா? ரதத்தில் ஏறி வருவாரா? யானை மேல் வருவாரா? கால் நடையாக வருவாரா? அல்லது நேரே ஆகாசத்திலிருந்து கூரையைப் பொத்துக் கொண்டு வந்து குதிப்பாரா!" என்று குந்தவை தேவி கேலியாகக் கேட்டாள்.

"அக்கா! குதிரைக் காலடிச் சத்தம் கேட்கிறது!" என்று வானதி சிறிது பரபரப்புடன் சொன்னாள்.

"ஒருவருக்கும் கேளாதது உனக்கு மாத்திரம் அதிசயமாய்க் கேட்கும்!"

"இல்லை. வேடிக்கைக்குச் சொல்லவில்லை. இதோ கேளுங்கள்!"

உண்மையாகவே அப்போது வீதியில் குதிரை ஒன்று விரைந்து வரும் காலடிச் சத்தம் கேட்டது.

"கேட்டால் என்னடி? குடந்தைப் பட்டணத்தின் வீதிகளில் குதிரை போகாமலா இருக்கும்?" என்றாள் குந்தவை.

"இல்லை; இங்கே வருகிறது மாதிரி தோன்றியது!"

"உனக்கு ஏதாவது விசித்திரமாகத் தோன்றும். எழுந்திரு, போகலாம்!"

அச்சமயத்தில் அந்த வீட்டின் வாசலில் ஏதோ குழப்பமான சப்தம் கேட்டது. குரல் ஒலிகளும் கேட்டன.

"இதுதானே ஜோசியர் வீடு?"

"ஆமாம்; நீ யார்?"

"ஜோசியர் இருக்கிறாரா?"

"உள்ளே போகக் கூடாது?"

"அப்படித்தான் போவேன்!"

"விடமாட்டேன்."

"ஜோசியரைப் பார்க்க வேண்டும்."

"அப்புறம் வா."

"அப்புறம் வர முடியாது; எனக்கு மிக்க அவசரம்!"

"அடே! அடே! நில்! நில்!"

"சட்! விலகிப்போ! தடுத்தாயோ, கொன்றுவிடுவேன்..."

"ஐயா! ஐயா! வேண்டாம்! உள்ளே போக வேண்டாம்!" – இத்தகைய குழப்பமான கூச்சல் நெருங்கி நெருங்கிக் கேட்டது. படார் என்று வாசற் கதவு திறந்தது.

அவ்வளவு பிரமாதமான தடபுடலுடன் ஒரு வாலிபன் உள்ளே திடும்பிரவேசமாக வந்தான்.

அவனைப் பின்னாலிருந்து தோள்களைப் பிடித்து இழுக்க ஒருவன் முயன்று கொண்டிருந்தான்.

வாலிபன் திமிறிக் கொண்டு வாசற்படியைக் கடந்து உள்ளே வந்தான்.

வந்த வாலிபன் யார் என்று வாசகர்கள் ஊகித்திருப்பார்கள். நமது வீரன் வந்தியத்தேவன்தான்!

வீட்டுக்குள்ளே இருந்த மூன்று பேருடைய கண்களும் ஏக காலத்தில் அவ்வீரனைப் பார்த்தன.

வந்தியத்தேவனும் உள்ளிருந்தவர்களைப் பார்த்தான். இல்லை; உள்ளேயிருந்தவர்களில் ஒருவரைத்தான் பார்த்தான். அதுகூட இல்லை. குந்தவை தேவியை அவன் முழுமையாகப் பார்க்கவில்லை. அவளுடைய பொன் முகத்தை மட்டுமே பார்த்தான். முகத்தையாவது முழுமையும் பார்த்தானோ என்றால், அதுவும் இல்லை! வியப்பினால் சிறிது விரிந்திருந்த அவளுடைய பவளச் செவ்வாயின் இதழ்களைப் பார்த்தான்; கம்பீரமும் வியப்பும் குறும்புச் சிரிப்பும் ததும்பியிருந்த அவளுடைய அகன்ற கண்களைப் பார்த்தான். கண்ணிமைகளையும் கரிய புருவங்களையும் பார்த்தான்; தந்த வர்ண நெற்றியைப் பார்த்தான்; குங்குமச் சிவப்பான குழிந்த கன்னங்களைப் பார்த்தான். சங்கையொத்த வழுவழுப்பான கழுத்தைப் பார்த்தான். இவ்வளவையும் ஒரே சமயத்தில் தனித் தனியாகப் பார்த்தான். தனித்தனியாக அவை அவன் மனத்தில் பதிந்தன.



இதெல்லாம் சில விநாடி நேரந்தான். உடனே சட்டென்று திரும்பிச் சோதிடருடைய சீடனை நோக்கி, "ஏனப்பா, உள்ளே பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று நீ சொல்லக் கூடாது? சொல்லியிருந்தால் நான் இப்படி வந்திருப்பேனா?" என்று கேட்டுக் கொண்டே சீடனை மறுபக்கம் தள்ளிக் கொண்டு வாசற்படியை மீண்டும் கடந்தான். ஆயினும் வெளியில் போவதற்குள் இன்னும் ஒரு தடவை குந்தவை தேவியைத் திரும்பிப் பார்த்து விட்டுத்தான் போனான். "அடே அப்பா! புயல் அடித்து ஓய்ந்தது போல் அல்லவா இருக்கிறது?" என்றாள் குந்தவைப் பிராட்டி.

"இன்னும் ஓய்ந்தபாடில்லை; அதோ கேளுங்கள்!" என்றாள் கொடும்பாளூர் இளவரசி.

வாசலில் இன்னமும் வந்தியத் தேவனுக்கும் சோதிடரின் சீடனுக்கும் தர்க்கம் நடந்து கொண்டிருந்தது.

"ஜோசியரே! இவர் யார்?" என்றாள் குந்தவை.

"தெரியாது, தாயே! யாரோ அசலூர்க்காரர் மாதிரி இருக்கிறது. பெரிய முரட்டுப் பிள்ளையென்று தோன்றுகிறது."

குந்தவை திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு கலகலவென்று சிரித்தாள்.

"எதற்காக அக்கா சிரிக்கிறீர்கள்?"

"எதற்காகவா? எனக்கு வரப்போகும் மணாளன் குதிரையில் வரப் போகிறானா, யானையில் வரப் போகிறானா, அல்லது கூரை வழியாக வந்து குதிக்கப் போகிறானா என்று பேசிக் கொண்டிருந்தோமே, அதை நினைத்துக் கொண்டு சிரித்தேன்!"

இப்போது வானதிக்கும் சிரிப்புத் தாங்க முடியாமல் வந்தது.

இருவருடைய சிரிப்பும் கலந்து அலை அலையாக எழுந்தது.

வெளியில் எழுந்த சச்சரவுச் சப்தங்கூட இந்த இரு மங்கையரின் சிரிப்பின் ஒலியில் அடங்கி விட்டது.

சோதிடர் மௌன சிந்தனையில் ஆழ்ந்தவராய், அரச குமாரிகள் இருவருக்கும் குங்குமம் கொடுத்தார்.

பெற்றுக் கொண்டு இருவரும் எழுந்தனர். வீட்டுக்கு வெளியில் சென்றனர்.

சோதிடரும் கூட வந்தார்.

வீட்டு வாசலில் சிறிது ஒதுங்கி நின்ற வந்தியத்தேவன், பெண்மணிகளைப் பார்த்ததும், "மன்னிக்க வேண்டும். உள்ளே பெண்கள் இருக்கிறார்கள் என்று

இந்தப் புத்திசாலி சொல்லவில்லை. ஆகையினால்தான் அப்படி அவசரமாக வந்துவிட்டேன். அதற்காக மன்னிக்க வேண்டும்!" என்று உரத்த குரலில் சொன்னான்.

குந்தவை மலர்ந்த முகத்துடன் குறும்பும் கேலியும் மிடுக்கும் ததும்பிய கண்களினால் வந்தியத்தேவனை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தாள். ஒரு வார்த்தையும் மறுமொழி சொல்லவில்லை. வானதியை ஒரு கையினால் பிடித்து இழுத்துக் கொண்டு ரதம் நின்ற ஆலமரத்தடியை நோக்கிச் சென்றாள்.

"குடந்தை நகரத்துப் பெண்களுக்கு



மரியாதையே தெரியாது போலிருக்கிறது. ஏதடா ஒரு மனிதன் வலிய வந்து பேசுகிறானே என்பதற்காகவாவது திரும்பிப் பார்த்து ஒரு வார்த்தை பதில் சொல்லக் கூடாதோ?" என்று வந்தியத்தேவன் இரைந்து கூறியது அவர்கள் காதில் விழுந்தது.

ரதத்தில் குதிரையைப் பூட்டிச் சாரதி ஆயத்தமாக நிறுத்தியிருந்தான்.

இளவரசிகள் இருவரும் ரதத்தில் ஏறிக் கொண்டதும், ரத சாரதியும் முன்னால் ஏறிக் கொண்டான்.

ரதம் அரிசிலாற்றங்கரையை நோக்கி விரைந்து சென்றது.

வந்தியத்தேவன் ரதம் மறையும் வரையில் பார்த்துக் கொண்டு நின்றான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

நந்தினி

கொள்ளிடக் கரையில் படகில் ஏற்றி நாம் விட்டு விட்டு வந்த வந்தியத்தேவன் குடந்தை சோதிடரின் வீட்டுக்கு அச்சமயம் எப்படி வந்து சேர்ந்தான் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா?

ஆழ்வார்க்கடியான் படகில் ஏறியதை ஆட்சேபித்த சைவப் பெரியார், படகு நகரத் தொடங்கியதும், வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! உனக்காகப் போனால் போகிறது என்று இவனை ஏற விட்டேன். ஆனால் ஓடத்தில் இருக்கும் வரையில் இவன் அந்த எட்டெழுத்துப் பெயரைச் சொல்லவே கூடாது. சொன்னால், இவனை இந்தக் கொள்ளிடத்தில் பிடித்துத் தள்ளிவிடச் சொல்லுவேன். ஓடக்காரர்கள் என்னுடைய ஆட்கள்!" என்றார்.

"நம்பி அடிகளே!

தங்களுடைய திருச்செவியில் விழுந்ததா?'' என்று வந்தியத் தேவன் கேட்டான்.

"இவர் ஐந்தெழுத்துப் பெயரைச் சொல்லாதிருந்தால் நானும் எட்டெழுத்துத் திருநாமத்தைச் சொல்லவில்லை!'' என்றார் ஆழ்வார்க் கடியான்.

"சாக்ஷாத் சிவபெருமானுடைய பஞ்சாட்சரத் திருமந்திரத்தைச் சொல்லக் கூடாது என்று இவன் யார் தடைசெய்வதற்கு? முடியாது! முடியாது!

கற்றுணைப்பூட்டி கடலிற்
பாய்ச்சினும்
நற்றுணையாவது
நமசிவாயவே!''

என்று சைவப் பெரியார் கம்பீர கர்ஜனை செய்தார்.


"நாடினேன் நாடி நான்
கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்!''

என்று ஆழ்வார்க்கடியான் உரத்த குரலில் பாடத் தொடங்கினான்.

"சிவ சிவ சிவா!'' என்று சைவர் இரண்டு காதிலும் கைவிரலை வைத்து அடைத்துக் கொண்டார்.

ஆழ்வார்க்கடியான் பாட்டை நிறுத்தியதும், சைவர் காதில் வைத்திருந்த விரல்களை எடுத்தார்.

ஆழ்வார்க்கடியான் வந்தியத் தேவனைப் பார்த்து, "தம்பி! நீயே அந்த வீர சைவரைக் கொஞ்சம் கேள். இவர் திருமாலின் பெயரைக் கேட்பதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறாரே? ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருக்கும் பெருமாளின் பாத கமலங்களை அலம்பி விட்டுத் தான் இந்தக் கொள்ளிட நதி கீழே வருகிறது. பெருமாளின் பாதம்பட்ட தீர்த்தம் புண்ணிய தீர்த்தம் என்றுதானே சிவபெருமான் திருவானைக் காவலில் அந்தத் தண்ணீரிலேயே முழுகித்



தவம் செய்கிறார்?'' என்று சொல்லு வதற்குள்ளே சைவப் பெரியார் மிக வெகுண்டு ஆழ்வார்க்கடியான் மீது பாய்ந்தார். படகில் ஓரத்தில் இரண்டு பேரும் கைகலக்கவே, படகு கவிழ்ந்து விடும் போலிருந்தது. ஓடக்காரர்களும் வந்தியத்தேவனும் குறுக்கிட்டு அவர்களை விலக்கினார்கள்.

''பக்த சிரோமணிகளே! நீங்கள் இருவரும் இந்தக் கொள்ளிட வெள்ளத் திலே விழுந்து நேரே மோட்சத்துக்குப் போக ஆசைப்படுவதாகத் தோன்றுகிறது. ஆனால் எனக்கு இன்னும் இந்த உலகத் தில் செய்யவேண்டிய காரியங்கள் மிச்ச மிருக்கின்றன!'' என்றான் வந்தியத்தேவன்.

ஓடக்காரர்களில் ஒருவன், "கொள்ளி டத்தில் விழுந்தால் மோட்சத்துக்குப் போவது நிச்சயமோ, என்னமோ தெரி யாது! ஆனால் முதலையின் வயிற்றுக்குள் நிச்சயமாகப் போகலாம்! அதோ பாருங் கள்!'' என்றான்.

அவன் சுட்டிக்காட்டிய இடத்தில் முதலை ஒன்று பயங்கரமாக வாயைத் திறந்து கொண்டு காணப்பட்டது.

"எனக்கு முதலையைப் பற்றிச் சிறிதும் அச்சம் இல்லை; கஜேந்திரனை ரட்சித்த ஆதிமூலமான நாராயண மூர்த்தி எங்கே போய் விட்டார்?'' என்றான் ஆழ்வார்க் கடியான்.

"எங்கே போய்விட்டாரா? பிருந்தா வனத்து கோபிகா ஸ்திரீகளின் சேலைத் தலைப்பில் ஒருவேளை ஒளிந்து கொண்டி ருப்பார்!'' என்றார் சைவர்.

''அல்லது பஸ்மாசுரனுக்கு வரங் கொடுத்துவிட்டு அலறிப் புடைத்துக் கொண்டு ஓடியது போல் சிவனுக்கு இன் னொரு சங்கடம் ஏற்பட்டிருக்கலாம்; அந்தச் சங்கடத்திலிருந்து சிவனைக் காப் பாற்றுவதற்காகத் திருமால் போயிருக் கலாம்'' என்றான் நம்பி.

"திரிபுர சம்ஹாரத்தின் போது விஷ்ணு அடைந்த கர்வபங்கம் இந்த வைஷ் ணவனுக்கு ஞாபகம் இல்லை போலிருக் கிறது!'' என்றார் சைவப் பெரியார்.

"சுவாமிகளே! நீங்கள் எதற்காகத்தான் இப்படிச் சண்டை போடுகிறீர்களோ, தெரியவில்லை! யாருக்கு எந்தத் தெய் வத்தின் பேரில் பக்தியோ, அந்தத் தெய்வத்தை வழிபடுவதுதானே?'' என் றான் வந்தியத்தேவன்.

சைவப் பெரியாரும் ஆழ்வார்க் கடியானும் ஏன் அவ்விதம் சண்டையிட்டார்கள்? வீர நாராயணபுரத்தில் ஏன் இதே மாதிரி யான வாதப் போர் நடந்தது என்பதைப் பற்றி வாசகர்களுக்கு இச்சமயத்தில் சொல்லிவிடுவது உசிதமாயிருக்கும்.

பழந் தமிழ்நாட்டில் ஏறக்குறைய அறுநூறு வருஷ காலம் பௌத்த மதமும் சமண மதமும் செல்வாக்குப் பெற்றிருந் தன. இந்தச் செல்வாக்கினால் தமிழகம் பல நலங்களை எய்தியது. சிற்பம், சித்தி ரம், கவிதை, காவியம் முதலிய கலைகள் தழைத்தோங்கின. பின்னர், ஆழ்வார் களும், நாயன்மார்களும் தோன்றினார்கள். அமுதொழுகும் தெய்வத் தமிழ்ப் பாசு ரங்களைப் பொழிந்தார்கள். வைஷ்ண வத்தையும் சைவத்தையும் தழைத்தோங் கச் செய்தார்கள். இவர்களுடைய பிரசார முறை மிகச் சக்திவாய்ந்ததாயிருந்தது. சமயப் பிரசாரத்துக்குச் சிற்பக் கலை யுடன் கூட இசைக் கலையையும் பயன் படுத்திக் கொண்டார்கள். ஆழ்வார்களின் பாசுரங்களையும் மூவர் தேவாரப் பண் களையும் தேவகானத்தையொத்த இசை யில் அமைத்துப் பலர் பாடத் தொடங் கினார்கள். இந்த இசைப் பாடல்கள் கேட்போர் உள்ளங்களைப் பரவசப் படுத்தி, பக்தி வெறியை ஊட்டின. ஆழ் வார்களின் பாடல் பெற்ற விஷ்ணு ஸ்தலங்களும் மூவரின் பாடல் பெற்ற சிவ ஸ்தலங்களும் புதிய சிறப்பையும் புனிதத் தன்மையையும் அடைந்தன. அதற்கு முன் செங்கல்லாலும் மரத்தினாலும் கட்டப் பட்டிருந்த ஆலயங்கள் புதுப்பித்துக் கற்றளிகளாகக் கட்டப்பட்டன. இந்தத் திருப்பணியை விஜயாலய சோழன் காலத்திலிருந்து சோழ மன்னர்களும், மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் வெகுவாகச் செய்துவந்தார்கள்.

அதே சமயத்தில் கேரள நாட்டில் ஒரு விசேஷ சம்பவம் நடந்தது. காலடி என்னு மிடத்தில் ஒரு மகான் அவதரித்தார்.

இளம்பிராயத்தில் அவர் உலகைத் துறந்து சந்நியாசி ஆனார். வடமொழியிலுள்ள சகல சாஸ்திரங்களையும் படித்துக் கரை கண்டார். வேத உபநிஷதம், பகவத் கீதை, பிரம்ம சூத்திரம், இவற்றின் அடிப்படையில் அத்வைத வேதாந்தக் கொள்கையின் கொடியை நாட்டினார். வடமொழியில் பெற்றிருந்த வித்வத்தின் உதவியினால் பாரததேசம் முழுவதும் திக்விஜயம் செய்து ஆங்காங்கு எட்டு அத்வைத மடங்களை ஸ்தாபனம் செய்தார். இவருடைய கொள்கையை அவலம்பித்த அத்வைத சந்நியாசிகள் நாடெங்கும் பரவிச் சென்றார்கள்.

இவ்விதம் தமிழ்நாட்டில் நம் கதை நடந்த காலத்தில், அதாவது சுமார் 980 வருஷங்களுக்கு * முன்பு, பெரியதொரு சமயக் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்தது. இந்தக் கொந்தளிப்பிலிருந்து தீங்கு தரும் அம்சங்கள் சிலவும் தோன்றிப் பரவின. வீர வைஷ்ணவர்களும் வீர சைவர்களும் ஆங்காங்கு முளைத்தார்கள். இவர்கள் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் சண்டையில் இறங்கினார்கள். இந்த வாதப் போர்களில் சில சமயம் அத்வைதிகளும் கலந்து கொண்டார்கள். சமய வாதப் போர்கள் சில சமயம் அடிதடி சண்டையாகப் பரிணமித்தன.

அந்தக் காலத்து சைவ-வைஷ்ணவப் போரை விளக்கும் அருமையான கதை ஒன்று உண்டு.

ஸ்ரீரங்கத்து வைஷ்ணவர் ஒருவர் திருவானைக்காவல் ஆலய வெளிச் சுவரின் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார். தலையில் திடீரென்று ஒரு கல் விழுந்தது. காயமாகி இரத்தமும் கசிந்தது. வைஷ்ணவர் அண்ணாந்து பார்த்தார். கோபுரத்தில் ஒரு காக்கை உட்கார்ந்த படியால் அந்தப் பழைய கோபுரத்தின் கல் இடிந்து விழுந்திருக்க வேண்டும் என்று அறிந்தார். உடனே அவருக்குக் காயமும் வலியும் மறந்து போய் ஒரே குதூகலம் உண்டாகி விட்டது. "சீரங்கத்து வீர வைஷ்ணவக் காக்காயே! திருவானைக்காவல் சிவன் கோயிலை நன்றாய் இடித்துத் தள்ளு!" என்றாராம்.

அந்த நாளில் இத்தகைய சைவ - வைஷ்ணவ வேற்றுமை மனப்பான்மை மிகப் பரவியிருந்தது. இதைத் தெரிந்து கொள்ளுதல், பின்னால் இந்தக் கதையைத் தொடர்ந்து படிப்பதற்கு மிக்க அநுகூலமாயிருக்கும்.

ஓடம் அக்கரை சென்றதும், சைவப் பெரியார் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "நீ நாசமாய்ப் போவாய்!" என்று கடைசி சாபம் கொடுத்து விட்டுத் தம் வழியே போனார்.

வந்தியத்தேவனுடன் வந்த கடம்பூர் வீரன் பக்கத்திலுள்ள திருப்பனந்தாளுக்குச் சென்று குதிரை சம்பாதித்து வருவதாகச் சொல்லிப் போனான். ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் ஆற்றங்கரையில் அரச மரத்தின் அடியில் உட்கார்ந்தார்கள். அந்த மரத்தின் விசாலமான அடர்ந்த கிளைகளில் நூற்றுக்கணக்கான பறவைகள் மதுரமான கலகலத்வனி செய்து கொண்டிருந்தன.

வந்தியத்தேவனும், நம்பியும் ஒருவருடைய வாயை ஒருவர் பிடுங்கி ஏதாவது விஷயத்தைக் கிரஹிக்க விரும்பினார்கள். முதலில் சிறிது நேரம் சுற்றி வளைத்துப் பேசினார்கள்.

"ஏன் தம்பி! கடம்பூர் மாளிகைக்கு என்னை அழைத்துப் போகாமல் விட்டு விட்டுப் போனாயல்லவா?"

"நான் போவதே பெரிய கஷ்டமாகப் போய்விட்டது நம்பிகளே!"

"அப்படியா? பின் எப்படித்தான் போனாய்? ஒருவேளை போகவேயில்லையோ?"

"போனேன், போனேன். ஒரு காரியத்தை உத்தேசித்து விட்டால் பின்வாங்கி விடுவேனோ? வாசற் காவலர்கள் தடுத்தார்கள். குதிரையை ஒரு தட்டு தட்டி உள்ளே விட்டேன். தடுத்தவர்கள் அத்தனை பேரும் உருண்டு தரையில் விழுந்தார்கள். பிறகு அவர்கள் எழுந்து வந்து என்னைச் சூழ்ந்து கொள்வதற்குள் என் நண்பன் கந்தமாறன் ஓடிவந்து என்னை அழைத்துப் போனான்."

"அப்படித்தான் இருக்கும் என்று நான் நினைத்தேன். மிக்க தைரியசாலி நீ. சரி. அப்புறம் என்ன நடந்தது? யார், யார்

* 1950ல் எழுதப்பட்டது

வந்திருந்தார்கள்?"

"எத்தனையோ பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடைய பெயரெல்லாம் எனக்குத் தெரியாது. பழுவேட்டரையர் வந்திருந்தார். அவருடைய இளம் மனையாளும் வந்திருந்தாள். அப்பப்பா! அந்தப் பெண்ணின் அழகை என்னவென்று சொல்வது?...."

"நீ பார்த்தாயா என்ன?"

"ஆமாம், பார்க்காமலா? என் நண்பன் கந்தமாறன் என்னை அந்தப்புரத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கே பார்த்தேன். அவ்வளவு ஸ்திரீகளிலும் பழுவேட்டரையரின் இளைய ராணிதான் பிரமாத அழகுடன் விளங்கினாள்! மற்ற கருநிறத்து மங்கையர்க்கு நடுவில் அந்த ராணியின் முகம் பூரண சந்திரனைப் போல் பொலிந்தது. அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, இந்திராணி, சந்திராணி எல்லோரும் அவளுக்கு அப்புறந்தான்!"

"அடேயப்பா! ஒரேயடியாக வர்ணிக்கிறாயே? பிறகு என்ன நடந்தது? குரவைக் கூத்து நடந்ததா?"

"நடந்தது, மிகவும் நன்றாயிருந்தது. அப்போது உம்மை நினைத்துக் கொண்டேன்."

"எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அப்புறம் இன்னும் என்ன நடந்தது?"

"வேலனாட்டம் நடந்தது. தேவராளனும் தேவராட்டியும் மேடைக்கு வந்து ஆவேசமாக ஆடினார்கள்."

"சந்நதம் வந்ததா? ஏதாவது வாக்குச் சொன்னார்களா?"

"ஆகா! நினைத்த காரியம் கைகூடும்; மழை பெய்யும்; நிலம் விளையும்" என்றெல்லாம் சந்நதக்காரன் சொன்னான்...."

"அவ்வளவுதானா?"

"இன்னும் ஏதோ இராஜாங்க விஷயமாகச் சொன்னான். நான் அதையொன்றும் கவனிக்கவில்லை."

"அடாடா! இவ்வளவுதானா? கவனித்திருக்க வேண்டும், தம்பி! நீ இளம் பிள்ளை; நல்ல வீர பராக்கிரமம் உடையவனாய்த் தோன்றுகிறாய். இராஜாங்க விஷயங்களைப் பற்றி எங்கேயாவது யாராவது பேசினால் காதில் கேட்டு வைத்துக் கொள்ள வேண்டும்."

"நீர் சொல்லுவது உண்மை. எனக்குக் கூட இன்று காலையில் அப்படித்தான் தோன்றியது."

"காலையில் தோன்றுவானேன்?"

"காலையில் கந்தமாறனும் நானும் பேசிக் கொண்டே கொள்ளிடக்கரை வரையில் வந்தோம். இராத்திரி நான் படுத்துத் தூங்கிய பிறகு, கடம்பூர் மாளிகைக்கு வந்திருந்த விருந்தாளிகள் கூட்டம் போட்டு ஏதேதோ இராஜாங்க விஷயமாகப் பேசி



னார்களாம்."

"என்ன பேசினார்களாம்?"

"அது எனக்குத் தெரியாது. கந்தமாறன் ஏடாகூடமாகச் சொன்னானே தவிர, தெளிவாகச் சொல்லவில்லை. ஏதோ ஒரு காரியம் சீக்கிரம் நடக்கப் போகிறது. அப்போது சொல்கிறேன் என்றான். அவன் பேச்சே மர்மமாயிருந்தது. ஏன், சுவாமிகளே! உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

"எதைப் பற்றி?"

"நாடு நகரமெல்லாம் ஏதேதோ பேசிக் கொள்கிறார்களே? வானத்தில் வால் நட்சத்திரம் காணப்படுகிறது; இராஜாங்கத்துக்கு ஏதோ ஆபத்து இருக்கிறது; சோழ சிம்மாசனத்தில் மாறுதல் ஏற்படும்; அப்படி, இப்படி, என்றெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். தொண்டை மண்டலம் வரையில் இந்தப் பேச்சு எட்டியிருக்கிறது. இன்னும் யார் யாரோ பெரிய கைகள் சேர்ந்து, அடிக்கடி கூடி, அடுத்த பட்டத்துக்கு யார் என்று யோசித்து வருகிறார்களாம். உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அடுத்த பட்டத்துக்கு யார் வரக்கூடும்?"

"எனக்கு அதெல்லாம் தெரியாது, தம்பி! இராஜாங்க காரியங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நான் வைஷ்ணவன்; ஆழ்வார்களின் அடியார்க்கு அடியான்; எனக்குத் தெரிந்த பாசுரங்களைப் பாடிக் கொண்டு ஊர் ஊராய்த் திரிகிறவன்!"

இவ்வாறு ஆழ்வார்க்கடியான் கூறி, **"திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்"** என்று பாடத் தொடங்கவும், வந்தியத்தேவன் குறுக்கிட்டு, "உமக்குப் புண்ணியமாய்ப் போகட்டும், நிறுத்தும்!" என்றான்.

"அடடா! தெய்வத் தமிழ்ப் பாசுரத்தை நிறுத்தச் சொல்கிறாயே?"

"ஆழ்வார்க்கடியான் நம்பிகளே! எனக்கு ஒரு சந்தேகம் உதித்திருக்கிறது. அதைச் சொல்லட்டுமா?"

"நன்றாய்ச் சொல்லு!"

"தடியைத் தூக்கிக் கொண்டு அடிக்க வர மாட்டீரே?"

"உன்னையா? உன்னை அடிக்க என்னாலே முடியுமா?"

"உம்முடைய வைஷ்ணவம், பக்தி, ஊர்த்தவ புண்டரம், பாசுரப் பாடல், எல்லாம் வெறும் வேஷம் என்று சந்தேகிக்கிறேன்."

"ஐயையோ! இது என்ன பேச்சு? அபசாரம்! அபசாரம்!"

"அபசாரமும் இல்லை. உபசாரமும் இல்லை. உம்முடைய பெண்ணாசையை மறைப்பதற்காக இந்த மாதிரி வேஷம் போடுகிறீர். உம்மைப் போல் இன்னும் சிலரையும் நான் பார்த்திருக்கிறேன். பெண்ணாசைப் பித்துப் பிடித்து அலைகிறவர்கள். அப்படி என்னதான் பெண்களிடம் காண்கிறீர்களோ, அதுதான் எனக்குத் தெரியவில்லை. எனக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் வெறுப்பாகவே இருக்கிறது."

"தம்பி! பெண் பித்துப் பிடித்து அலைகிறவர்கள் சிலர் உண்டு. ஆனால் அவர்களோடு என்னைச் சேர்க்காதே. நான் வேஷதாரி அல்ல. நீ அவ்விதம் சந்தேகிப்பது ரொம்பத் தவறு."

"அப்படியானால் பல்லக்கில் வந்த அந்தப் பெண்ணிடம் ஓலை கொடுக்கும்படி என்னை ஏன் கேட்டீர்? அதிலும் இன்னொரு மனுஷன் மணம் புரிந்து கொண்ட பெண்ணிடம் மனதைச் செலுத்தலாமா? நீர் கடம்பூர் மாளிகைக்கு வரவேண்டும் என்று சொன்னதும் அவளைப் பார்ப்பதற்குத்தானே? இல்லை என்று சொல்ல வேண்டாம்!"

"இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதற்கு நீ கூறிய காரணம் தவறு. வேறு தகுந்த காரணம் இருக்கிறது. அது பெரிய கதை."

"குதிரை இன்னும் வரக்காணோம். அந்தக் கதையைத்தான் சொல்லுங்களேன்! கேட்கலாம்!"

"கதை என்றால், கற்பனைக் கதை அல்ல; உண்மையாக நடந்த கதை. அதிசய வரலாறு! கேட்டால் திகைத்துப் போவாய்! அவசியம் சொல்லத்தான் வேண்டுமா?"

"இஷ்டமிருந்தால் சொல்லுங்கள்!"

"ஆம், சொல்லுகிறேன். கொஞ்சம் எனக்கு அவசரமாய்ப் போக வேண்டும். இருந்தாலும் சொல்லிவிட்டுப்

போகிறேன். மறுபடியும் உன்னிடம் ஏதாவது உதவி கோரும்படியிருந்தாலும் இருக்கும். அப்போது தட்டாமல் செய்வாய் அல்லவா?"

"நியாயமாயிருந்தால் செய்வேன். உங்களுக்கு இஷ்டமில்லாவிட்டால் ஒன்றும் சொல்ல வேண்டாம்."

"இல்லையில்லை! உன்னிடம் கட்டாயம் சொல்லியே தீரவேண்டும். அந்த இரணியாசுரன் பழுவேட்டரையரின் இளம் மனைவி இருக்கிறாளே, நான் ஓலை கொண்டு போகச் சொன்னேனே, அவள் பெயர் **நந்தினி**. அவளுடைய கதையை நீ கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவாய். உலகில் இப்படியும் அக்கிரமம் உண்டா என்று பொங்குவாய்!'' இந்த முன்னுரையுடன் ஆழ்வார்க்கடியான் நந்தினியைப் பற்றிய கதையை ஆரம்பித்தான்.

ஆழ்வார்க்கடியான் பாண்டிய நாட்டில் வைகை நதிக்கரையில் ஒரு கிராமத்தில் பிறந்தவன். அவனுடைய குடும்பத்தார் பரம பக்தர்களான வைஷ்ணவர்கள். அவனுடைய தந்தை ஒருநாள் நதிக்கரையில் உள்ள நந்தவனத்துக்குப் போனார். அங்கே ஒரு பெண் குழந்தை அனாதையாகக் கிடப்பதைக் கண்டார். குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். குழந்தை களையாகவும் அழகாகவும் இருந்தபடியால் குடும்பத்தார் அன்புடன் போற்றிக் காப்பாற்றினார்கள். நந்தவனத்தில் அகப்பட்டபடியால் நந்தினி என்று குழந்தைக்குப் பெயரிட்டார்கள். ஆழ்வார்க்கடியான் அப்பெண்ணைத் தன் தங்கை என்று கருதிப் பாராட்டி வந்தான்.

நந்தினிக்குப் பிராயம் வளர்ந்து வந்தது போல் பெருமாளிடம் பக்தியும் வளர்ந்து வந்தது. அவள் மற்றொரு 'ஆண்டாள்' ஆகிப் பக்தர்களையெல்லாம் ஆட்கொள்ளப் போகிறாள் என்று அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கை ஆழ்வார்க்கடியானுக்கு அதிகமாயிருந்தது. தந்தை இறந்த பிறகு அப்பெண்ணை வளர்க்கும் பொறுப்பை அவனே ஏற்றுக் கொண்டான். இருவரும் ஊர் ஊராகச் சென்று ஆழ்வார்களின் பாசுரங்களைப் பாடி வைஷ்ணவத்தைப் பரப்பி வந்தார்கள். நந்தினி துளபமாலை அணிந்து பக்திப் பரவசத்துடன் பாசுரம் பாடியதைக் கேட்டவர்கள் மதிமயங்கிப் போனார்கள்.

ஒரு சமயம் ஆழ்வார்க்கடியான் திருவேங்கடத்துக்கு யாத்திரை சென்றான். திரும்பி வரக் காலதாமதமாகி விட்டது. அப்போது நந்தினிக்கு ஒரு விபரீதம் நேர்ந்து விட்டது.

பாண்டியர்களுக்கும் சோழர்களுக்கும் இறுதிப் பெரும்போர் மதுரைக்கு அருகில் நடந்தது. பாண்டியர் சேனை சர்வ நாசம் அடைந்தது. வீரபாண்டியன் உடம்பெல்லாம் காயங்களுடன் போர்க்களத்தில் விழுந்திருந்தான். அவனுடைய அந்தரங்க ஊழியர்கள் சிலர் அவனைக் கண்டு பிடித்து எடுத்து உயிர் தப்புவிக்க முயன்றார்கள். இரவுக்கிரவே, நந்தினியின் வீட்டில் கொண்டு வந்து சேர்த்தார்கள். பாண்டியனுடைய நிலைமையைக் கண்டு மனமிரங்கி, நந்தினி அவனுக்குப் பணிவிடை செய்தாள். ஆனால் சீக்கிரத்தில் சோழ வீரர்கள் அதைக் கண்டுபிடித்து விட்டார்கள். நந்தினியின் வீட்டைச் சூழ்ந்து கொண்டு உட்புகுந்து வீரபாண்டியனைக் கொன்றார்கள். அங்கிருந்த நந்தினியின் அழகைக் கண்டு மோகித்துப் பழுவேட்டரையர் அவளைச் சிறைபிடித்துக் கொண்டு போய் விட்டார்.



இது மூன்று வருஷத்துக்கு முன்னால் நடந்தது. பிறகு ஆழ்வார்க்கடியான் நந்தினியைப் பார்க்கவே முடியவில்லை. அன்று முதல் ஒரு தடவையேனும் நந்தினியைத் தனியே சந்தித்துப் பேசவும் அவள் விரும்பினால் அவளை விடுதலை செய்து கொண்டு போகவும் ஆழ்வார்க்கடியான் முயன்று கொண்டிருக்கிறான். இதுவரை

யில் அம்முயற்சியில் வெற்றி பெற வில்லை....

இந்த வரலாற்றைக் கேட்ட வந்தியத்தேவனுடைய உள்ளம் உருகி விட்டது. கடம்பூர் மாளிகையில் பல்லக்கில் இருந்தது நந்தினி இல்லை என்றும், இளவரசன் மதுராந்தகன் என்றும் ஆழ்வார்க்கடியானிடம் சொல்லி விடலாமா என்று ஒருகணம் யோசித்தான். பிறகு, ஏதோ ஒன்று மனத்தில் தடைசெய்தது. ஒருவேளை இந்தக் கதை முழுதும் ஆழ்வார்க்கடியானின் கற்பனையோ என்று தோன்றியது. ஆகையால் கடம்பூர் மாளிகையில் தான் அறிந்து கொண்ட இரகசியத்தைச் சொல்லவில்லை.

அப்போது சற்றுத் தூரத்தில், கடம்பூர் வீரன் குதிரையுடன் வந்து கொண்டிருந்தான்.

"தம்பி! எனக்கு நீ உதவி செய்வாயா?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"நான் என்ன உதவி செய்ய முடியும்? பழுவேட்டரையர் இந்தச் சோழப் பேரரசையே ஆட்டுவிக்கும் ஆற்றல் உடையவர். நானோ ஒரு செல்வாக்குமில்லாத தன்னந் தனி ஆள். என்னால் என்ன செய்ய முடியும்?" என்று வந்தியத்தேவன் ஜாக்கிரதையாகவே பேசினான். பிறகு, "நம்பிகளே! இராஜாங்க காரியங்களைப் பற்றி உமக்கு ஒன்றுமே தெரியாது என்றா சொல்கிறீர்கள்? சுந்தர சோழ மகாராஜாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால், அடுத்தப் பட்டத்துக்கு உரியவர் யார் என்று உம்மால் சொல்ல முடியாதா?" என்றான். இப்படிக் கேட்டு விட்டு, அடியானுடைய முகபாவத்தில் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று வந்தியத்தேவன் ஆவலுடன் பார்த்தால், லவலேசமும் மாறுதல் ஏற்படவில்லை.

"அதெல்லாம் எனக்கு என்ன தெரியும், தம்பி! குடந்தை ஜோசியரைக் கேட்டால் ஒருவேளை சொல்வார்!" என்றான் நம்பி.

"ஓஹோ! குடந்தை சோதிடர் உண்மையிலேயே அவ்வளவு கெட்டிக்காரர் தானா?"



"அசாத்திய கெட்டிக்காரர்! சோதிடமும் பார்த்துச் சொல்வார்; மனதை அறிந்தும் சொல்வார்; உலக விவகாரங்களை அறிந்து, அதற்கேற்பவும் ஆருடம் சொல்லுவார்!"

"அப்படியானால் அவரைப் பார்த்து விட்டுப் போக வேண்டியதுதான்!" என்று வந்தியத்தேவன் மனத்தில் தீர்மானித்துக் கொண்டான்.

ஆதிகாலத்திலிருந்து மனிதகுலத்துக்கு வருங்கால நிகழ்ச்சிகளை அறிந்து கொள்வதில் பிரமை இருந்து வருகிறது. அரசர்களுக்கும் அந்தப் பிரமை உண்டு; ஆண்டிகளுக்கும் உண்டு. முற்றும் துறந்த முனிவர்களுக்கும் உண்டு; இல்லறத்தில் உள்ள ஜனங்களுக்கும் உண்டு; அறிவிற் சிறந்த மேதாவிகளுக்கும் உண்டு; மூடமதியினர்களுக்கும் உண்டு. இத்தகைய பிரமை, நாடு நகரங்களைக் கடந்து பல அபாயங்களுக்குத் துணிந்து, அரசாங்க அந்தரங்கப் பணியை நிறைவேற்றுவதற்காகப் பிரயாணம் செய்து கொண்டிருந்த நம்முடைய வாலிப வீரனுக்கும் இருந்ததில் ஆச்சரியம் இல்லை அல்லவா?

(தொடரும்)



• குமாரசாமி ராஜா

யாருக்கு அதிர்ஷ்டம்?

சென்னை சட்டசபையைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் நிர்வாக சபைத் தேர்தல் நாளை நடைபெறப் போகிறது. சென்ற மூன்று வருஷங்களாக இந்தச் சுபதினம் நெருங்கும்போது இம்மாகாணத்தின் அரசியலைத் தாபஜ்ஜுரம் பிடித்துக் கொள்வது வழக்கம். கட்சித் தலைவரே பிரதமராகையால், தலைமைப் பதவியில் உள்ளவரை மாற்றி, வேறொருவரைத் தேர்ந்தெடுப்பதுபற்றி ஆலோசனைகளும் சதியாலோசனைகளும் நடைபெறும். யார் தலைவராக அதாவது பிரதம மந்திரியாக வரக்கூடும் என்பது பற்றி எங்கே பார்த்தாலும் பேசப்படும்; பலவித ஹேஷ்யங்கள் வெளியாகும்; பலருடைய பெயர்கள் அடிபடும்; பலருடைய வள்ளல்களும் வண்டவாளங்களும் உண்மையாகவோ கற்பனையாகவோ வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். மொத்தத்தில் மாகாண அரசியல் குட்டை குழம்பிச் சேறாகி நாற்றமும் எடுத்துப் போகும்.

வருஷத்துக்கு ஒரு தடவை காங்கிரஸ் கட்சியின் தலைவரைத் தேர்ந்தெடுப்பது என்ற ஏற்பாட்டினாலேதான் மேற்கூறிய அமர்க்களங்கள் நடைபெற்று வந்தன. அதிர்ஷ்டவசமாக அந்த ஏற்பாட்டை மாற்றிவிட்டார்கள். கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர் மூன்று வருஷத்துக்கு அந்தப் பதவியை வகிப்பார் என்று செய்து விட்டார்கள். கனம் பி.எஸ். குமாரசாமி ராஜா, முதல் மந்திரியான பிறகு, அவர் முதல் மந்திரியான முதல் வருஷத்திலேயே, இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்து விட்டது. இது ஒரு பெரும் அதிர்ஷ்டம் என்பதில் சந்தேகமில்லை. இது, கனம் குமாரசாமி ராஜாவின் அதிர்ஷ்டமா, அல்லது சென்னை மாகாணத்தின் அதிர்ஷ்டமா என்று கேட்டால், இரண்டு பேருடைய அதிர்ஷ்டமுந்தான். ஆனால் ஸ்ரீ குமாரசாமி ராஜாவின் அதிர்ஷ்டத்தைக் காட்டிலும் மாகாணத்தின் அதிர்ஷ்டமே அதிகம் என்று சொல்ல வேண்டும். ஆகையால் நாளைய தினம் நடக்கப் போகும் நிர்வாக சபைத் தேர்தல் எவ்வித களேபரமும் இன்றி, சூழ்ச்சிகள் – சதியாலோசனைகள் இன்றி, அமைதியாக நடைபெறும் என்று எதிர்பார்க்கலாம்.

கனம் குமாரசாமி ராஜா தம்முடைய அதிர்ஷ்டத்தையும் மாகாணத்தின் அதிர்ஷ்டத்தையும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் நிர்வாகத்தில் சென்னை மாகாணம் முன்னொரு சமயம் அடைந்திருந்த நல்ல பெயரை மறுபடியும் அவருடைய காலத்தில் நிலைநாட்ட வேண்டும்.

அமரர் கல்கி

(என்ன சேதி)

— கல்கி, மார்ச் 19, 1950

மன அழுத்தத்துக்கு இடம் கொடுக்காதீர்கள்!

ரத்த அழுத்தம் – சென்ற இதழ் தொடர்ச்சி

சராசரியாக ஒருவரது ரத்த அழுத்தம் 120/80 (சிஸ்டாலிக்/டயஸ்டாலிக் அளவு) என்று இருந்தால் ஓ.கே. அதற்காக இதிலிருந்து ஓரளவு மாறுபட்டுவிட்டாலே அது பதற்றப்பட வேண்டிய விஷயம் என்று பொருளல்ல. எழுபது வயதில் ஒருவரது சிஸ்டாலிக் ரத்த அழுத்தம் 160 ஆக இருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் இருபது வயது இளைஞனுக்கு அப்படியிருந்தால் அது கவலைப்பட வேண்டிய விஷயம்.



• எடை கூடினால்...

ஒருவர் அதிக ரத்த அழுத்தம் கொண்டவரா என்பதை முடிவு செய்ய டாக்டர் ஒரே கணிப்பை நம்புவதில்லை. வெவ்வேறு நாட்களில் ரத்த அழுத்தத்தை சோதித்து விட்டுத்தான் அப்படி ஒரு முடிவுக்கு அவர் வருவார்.

இப்படித் தொடர்ந்து 'ஹைபர் டென்ஷன்' எனப்படும் அதிக ரத்த அழுத்தம் இருந்தால் உடனடி கவனிப்பு தேவை. சிஸ்டாலிக் அளவு 120 என்றோம் இல்லையா? இது 150 என்கிற அளவுக்கு முப்பது நாற்பது வயதுக்காரருக்கே இருந்தால் அது கொஞ்சம் கவலைப்பட வேண்டிய விஷயம். 190 அல்லது 200 லெவலுக்குப் போனால் அது மோசமான நிலை. உடனடி நடவடிக்கை தேவை. இல்லை என்றால் பக்கவாதத்தில் (ஏன், இறப்பிலும் கூட) அது முடிவடையலாம்!

இதற்கு நேரெதிரான சூழலும் உண்டு. சிஸ்டாலிக் அளவே கூட (120 லிருந்து) 60 அல்லது 70 என்கிற விபரீதமான அளவுக்கு சில சமயம் குறைந்துவிடலாம். இந்த அளவுக்குக் குறையும்போது ரத்த அழுத்தத்தில் டயஸ்டாலிக் அளவு என்ற ஒன்றையே கண்டு பிடிக்க முடியாது. ரத்த ஓட்டத்தை ஓரளவு சீராகக் கணிப்பது என்பதே அப்போது பெரிய விஷயமாகிவிடும். பெரும் மன அதிர்ச்சி, சிறுநீரகம் பழுதடைவது போன்றவற்றால் இப்படியொரு நிலை ஏற்பட வாய்ப்பு உண்டு.

சில பேர் 'low BP' என்று டயஸ்டாலிக் அளவு குறைந்து விடுவதைக் குறிப்பிடுவார்கள். உதாரணமாக 120/80 என்பது 120/60 என்று ஆகிவிட்டால் அதை low BP என்பார்கள். (ஏனென்றால் இதுவே 150/80 என்றால் அதிக ரத்த அழுத்தம் என்கிறோம், இல்லையா? அதே போன்ற லாஜிக்!) ஆனால் மருத்துவ அகராதியில் 'low BP' என்ற ஒன்று கிடையாது. 120/60 கூட அப்நார்மல் அல்ல.



• உப்பு கூடினால்...


அந்த நிலையில் தலை சுற்றுகிறது என்று கருதுபவர்கள் லைம்-சால்ட் நீரைப் பருகினால் சரியாகிவிடும். அவசரத்துக்குத் தண்ணீர் குடித்தால் கூட ஓரளவு பலனிருக்கும்.



• கொழுப்புணவு உண்டால்..

இன்னொரு சுவாரஸ்யமான கோணமும் ரத்த அழுத்தத்தில் உண்டு. கோபமும் டென்ஷனும் எல்லை கடந்தால், ரத்த அழுத்தம் அதிகமாகும் என்பது தெரிந்ததுதான். எப்படி அதிகமாகும்? 120/80

அட, இதுல இவ்வளோ



என்பது 150/100 என்பது போலா? அதுதான் இல்லை. சிஸ்டாலிக் ரத்த அழுத்தம்தான் டென்ஷனின்போது அதிகமாகுமே தவிர, டயஸ்டாலிக் அளவு இதனால் மாறி விடாது. அதாவது மேலே குறிப்பிட்ட உதாரணத்தில் டென்ஷனில் காச்மூச் என்று கத்தும் ஒருவரது ரத்த அழுத்தம் 150/80 என்பது போல் மாறவே வாய்ப்பு உண்டு!




• டென்ஷன் ஆனால்...

ரத்த அழுத்தம் அதிகமாவதற்கு சில முக்கியக் காரணங்கள் உண்டு. ஒருவரின் எடை அதிகமாகிக் கொண்டே போனால், இதயம் அதிகப்படியாக உழைத்து, ரத்தத்தை பம்ப் செய்ய வேண்டியிருக்கிறது – அப்போதுதானே விரிந்து பரந்திருக்கும் உடல் முழுவதற்கும் ரத்தம் செல்லும்!


கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை சாப்பிடுவதாலும் ரத்த அழுத்தம் ஏகத்துக்கு எகிறக் கூடும். இறைச்சியில் உள்ள கொழுப்பு, வெண்ணெய், தேங்காய்ப்பால், அதிகம் வறுக்கப்பட்ட மற்றும் எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவு வகைகள் ஆகியவை இந்தக் கோணத்தில் முக்கியக் குற்றவாளிகள். உடலில் சேரும் அதிகப்படி கொலஸ்ட்ரால் ரத்தக் குழாயின் உட்புறங்களில் ஒரு படலம் போலப் படிந்து விடுகிறது. இப்படிக் குறுகிவிட்ட பாதையில் அதே அளவு ரத்தம் செலுத்தப்பட வேண்டும் என்றால், அதிக அழுத்தம் தேவைப்படத்தானே செய்யும்?

அதிக ரத்த அழுத்தத்துக்கு உப்பு அதிகம் உணவில் சேருவதும் ஒரு காரணம். ஒரு நாளைக்கு ஒரு டீஸ்பூன் உப்பே நம் உடலுக்குப் போதுமானது. அதைவிட அதிகமான உப்பு உடலில் சேரும்போது பிரச்னை கிளம்புகிறது. சமையல் உப்பு என்பது சோடியம் க்ளோரைடுதான். ரத்தத்தில் உள்ள தண்ணீரை சோடியம் இழுத்துக் கொள்வதால் ரத்தத்தின் அளவும் சரி, ரத்த அழுத்தமும் சரி – அதிகமாகிறது. அதிக உப்பை உணவில் சேர்த்துக் கொள்வது என்பது, அதிக ரத்த அழுத்தம் உள்ளவர்களின் நிலையை மேலும் மோசமாக்கும்!



• மதுவருந்தினால்...

மனிதனாகப் பிறந்து விட்டால் மன அழுத்தம் (ஸ்ட்ரெஸ்) என்பது எப்போதாவது இருக்கத்தான் செய்யும். ஆனால் இதுவே தினசரி வாழ்வில் ஓர் அங்கமாகிப் போனால் ரத்த அழுத்தம் அதிகமாகும். புகைப் பழக்கமும், குடிப்பழக்கமும் ரத்த அழுத்தத்தை அதிகமாக்கி, இதய நோய் உண்டாகும் வாய்ப்பைக் கணிசமாக அதிகரிக்கச் செய்கிறது என்பது நிரூபணமான ஓர் உண்மை.



• புகைத்தால் - பி.பி. கூடும்!

— ஜி.எஸ்.எஸ்.

விஷயம் இருக்கா? – 2



காதல் டைரிக் குறிப்பு:

ச்சே! என்ன இது. வேலைக்கு விண்ணப்பம் எழுதினாலும் வார்த்தைகள் கவிதை வரிகளாக விழுகின்றன..?

பிரமிப்பு மாறாமல் அரவிந்தைப் பார்த்த பிருந்தா, "ரொம்ப ஆச்சரியமா இருக்கு" என்றாள் காகிதக் கைக்குட்டையை எடுத்துத் தன் உதடுகளை நாசூக்காக ஒற்றியபடி.

"என்ன ஆச்சரியம்?" என்றான் அரவிந்த்.

"மூணு வருஷம் முன்னாடி அந்தப் போட்டில என்ன பாட்டுப் பாடி பிரைஸ் வாங்கினேன்னு என்னை யாராவது கேட்டிருந்தா நிச்சயமா நான் முழிச்சிருப்பேன். நீங்க கரெக்டா அந்தப் பாட்டையே சொன்னது நிஜமாவே ஆச்சரியமா இருக்கு."

"அந்த அளவுக்கு அன்னைக்கு உங்க குரல் என் மனசுல பதிஞ்சிடுச்சிங்க. அப்புறம் என் சிஸ்டர்கிட்டகூட, 'இந்தப் பொண்ணு சினிமால பாட ஆரம்பிச்சா ரொம்ப சீக்கிரம் டாப்புக்கு வந்துடும்'னு சொன்னதும் எனக்கு ஞாபகமிருக்கு."

அவள் மென்மையாகப் புன்னகைத்தாள்.

அந்தப் புன்னகையில் இப்போது தன் காரிய நோக்கமோ, காக்காய் பிடிக்கும் தந்திரமோ இல்லை.

ஒரு சின்ன நெருக்கமும், இதமும் அந்தப் புன்னகையில் தெரிந்தது. தன்னை வெகு நாட்களாக ஒருவன் நினைவில் வைத்திருப்பதற்கான மகிழ்ச்சி அந்தப் புன்னகைக்குள் பதுங்கியிருந்தது.

"சினிமால பாடறதுக்கு ஏதாவது முயற்சி செய்திருக்கீங்களா?"

"இல்லைங்க."

"ஏன்?"

"புரியலை சார். ஏன் நான் முயற்சி செய்யணும்?"

"யாரோ லட்சத்தில் ஒருத்தருக்குத்தான் வாய்ப்பு வீடு தேடி வரும். பொதுவா வாய்ப்புக்கு நாமதானே முயற்சி செய்யணும்?"

"உண்மைதான். என்னோட லட்சியம் அதுவா இருந்தாத்தானே எனக்கு முயற்சி செய்யணும்னு தோணும்?"

"இவ்வளவு நல்ல குரல் வளம் உங்ககிட்ட இருக்கிறப்போ உங்களுக்குப் பாடணும். புகழடையணும்னு ஆசை இல்லையா?"

நான் உன்னை சுவாசிக்கிறேன்

6

பட்டுக்கோட்டை பிரபாகர்

"பாடணுங்கற ஆசை இருக்கு. நேரம் கிடைக்கிறப்ப எல்லாம் பாடறதும் உண்டு. ஆனா புகழடையணும்னு ஆசை இல்லை."

"ஏன் அப்படி? சினிமால பாடினா புகழுக்குப் புகழும், பணத்துக்குப் பணமும் கிடைக்குமே... உங்க திறமை நிறைய பேருக்குத் தெரியுமே."

"என் திறமை என் குரல்ல மட்டும்தான் இருக்குன்னு நான் நம்பலை. ரெண்டாவது, என் திறமை ஏன் நிறைய பேருக்குத் தெரியணும்?"

"அப்புறம் எதுக்கு அன்னைக்கு காலேஜ் விழால பாடினீங்க?"

"ஒரு சந்தோஷத்துக்காக."

"பரிசு வாங்கினப்போ எல்லாரும் கைதட்டினாங்களே, அது இன்னும் சந்தோஷத்தைக் கொடுத்ததா இல்லையா?"

"கண்டிப்பா."

"அங்கே ஆயிரம் பேர் கைதட்டினாங்க. சினிமால பிரபலமானா லட்சம் பேர் கைதட்டுவாங்களே..."

"ஒரு செயல் செய்யறப்போ கைதட்டல் வாங்கி சந்தோஷப்படறதுக்கும், அந்தக் கைதட்டல் சந்தோஷத்துக்காகவே ஒரு செயல் செய்யறதுக்கும் வித்தியாசம் இருக்குன்னு நான் நினைக்கிறேன் சார்."

"ஏதோ ஒரு காரணத்தாலே உங்களுக்கு சினிமாத்துறை பிடிக்கலைன்னு புரியுதுங்க."

"எனக்கு சினிமாத்துறை பிடிக்குது. பிடிக்கலைன்றதே இங்க பிரச்னை இல்லைங்க. என் பாதை அது இல்லை. என் பயணம் அதை நோக்கி இல்லை. அதனால நான் முயற்சி செய்யலை."

அரவிந்த் மௌனமானான்.

அவளுடைய கருத்தில் தெளிவில்லாதது போல அவன் உணர்ந்தான். தான் சராசரி இல்லை என்று ஸ்தாபிக்க வேண்டி, தன்னைப் பற்றி விசேஷமாக ஒரு அடையாளத்தைப் பதிக்க வேண்டி பிடிவாதமாக அவள் வாதம் செய்வதாகப் பட்டது.

மேற்கொண்டு இதில் வாதம் செய்ய அவனுக்கு விருப்பமில்லை.

பல சமயங்களில் வாக்குவாதம் மன வருத்தங்களைத்தான் ஏற்படுத்துகின்றன என்பதை அவன் அனுபவத்தில் உணர்ந்திருந்தான்.

ஒரு வாதம் துவங்கும்போதே 'என் கருத்துதான் சரியானது' என்கிற பிடிவாதமும் 'இதை வலியுறுத்தி உன்னை பதில் பேச முடியாதபடி செய்கிறேன் பார்!' என்கிற மௌன உள்சவாலும், வாதத்தின் போக்கில் எதிர்வாதத்தில் சரியான நியாயமிருந்தாலும்கூட தன் கருத்து தப்பானது என்று ஒப்புக் கொள்வதால் கௌரவம் பாதிக்கப்படுமே என்கிற அகங்காரமும் சேர்ந்து கொண்டு... வாதத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்துத் தலைப்பு காணாமல் போய் 'நீ புத்திசாலியா, நான் புத்திசாலியா?' என்கிற ஆணவக் கொக்கரிப்பில் வார்த்தைக் கத்திகள் சுழலும்போது சுரீர், சுரீர் என்று காயப்படுத்தி விடுகின்றன.

சில சமயம் ரத்தம் வராத சிராய்ப்புக் கோடுகள், சில சமயம் ஆழமாகப் பதிந்து ரத்தம் கொட்டி... பிறகு காயம் ஆறினாலும் வடுக்களாகி வாழ்க்கை முழுவதும் அந்த வாதத்தை நினைவுபடுத்துகின்றன.

அதனால் பிருந்தாவோடு வாதம் செய்வதைத் தவிர்க்க நினைத்தான் அரவிந்த்.

இவன் எதிரில் இருக்கும்போது, என்னைப் பார்க்கும்போது, என்னைப் புன்னகைக்கும்போது, நான் பேசு

வதை விழிகள் மலர்த்திக் கேட்கும்போது மனதிற்கு இனிமையாக இருக்கிறது.

வாதத்தால் இந்த இனிமை கெடக்கூடும். நான் சிந்தும் ஏதாவது ஒரு வார்த்தை இவன் மனத்தை காயப்படுத்தக்கூடும்.

"ஓகே. ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு கொள்கை" என்று சொல்லி, மேற்கொண்டு இதைப் பற்றிப் பேச வேண்டாம் என்பது போல, "உங்களைப் பத்திச் சொல்லுங்களேன் பிருந்தா" என்றான்.

"எனக்குச் சொந்த ஊர் கும்பகோணம். நான் ஸ்கூல் படிப்பு படிச்சதெல்லாம் அங்க தான். அப்பா சின்ன வயசிலயே காலமாயிட்டார். அம்மா இருக்காங்க. ஒரே ஒரு அண்ணன். அவர் கும்பகோணத்தில் பாத்திரக் கடை வெச்சிருக்கார். அவரோடதான் அம்மா இருக்காங்க. நான் மெட்ராஸ்ல ஹாஸ்டல்ல தங்கி காலேஜ் படிச்சேன். படிச்சி முடிச்சி இந்த மூணு வருஷத்தில ஆறு கம்பெனில வேலை பார்த்துட்டேன். இப்ப வேலை பார்த்துட்டிருக்கிற டயர் ஏஜென்சில மானேஜர். ரெண்டு ஃபிரண்ட்ஸோட சேர்ந்து திருவான்மியூர்ல ஒரு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கியிருக்கேன்."

சர்வர் பில் கொண்டு வந்து வைத்தான்.

"நான் கொடுக்கறேங்க" என்றான் அரவிந்த்.

"நோ.நோ. நான்தான் உங்களை கூப்பிட்டேன். நான்தான் கொடுக்கணும்" என்று கைப்பை திறந்து பணம் எடுத்து வைத்தாள்.

பாக்கி வந்ததும் எழுந்து கொண்டார்கள். மறுபடியும் சாலையைக் கடந்து இந்தப் பக்கம் அவன் பைக்கை நிறுத்தியிருந்த இடத்திற்கு வந்தார்கள்.

"உங்க சிஸ்டர்கிட்ட கண்டிப்பா மறுபடி நீங்க பேசணும் சார். ப்ளீஸ்..."

"ஷ்யூர். இது ஒம்போது பேர் வாழ்க்கை சம்பந்தப்பட்டதாச்சே."

"என்னைப் பத்திக்கூட எனக்குக் கவலை இல்லை சார். இந்த ஏழாவது வேலை போயிடுச்சன்னா சீக்கிரத்தில எட்டாவது வேலை தேடிக்க முடியும். மத்தவங்களுக்கு குவாலிஃபிகேஷன் அதிகம் இல்லை. வேற வேலை தேடிக்க ரொம்ப சிரமப்படணும். அவங்களுக்காகத்தான் உங்ககிட்ட பேசிட்டு இருக்கேன்."

"நான் பேசி என் சிஸ்டர் மனசை மாத்தி உங்களுக்கு நல்ல முடிவாச் சொல்றேன். பை தி பை, நீங்களே சொன்னதால கேக்கணும்னு ஒரு ஆர்வம். எதுக்காக ஒரு இடத்தில நிலைக்காம அடிக்கடி வேலையை மாத்திக்கிறீங்க?"

"சில இடங்கள்ல என்னை அவங்களால சகிச்சுக்க முடியாது. சில இடங்கள்ல அவங்களை என்னால சகிச்சுக்க முடியாது. நான் வர்றேன் சார். உங்க போனுக்காக நான் காத்துக்கிட்டிருப்பேன்."

அவள் கைகூப்பிவிட்டு, தூரத்தில் இருந்த பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள்.

அவனுடைய டயர் ஏஜன்சி அலுவலகத்தைக் கடந்துதான் இப்போது அவன் போக வேண்டியிருந்ததால், 'உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா, வாங்க, உங்க ஆபீஸ்ல உங்களை டிராப் பண்றேன்' என்று சொல்லலாம் என்று அவன் நினைத்திருக்க...

அவள் சட்டென்று புறப்பட்டுப் போய்விட்டதை ஏமாற்றமாக உணர்ந்தான்.

இப்போதுகூட பைக்கில் சென்று பஸ் ஸ்டாப்பில் நின்றபடி புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் அவளருகில் நிறுத்திக் கேட்க வாய்ப்பிருக்கிறது.

அதை அவள் ரசிக்கலாம். ஏற்றுக் கொள்ளலாம். அல்லது ரசிக்காமல் போகலாம். மறுக்கலாம். அல்லது இயல்பாய் ஏற்க விருப்பமின்றி, மறுத்தால் உதவி செய்யாமல் போய் விடுவானோ என்பதற்காக மறுக்கவும் முடியாமல் தவிக்கலாம்.

அவளை தர்மசங்கடப்படுத்த விரும்பாமல் அவளைக் கடந்தான். கடக்கும்போது ஹார்ன் அடித்தான். அவள் புத்தகத்திலிருந்து நிமிரவில்லை. ஆனால் அவன் கடந்த பிறகும் ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்றான்.

சோமசுந்தரம் அழைப்பு மணி அழுத்திவிட்டுக் காத்திருந்தார்.


'பீப்ஹோல்' வழியாக அவரைப் பார்த்த நிர்மலா ஓடிச் சென்று டி.வி.யை அணைத்து

"தலைவரே! நம்ம ஆட்சியிலே இருக்கிற குறைகளைச் சுட்டிக்காட்ட நாளைக்குப் பொது மக்கள் கழுதையிடம் மனு கொடுக்கும் போராட்டம் நடத்தப் போறாங்களாம்."

"ஐயய்யோ! இதை எப்படிய்யா தடுப்பது?"

"நீங்க இன்னைக்கே வெளியூர் கிளம்பிப் போயிடுங்க!"

– க. சரவணக்குமார்



விட்டு வந்து கதவைத் திறந்தாள்.

ஸஃபாரி அணிந்திருந்த அவர், காய்கறிகள் நிரம்பின பையையும், ஸ்கூட்டரின் சாவியையும் அவளிடம் ஒப்படைத்துவிட்டு, "பனங்கிழங்கு இருக்கும்மா இதில. நாளைக்கு வேக வைக்கச் சொல்லு" என்றுவிட்டு தன் அறைக்குள் சென்று ஷூ கழற்றினார்.

அம்மா அவசரமாக உள்ளே வந்து அவர் கழற்றின ஸஃபாரியை வாங்கி ஹேங்கரில் மாட்டினபோது பாக்கெட்டில் செருகியிருந்த பேனா கீழே விழுந்தது.

"உடைச்சுட்டியா? நான் எடுத்து மாட்ட மாட்டேனா? பார்க்கர் பேனாடி. என்னாச்சுன்னு பாரு..."

பேனாவை எடுத்து உற்றுப் பார்த்துவிட்டு, "ஒன்னும் ஆகலை, வளையல் மாட்டி இழுத்துடிச்சி" என்றாள் அம்மா.

"நடந்ததுக்கு நூறு விளக்கம் தரலாம்" என்று லுங்கி கட்டிக் கொண்டார்.

"ஏன் கோபமா இருக்கீங்க? ஆபீஸ்ல ஏதாச்சும் பிரச்னையா?"

"கேட்டுட்டே இல்லை? நாளையிலேர்ந்து ஆபீஸ்லயும் பிரச்னை வந்துடும்."

சோமசுந்தரம் டாய்லெட் அறைக்குள் சென்று கதவை மூடிக் கொள்ள, அம்மா அவர் கழற்றி கட்டிலில் போட்ட பேண்ட்டை எடுத்துச் சீராக மடிப்பு மாறாமல் ஹேங்கரில் போட்டுவிட்டு ஹாலுக்கு வந்தாள்.

"அம்மா, அப்பா மூட்ல இல்லை. நீ சும்மா எதையாச்சும் சொல்லிக் கிளறாதே! போயி ஆம்லெட் போடு" என்றாள் நிர்மலா.

சோமசுந்தரம், டைனிங் டேபிளின் முன் நாற்காலியை நகர்த்திய ஓசையிலேயே கோபம் தெரிந்தது.

எதுவும் பேசாமல் பிளேட்டில் ஆம்லெட் வைத்து அவர் முன் வைத்தாள் அம்மா.

மிளகுத் தூள் எடுத்துத் தட்டிக் கொண்டார். அடுத்து உப்பு டப்பா எடுத்துத் தட்டும்போது மூடி கழன்று மொத்த உப்பும் கொட்டியது.

"ஏண்டி, இந்த மூடி லூசாயிடுச்சா. வேற டப்பால போட்டு வைன்னு நேத்தே சொன்னனே... ஒரு தடவை சொன்னா செய்ய மாட்டியா?"

அம்மா அவசரமாக உப்பு கொட்டின பகுதியை மட்டும் கிள்ளி வேறு ஒரு தட்டில் வைத்தாள்.

கடுகடுவென்று சாப்பிட்டார்.

"இன்னொண்ணு..." இழுத்தாள் அம்மா.

"வேணாம்" என்று எழுந்து கை கழுவி சோபாவில் அமர்ந்து, "நிர்மலா ஈபி. பில்லு கட்டியாச்சா?" என்றார்.



"அரசியலை விட்டே தலைவர் விலகப் போறாரா! ஏன்? கட்சித் தேர்தல்ல தோற்று விட்டதாலா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, டாக்டர் அவரை சோடாவே குடிக்கக் கூடாதுன்னு சொல்லிட்டாராம்!"

– வி. ரெங்கநாதன்

"நாளைக்குக் கட்டிடறதா அரவிந்த் சொன்னான்."

"நாளைக்கு லாஸ்ட் டே. கூட்டம் அதிகமா இருக்கும். அதனாலதானே இன்னைக்குக் கட்டச் சொன்னேன்."

நிர்மலா அமைதியாக இருந்தாள்.

"எங்க அவன்?"

"இன்னும் வரலை."

"எங்க போயிருக்கான்?"

"தெரியலை."

"இந்த இடத்துக்குப் போறேன்னு சொல்லிட்டுப் போற பழக்கம் எல்லாம் இல்லையா? இப்ப திடீர்னு எனக்கு ஹார்ட் அட்டாக் வந்து செத்துப் போய்ட்டா எங்க போய்த் தேடுவே அவனை?"

அம்மா பதறி, "ஏங்க... இப்படியெல்லாம் பேசறீங்க."

"சும்மா இருடி! அப்படி ஒரு அருமையான பிள்ளையைப் பெத்து வெச்சிருக்கே..."

இப்போது அழைப்பு மணி ஒலித்து, நிர்மலா திறந்து, அரவிந்த் உள்ளே வந்தான்.

"அம்மா..." என்று உற்சாகமாக ஏதோ சொல்ல ஆரம்பித்தவன், சோபாவில் அப்பாவைப் பார்த்ததும் குரலைத் தணித்து, "நான் வெளில சாப்டுட்டேன். எனக்கு எதுவும் வேணாம்மா" என்றுவிட்டு தன் அறையை நோக்கி நடந்தான்.

"நில்லுடா!" என்றார், சோமசுந்தரம் அதட்டலாக.

நின்றான். "என்ன?" என்றான்.

"இங்க வா! என்னதான் நினைச்சிட்டிருக்கே உன் மனசுல?"

அரவிந்திற்கு நெற்றியோர நரம்புகள் துடித்தன. அவர் கேள்வியில் ஒரு யுத்தத்திற்கான துவக்கத்தை உணர்ந்தான்.

அருகில் சென்று, "என்ன சொல்றீங்க?" என்றான்.


(தொடரும்)

தமிழே...

தமிழே...

தமிழுக்காக ஓர் உருப்படியான காரியத்தை விஜய் டீ.வி. செய்து வருகிறது.

'இயன்றவரை இனிய தமிழ்' என்ற தலைப்பில் பிரதி வெள்ளிக் கிழமை மாலை ஐந்து மணிக்கு ஒரு தொடர் நிகழ்ச்சி. இயக்குபவர் ரவிசுப்ரமணியன். அரைமணி நிகழ்ச்சியை, 'இந்த வாரத் தமிழறிஞர்', 'மொழித்திறன் அறிவோம்', 'இவைத் தமிழல்ல' என்று மூன்று விதமாகப் பிரித்து, நிகழ்ச்சியைத் தருகிறார். இந்தப் பகுப்பும் அடிக்கடி மாறுகிறது.



* தமிழண்ணல்



* ரவி சுப்ரமணியம்

மொழியியல் அறிஞரான தமிழண்ணலை நடுநாயகமாக வைத்து, கலந்துரையாட வைத்திருப்பது சிறப்பு. (ஆனால் உடன் உரையாடும் சிவமீனாட்சி ஆனந்தியும், ராமகிருஷ்ணாவும் அதிகம் ஆங்கிலத்தில் பேசுவது இடறுகிறது.) ஒருவேளை ரொம்பவும் செந்தமிழில் பேசினால் செயற்கையாக இருக்கும் என்று எண்ணி அவர்கள் போக்கில் விட்டு விடுகிறார்களோ? அவர்களின் ஆங்கிலச் சொற்களை வெகு இயல்பாகப் பேச்சுவாக்கில் தமிழண்ணல் தமிழ்ப்படுத்தி விடுகிறார்.

"பெருஞ்சித்திரனார் போல செந்தமிழில்தான் பேச வேண்டும் என்றால் படித்த மக்கள் ஓடி விடுவார்கள். ஓரளவு தமிழ் நோக்கி மக்களை தழுவிக் கொள்ளச் செய்ய வேண்டுமானால் நாம் சற்று கீழிறங்கி எளிமைப்படுத்த வேண்டும். தினமணியில் திரும்பத் திரும்ப எழுதியதால் இன்று 'கார்டு', அஞ்சலட்டை என்று மக்களிடையே இலகுவாகப் புழங்குகிறது" என்கிறார் தமிழண்ணல்.

பழைய சொற்களுக்கு இன்று உபயோகம் இல்லையே என்று தமிழண்ணலிடம் கேட்டோம்.

"வளி என்று தனியாகச் சொன்னால் காற்று என்று சொல்ல மறந்து விட்டோம். ஆனால் சூறாவளி என்றால் சுழன்று வீசும் காற்று என்று புரிந்து வைத்திருக்கின்றனர்."

மக்களிடம் அர்த்தம் தெரியாமல் புழங்கும் பழஞ்சொற்களை இயல்பாக அர்த்தப்படுத்துகிறார் தமிழண்ணல்.

இந்நிகழ்ச்சி இயக்குனர் ரவிசுப்ரமணியன், "தமிழுக்கு உள்ள வாசகர்களைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். புதியவர்களை நம் மொழிப் பக்கமாக ஈர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையில் ரபிபெர்னாட் இப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார்" என்று கூறினாலும் இந்நிகழ்ச்சி, மக்கள் மத்தியில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தி விடவில்லை என்றுதான் கூற வேண்டும்.

"BA, M.A., M.Phil., P.hd படிக்கிற தமிழ் மாணவர்களிடமிருந்து எந்த விமர்சனமும் வருவதில்லை. அது கூடப் போகட்டும். கல்லூரிப் பேராசிரியர்களிடமிருந்து ஒரு கடிதம் கூட வந்ததில்லை. மின்சார வாரியம், முனிசிபாலிட்டி, ஓய்வு பெற்ற உயரதிகாரிகள், வக்கீல்களிடமிருந்துதான் நிறைய கடிதங்கள் வருகின்றன" என்கிறார் ரவி சுப்ரமணியன்.

இன்னொரு விஷயம். இந்தத் 'தமிழ் மொழி' நிகழ்ச்சியை ஸ்பான்சர் செய்ய எந்த விளம்பரதாரரும் முன்வரவில்லையாம். தமிழக அரசு நிறுவனங்கள் உட்பட!

— யுகாந்தன்

சபாஷ், சரியான போட்டி!

"**ஹா**சன் தொகுதியில் தங்கள் கட்சியின் சார்பில் போட்டியிடப் போவது 'சுசீலா ஷிவப்பா' என்ற பெண்மணி" என்று பி.ஜே.பி. அறிவித்ததில், பலருக்கும் வியப்பு. காரணம் அவர் மோதப் போவது முன்னாள் இந்தியப் பிரதமர் தேவே கௌடாவுடன்.

1991-ல் இதே தொகுதியில் போட்டியிட்டு தேவேகௌடா வென்றிருக்கிறார். ஆனால் அவர் வென்றது சுமார் மூவாயிரம் வோட்டு வித்தியாசத்தில்தான். 1996 தேர்தலில் அவர் எம்.பி. பதவிக்குப் போட்டியிடவில்லை.

"நான் கர்நாடக முதல்வராகி விட்டேன். இனி மாநில அரசியல்தான் எனக்கு ஏற்றது" என்று அறிவித்து விட்டார். பிறகு பிரதமராகும் போது கூட 'கொல்லைப்புற வழியாகத்தான்' (ராஜ்யசபை) பாராளுமன்றத்தில் புகுந்தார்.



• சுசீலா

இருந்தாலும் – என்னதான் தூங்கி விழுந்த பிரதமர் என்று பத்திரிகைகள் கிண்டலடித்தாலும் – தங்கள் மண்ணின் மைந்தன் நாட்டையே ஆண்டது பற்றிய பெருமிதம் ஹாசன் தொகுதி மக்களில் கணிசமானவர்களுக்கு இருக்கிறது. அதை நம்பித்தான் தேவேகௌடா அங்கு மீண்டும் களத்தில் இறங்கியிருக்கிறார்.

கட்சிகள் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளாது என்றாலும் ஜாதிக்கு இங்கும் ஒரு முக்கியப் பங்கு இருக்கவே செய்கிறது. ஹாசன் தொகுதியில் ஒக்கலிகா பிரிவைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் அதிகம். தேவே கௌடாவும் சரி, காங்கிரஸ் வேட்பாளர் புட்டசாமி கௌடாவும் சரி, இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்தாம். இந்தப் பிரிவைச் சேர்ந்த உள்ளூர் பாப்புலர் தலைவர்கள் யாரும் பி.ஜே.பியில் இல்லை. தவிர மற்றொரு பிரிவான லிங்காயத் மக்களை அப்படியே தங்கள் கட்சியில் வளைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் பி.ஜே.பி. அந்தப் பிரிவைச் சேர்ந்த சுசீலா ஷிவப்பாவைத் தேர்ந்தெடுத்துள்ளது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்து.

"சரித்திரம் திரும்பும். ஹாசன் இன்னொரு சிக்கொடியாக விளங்கும்" என்று கொக்கரிக்கிறது பி.ஜே.பி.

சிக்கொடி?

அங்குதான் காங்கிரஸ் ஜாம்பவானான சங்கரானந்தை அரசியல் பின்னணியே இல்லாத, ஜனதாதள கட்சியைச் சேர்ந்த ரத்னமாலா என்ற பெண்மணி சென்ற தேர்தலில் மண்ணைக் கவ்வ வைத்தார்! (இந்த முறையும் சங்கரானந்த் சிக்கொடியில்தான் போட்டியிடுகிறார் என்பது வேறு விஷயம்)

சுசீலாவின் கணவர் ஷிவப்பா ஏற்கெனவே ஒருமுறை ஹாசன் தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறார். என்றாலும் அதற்காக சுசீலாவை ஒரேயடியாக ராப்ரி தேவியோடு ஒப்பிட்டு விடக் கூடாது. மாவட்ட அளவில் மகளிர் இயக்கங்களில் பங்குகொண்டு அரசியல்வாதிகளோடு மோதிய அனுபவம் சுசீலாவுக்கு உண்டு. முன்பு கொடுகு பகுதி தனி மாநிலமாக இருந்த காலத்தில், அதில் அமைச்சராக இருந்த மல்லப்பாவின் மகள்தான் சுசீலா ஷிவப்பா.

பெண்கள் வோட்டுக்களை அள்ளிக் கொள்ளும் நோக்கத்தோடு நிறைய மகளிர் ஊர்வலங்களையும் ஏற்பாடு செய்து வருகிறது பி.ஜே.பி! ●

பெங்களூரிலிருந்து : **குல்லூ**



தேர்தல் '98

● பெரம்பலூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் பி.வி. சுப்பிரமணியன் கைரேகை, ஜாதகம் பார்த்துப் பலன்களைக் கணிப்பாராம். காங்கிரஸ் ஆபீஸில் பெரும்பாலானவர்களுக்கு ஜோசியம் பார்ப்பவர் அவர்தானாம். "உங்க ஜாதகம் என்ன சொல்லுது? தேர்தலின் வெற்றி வாய்ப்பு எப்படி?" என்று நண்பர் கேட்டபோது மனிதர் சீரியஸானார். "ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதிகளில் பெரும்பான்மையாக உள்ள குறிப்பிட்ட ஜாதியினர், மற்றவர்களை வோட்டுப் போட விடாமல் வோட்டுச் சாவடியைக் கைப்பற்றி விடுவார்கள்; அதை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது" என்றாராம். பெரம்பலூர் தொகுதி, ரிஸர்வ் தொகுதி.



காதில் விழுந்தவை:

● செங்கல்பட்டு தி.மு.க. வேட்பாளர் பரசுராமனுக்கு இந்த முறை ஸீட் கொடுக்கக் கூடாதென்று மாவட்டச் செயலாளர் சண்முகம் முட்டி மோதியும் கலைஞர் மீண்டும் அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். இதனால் மாவட்டம் அப்செட். மாவட்டத்தின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்ட பரசுராமன், பழைய பகையை மறந்து இப்போது தாய்க் கழகத்திற்குத் திரும்பியிருக்கும் மதுராந்தகம் ஆறுமுகத்தின் தோழமையை நாடியிருக்கிறார். "தொகுதியை ஒரு கலக்குக் கலக்கிடலாம்" என்று புறப்பட்டிருக்கிறார்.

● ஸ்ரீபெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் ஜெயக்குமாருக்கு ஸீட் கிடைத்ததே பெரிய விஷயம். மனிதர் எந்தக் கோஷ்டியையும் சேர்ந்தவர் கிடையாது. டெல்லியில் அரசுப் பதவியில் சிறிது நாள் இருந்தவராம். சீதாராம்

"தேர்தலுக்கு முன்பு ரஜினி உடுவோர்!"

கேசரியை நன்றாகத் தெரியுமாம். ஒரு மாத காலம் தில்லியில் உட்கார்ந்து, கேசரிக்கு சோப்புப் போட்டு ஸீட் வாங்கியிருக்கிறார். தங்கபாலுவுக்கு அல்வா கொடுத்து விட்டார் ஜெயக்குமார்.

● த.மா.கா. வேட்பாளர்களில் மிகவும் வசதியானவர் யார்? சிதம்பரம்? அடைக்கலராஜ்? "ம்ஹூம். கிடையாது. கடற்கரையோரம் கிடைக்கும் அரிய மணலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கோடிக்கணக்கில் சத்தமில்லாமல் சம்பாதித்தவர்தான் தூள் பார்ட்டி" என்கிறது த.மா.கா. வட்டாரம். சத்தமில்லாமல் அந்த முருகப் பெருமானின் திருவருளால் செழிப்பாகி விட்டார் அவர் என்கிறார்கள்.

● அ.இ.அ.தி.மு.க. அலுவலகத்தில் சேடப்பட்டியின் கொடி எப்போதும் உயரப் பறந்தபடியே இருக்கும். இதனால் பலருக்கு எரிச்சல். இப்போது பெரியகுளத்தில் அவர் போட்டி விடுவதால் தேர்தல் பிரசாரத்தில் பிஸியாக இருக்கிறார் ஐயா. போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்குச் சென்னையிலிருந்து பிரசாரப் போஸ்டர்கள், கேஸட்டுகள், கொடிகள், தோரணங்கள் என்று ஒருங்கிணைத்து அனுப்ப வேண்டிய பொறுப்பு செல்வகணபதிக்கும், மதுசூதனனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. "சேடப்பட்டியை சில நாட்களாவது கடுப்படிக்க வைக்கலாமே!" என்ற ரீதியில் இந்த விஷயத்தில் செயல்படுகிறார்களாம் தலைமை நிலையத்தின் தாற்காலிகப் பொறுப்பாளர்கள். இது எப்படியிருக்கு?

● பாண்டிச்சேரி தி.மு.க., த.மா.கா. கூட்டு அமைச்சரவையில் முதல்வர் ஜானகிராமனுக்கும் (தி.மு.க.) உள்துறை அமைச்சர் கண்ணனுக்கும் (த.மா.கா.) தொடர்ந்து ஈகோ

கிளாஸ் உண்டு. பாண்டி பாராளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வசம் இருந்ததால், அத் தொகுதி த.மா.காவுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று மூப்பனாரிடம் வற்புறுத்தி வந்தார் கண்ணன். தி.மு.க.வுக்குத் தொகுதி ஒதுக்கப் படவே, கண்ணனும் அவரது ஆதரவாளர்களும் காற்றிறங்கிய பலூன் ஆகி விட்டார்கள். அவர்களது போக்கைக் கேட்டுணர்ந்த மூப்பனார் மிகத் தெளிவாகவே "தி.மு.க. வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு!" என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டாராம். த.மா.கா. போட்டியிடும், பக்கத்துத் தொகுதியான கடலூருக்குப் போய் வேலை செய்ய நினைத்தவர்கள் இப்போது பாண்டியை வலம் வருகிறார்களாம்.

● ஹாங்காங்கிலிருந்து ரஜினி கலைஞரைத் தொடர்பு கொண்டார் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. ரஜினியைப் பொறுத்தவரை கலைஞரை ஸ்டாலின் மூலமாகவும், மூப்பனாரை கராத்தே தியாகராஜன், வெற்றிவேல் ஆகியோர் மூலமாகவும் தொடர்பு கொள்கிறார். எந்த விஷயமென்றாலும் இவர்கள் மூலம்தான் பரிமாறிக் கொள்ளப்படும். சத்திய மூர்த்தி பவனில் நண்பர் ஒருவர் 'என்னப்பா ரஜினி வருவாரா?' என்று கேட்டதற்கு "தேர்தலுக்கு இரண்டு நாட்கள் முன்பு பத்திரிகையாளர் சந்திப்பு இருக்கலாம்" என்று நம்பிக்கையாகச் சொன்னார் கராத்தே.

● மத்திய சென்னை அ.இ.அ.தி.மு.க. வேட்பாளர் ஜெயகுமாருக்கு நேரம் சரியில்லை. மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த இவருக்கு, வட சென்னை ராயபுரம், திருவொற்றியூர் பகுதியில் செல்வாக்கு உண்டு. அவரை மத்திய சென்னையில் மாறனை எதிர்த்து நிற்க வைத்திருக்கிறார் ஜெ. அப்படி, இப்படி வடசென்னை ஆட்களைக் கொண்டு மனுதாக்கலை அட்டகாசமாகச் செய்து பிரசாரத்தைத் துவங்கு முன் ஒரு சோகம்.

ஜெயக்குமாரின் அப்பா மரணம் அடைந்து விட்டார்.

● சரத்குமாரை எதிர்த்துப் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் கடம்பூர் ஜனார்த்தனன் பற்றி, தொகுதியில் நல்ல பெயர் இல்லையாம். "சில எக்ஸ்பிரஸ் ரயில்களைக் கடம்பூரில் ஒரு நிமிடம் நிற்க வைத்ததைத் தவிர தொகுதிக்கு வேறெதுவும் செய்ததாகத் தெரியவில்லை!" என்கிறார் நெல்லை வியாபாரப் பிரமுகர் ஒருவர். "இந்தத் தொகுதியில் இந்த முறை ஏகப்பட்ட பணம் விளையாடும்!" என்கிறார் அவர். ●

— திலீப்பா

கல்கி–சரவணா ஸ்டோர்ஸ் இணைந்து வழங்கும்

வாரம் ஒரு பட்டுப் புடைவை!

இந்த வாரப் பட்டுப் புடைவையைப் பெறுவதற்கான கேள்வி:

இந்த இதழ் முழுவதையும் கவனமாகப் படியுங்கள். ஏதோ ஒரு கட்டுரையில், 'ரஜினி ரசிகர்கள், காங்கிரஸுக்காகக் கடுமையாகப் பாடுபடுகிறார்கள்' என்று ஒரு பிரமுகர் கூறியிருக்கிறார். யார் அவர்?

கீழுள்ள கூப்பனில் எழுதி அனுப்புங்கள். ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். அத்தனை கூப்பன்களும் ஒரிஜினலாக இருக்க வேண்டும். ஜெராக்ஸ் பிரதிகள் செல்லாது.

கூப்பன்கள், ஆசிரியர், கல்கி, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல் சென்னை-600 097 என்ற முகவரிக்கு வந்து சேரக் கடைசித் தேதி: 23.2.98.

உறையின் மேல் 'பட்டுப் புடைவைப் போட்டி - 6' என்று தவறாமல் குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

பட்டுப்புடைவை பரிசுப் போட்டி – 6

அந்தப் பிரமுகர் : ....

எந்தக் கட்டுரை : ....

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

என்னை செதுக்கி இருக்கிறார்கள்!

சின்ன வயதில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்கின்றன. அவற்றிற்கெல்லாம் அப்போது அர்த்தம் தெரிவதில்லை. ஆனால் காலப்போக்கில் வளர்ந்த பிறகு, பின்னோக்கிப் பார்க்கும்போது, அந்தச் சம்பவங்கள் நம்மை எப்படி வளர்த்திருக்கின்றன என்பது தெரிகிறது.

விடியற்காலையில் ஐந்து மணிக்கு என் தந்தை எழுந்து விடுவார். ஒரு மண்ணெண்ணெய் விளக்கைக் கொளுத்தி வைத்துக் கொண்டு, மூக்குக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு, தேவாரம் – திருவாசகம் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார். சிறுவனான நானும் காலையில் விழித்துக் கொள்வேன். அவர்கள் பாடுகின்ற பாடல்கள் பலவும் இன்றும் எனக்கு எங்கோ எப்போதோ படித்தது போல – தெரிந்தது போலத் தோன்றும்; நினைவுக்கு வரும்.



ஒரு பாட்டு :

"கந்து மதகிரியை வசமாய் அடக்கலாம்
கரடி வெம்புலி வாயைக் கட்டலாம்
ஒரு சிங்க முதுகிற்மேற் கொள்ளலாம்
சிந்தையை அடக்கியே
சும்மா இருக்கின்ற திறம் அரிது.
சத்சித்தமிசை குடிகொண்ட அறிவான
தெய்வமே
தேஜோ மயானந்தமே."

என்ற தாயுமானவரின் பாடல். இப்படி நான் கேட்ட பாடல்களையும் படித்த சில பாடல் வரிகளும் திரும்பத் திரும்ப நான் இரண்டு மூன்று நாட்கள், அதையே காலையில் எழுந்ததி லிருந்து படுக்கப் போகும் வரை பாடிக் கொண்டிருந்ததும் நினைவுக்கு வருகிறது.

"மதம் கொண்ட யானையை அடக்கலாம்
கரடியின் வாயையும் புலியின் வாயையும்
அவை கடிக்காதபடி மந்திரத்தால் கட்டிவிடலாம்.
சிங்கத்தின் மேல் சவாரி செய்யலாம்"

என்பது பாடல். நினைத்துப் பார்த்தால் யானையை அடக்கலாம். புலியின் வாயைக் கட்டலாம். சிங்கத்தின் மீது சவாரி செய்யலாம் என்ற பாடல் வரிகள்தான் 'முடியும்! முடியாத காரியமும் முடியும்!' என்று எங்கள் இயக்கத்தின் இன்றைய தாரக மந்திரப் பாடல்களாக மலர்ந்திருக்கின்றன.

எப்போதாவது என் தாய், எனக்குக் கதை சொல்வார்கள். ஒரே மாதிரிக் கதைகள். அதாவது ஒருவன் வெளிநாட்டுக்குக் கப்பலில் போகிறான். நிறைய சம்பாதித்து வருகிறான்; ஊர் திரும்பும் போது அவன் வாழ்ந்த வீட்டையும் பெற்றோர்களையும் கண்டுபிடிப்பதே கஷ்டமாயிருக்கிறது. அவ்வளவு ஏழையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவன் வந்ததும் வீடே பணக்கார வீடாக மாறுகிறது. இதுதான் கதை!

எங்கள் பெரியம்மா வசித்தது தில்லையாடியில். அங்கிருந்து எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டுக்காரரும் மற்றும் பலரும் தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகன்னஸ் பர்க்கிற்குச் சென்றிருந்தார்கள். எங்கள் விளநகருக்கு அருகிலுள்ள வடகரையில் பல முஸ்லிம்கள் – எங்களுக்குத் தெரிந்தவர்கள் – பினாங்கு என்றும் செய்கோன் என்றும் போயிருந்தார்கள். அவர்கள் பணக்காரர்களாகத் திரும்பி வந்தார்கள். செய்கோன், பினாங்கு, சிங்கப்பூர், ஜோன்ஸ்பர்க் என்பனவெல்லாம் அப்போது அடிக்கடி பேசப்படுகின்ற வார்த்தைகள். எங்கள் பெரியம்மா ஊரான தில்லையாடியிலிருந்துதான் வள்ளியம்மை

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி



ஜோகன்ஸ்பர்க்குக்கு போயிருக்கிறார் என்று சத்திய சோதனை படித்தபோது அறிந்து கொண்டபோது எனக்குப் பெருமகிழ்ச்சியும் பெருமையும் ஏற்பட்டது.

சிவாஜிக்கு ராமாயணமும், காந்திஜிக்கு அரிச்சந்திரா நாடகமும் உதவியது என்றால், இளவயதில் நான் கேட்டவை ஆன்மீகப் பாடல்களும், வெளிநாட்டுக்குச் சென்று பணக்காரர்களான கதையும்தான்.

எங்கள் உறவினர்கள் பெருமளவில் தில்லையாடியிலும், காரைக்காலிலும், பூம்பு காரிலும் வாழ்ந்திருக்கிறார்கள். எல்லாமே வணிகம்தான். எங்கள் இனத்தைப் பஞ்சுக் காரர்கள் என்று அழைப்பார்கள். வீட்டிலே உத்தரத்திலிருந்து ஒரு சமயம் பழங்காலத்துப் பெரிய கைராட்டையை எடுத்து என் தந்தை காட்டினார்கள். எனினும் ராட்டை நூல் நூற்று நெசவு செய்து வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. எல்லாமே பஞ்சு வியாபாரம், வணி கம்தான். தில்லையாடியில் வாழ்ந்த என் பெரி யம்மா வீட்டில் தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் நவரத்தினக் கற்கள் வியாபாரம் செய்து வந்தார்கள். நிலபுலன் இருந்தது.

என் தந்தை கிராமத்தில் மளிகை வியா பாரம் செய்து வந்தார்.

எங்கள் குலத்தில் பிறந்த ஒருவர் சில தலை முறைகளுக்கு முன் தருமபுர மடத்தில் குருபீடம் பெற்று பட்டம் ஏற்றார் என்று என் தந்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். எங் களுக்கு தருமபுர மடம் குருபீடம். இன்றும் மார்கழி மாதத்தில் ஒருநாள் பூஜை வழிபாடு செய்யும் முறை எங்களுக்கு இருக்கிறது. இன்று தருமபுர மடத்தின் குருவாக இருக்கும் தவத்திரு ஷண்முக தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், 'எங்களது உறவினர் ஒருவர் அங்கு குரு பீடம் ஏற்றது உண்மைதான்' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நல்ல வாலிப வயதுடைய எங்கள் உற வினர் ஒருவர் குரு ஞானசம்பந்தரால் ஈர்க் கப்பட்டு மடத்தில் துறவியாகப் போய் விட் டார். அப்போது அவருக்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்விக்க நிச்சயதார்த்தமும் செய்து விட்டார்கள். ஆனால் மணமகனோ, துறவியாகி விட்ட நிலையில் பெண்ணைப் பெற்றவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சில காலம் கழித்து அங்கே குரு பீடத்தில் இருந்த அந்தத் துறவியிடம் அந்தப் பெண்ணை அவர் பெற்றோர் அழைத் துச் சென்றிருக்கிறார்கள். "இது உங்கள் மனைவி. இவள் உங்கள் பொறுப்பு" என்று கொண்டு விட்ட போது, அந்த மடத்துத் தலை வரான குரு மகாசந்நிதானம் அந்தப் பெண்ணை நேராக, தான் தினமும் பூஜை செய்யும் சொக்கலிங்கப் பெருமான் சன் னதிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். பின், அந்தப் பெண் வெளியே வரும்போது நரை திரையுடன், வயதேறிய தோற்றத்துடன் வெளி வந்தார். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்தது என்று என் தந்தை சொல்லக் கேட்டிருக் கிறேன்.

இன்றும் கூட தருமபுரம் மடத்தின் குரு பீடத்தை அலங்கரித்த அந்த மகான்களின் சமாதி பீடங்களில் நாம் உட்கார்ந்து தியானம் செய்தால் ஒரு அசாதாரண அமைதி கிடைக்



கிறது. அமைதியும் அருளும் நிறைந்த இடங்கள்.

எங்கள் உறவினர் ஒருவர்தான் எங்கள் கிராமத்து சிவன் கோவிலைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்தவர். என் பெரியம்மாவின் தாத்தாவின் பெயர் சின்னக்கண்ணு. சின்னக்கண்ணு என்பதுடன் அவரது சாதிப் பெயரைச் சேர்த்து மரியாதையுடன் சொல்வது அந்தக் காலத்து வழக்கம்.

"சின்னக் கண்ணு என்று சொன்னால் எட்டுக் கண்ணும் விட்டெரியும்" என்று என் பெரியம்மா சொல்வார்கள். அத்தனை செல்வாக்கு பெற்ற மனிதர் அவர்.

நூறாண்டுகளுக்கு முன் அவர் கட்டிய பிள்ளையார் கோவில் இன்றும் தில்லையாடி ஊரின் நுழைவாயிலில் அழகாக நிற்கிறது. நான் அமெரிக்கா சென்ற போது மிகவும் சிதிலமடைந்து கேட்பாரற்றுக் கோயில் போய் விட்டது. இதைக் கண்டபோது எனக்கு ஏற்பட்ட வருத்தம் அளவு கடந்தது. இரண்டாண்டுகளுக்கு முன் அதை மீண்டும் கட்டி கும்பாபிஷேகம் செய்தோம்.


நான் பிறந்த குழந்தையாக இருந்தபோது "என் தாய் என்னை தவிட்டுக்கு விற்று விட்டார்" என்றால் கேட்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்! எங்கள் குடும்பம் ஏழையாக இல்லை – விற்பதற்கு! என் பெற்றோருக்கு ஏழு குழந்தைகள். நான்தான் கடைசி. எங்கள் அனைவருக்கும் மூத்தவர் என் சகோதரி பட்டம்மாள். அவருக்கு அடுத்து பிறந்த நான்கு குழந்தைகள் – மூன்று வயதிலும் நான்கு வயதிலும் பிறந்த சில மாதங்களிலும் தவறி விட்டார்கள்.

இது என் பெற்றோரை மிகவும் பாதித்தது. அருகிலுள்ள கருவாழைக்கரையில் வள்ளுவர் என்ற இனத்தினர் – திருவள்ளுவர் பரம்பரை – இருந்தார்கள். நன்கு படித்தவர்கள். சோதிடம் தெரியும்.

'குடும்பத்தில் நாகதோஷம் இருக்கிறது' என்று சொல்லி விட்டார் வள்ளுவர்.

நாகதோஷம் நீங்கப் பரிகாரம், பூஜை வழிபாடு, பாம்பு புற்றுக்கு தொடர்ந்து பூஜை, பால் வார்த்தல் போன்ற பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

அந்தக் காலகட்டத்தில் ஒரு பரவலான நம்பிக்கை இருந்தது. அதாவது நமக்குப் பிறந்த குழந்தையை விற்று விட்டால் அந்தக் குழந்தைகள் வாங்கியவர்களுக்கு சொந்தமாகி விடுகின்றன; அதனால் அந்த தோஷம் – சாபம் – குழந்தைகளை அணுகாது என்பது. அதன்படி எங்களை விற்று விட்டார்கள்! எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் முத்துக்கண்ணு என்ற தேவதாசிக் குடும்பத்தில் பிறந்த பெண்மணி – மனைவியை இழந்த எங்கள் உறவினர் ஆண அடுத்த வீட்டுக்காரருடன் முறையாக வாழ்ந்து வந்தார். எனினும் அவருக்குக் கோயில் மான்யமும் சாப்பாடும் உண்டு. கோயிலுக்குச் சென்று ஆண்டவனுக்குச் சில பணிவிடைகள் செய்து வருவார். இரவு நேரத்தில் கோயில் பட்டை சாதம் ஒரு தட்டில் பட்டுத் துணியால் போர்த்தப்பட்டு அடுத்த வீட்டுக்கு வரும்.



இப்படி எங்கள் வீட்டில் குழந்தைகள் இறந்து போவதைப் பார்த்த எங்கள் உறவினரில் ஒருவராகி விட்ட முத்துக்கண்ணு, என் அண்ணன் பிறந்தபோது தனக்கு வந்த கோயில் பட்டுத் துணியை குழந்தை மீது போர்த்தி, எங்கள் கோயில் சுவாமி பெயரான வன்னலார் என்ற பெயரை என் அண்ணனுக்குச் சூட்டினார். குழந்தையை, அவர் கோயில் சாதத்தையும் பட்டுத் துணியையும் கொடுத்துவிட்டு எடுத்துக் கொண்டார்!

நான் பிறந்தபோது எங்கள் வீட்டில் வேலை செய்து வந்த பெண்மணி நாகம்மாள் என்பவர். நாகம்மாள், மிகப் பெரிய உருவம் கொண்டவர். எப்போதும் சிரித்த முகம்.

என் தாய் என்னை நாகம்மாளிடம் விற்று விட்டார்கள். நாகம்மாளிடம் என்ன இருக்கும்? அவர் வீட்டில் மாட்டுக்குப் போடும்

தவிடு இருந்தது. அதைக் கொடுத்து விட்டு அவர் குழந்தையை எடுத்துக் கொண்டு போனார். பல ஆண்டுகள் அவர் என்னை இடுப்பில் தூக்கிக் கொண்டு போனது, அவர் வீட்டில் நான் உட்கார்ந்திருந்தது எல்லாம் என் நினைவில் இருக்கிறது.

நாகம்மாள், "இது என் புள்ளே. நான் தவிட்டுக்கு வாங்கினேன்!" என்று சொல்லி நான் பெரியவனானவுடன் என் கன்னத்தில் தன் இரண்டு கைகளையும் வைத்து திருஷ்டி கழித்த சம்பவங்களை எல்லாம் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறேன்.

நாகம்மாள் என்ற பெயரைக் கவனியுங்கள். எங்கள் குடும்பத்திற்கு நாகதோஷம் இருந்ததையும் என்னை நாகம்மாளிடம் விற்று விட்டதையும் எண்ணினால் ஏதோ எதிர்பாராது நிகழும் சம்பவங்களாகத் தோன்றுகின்றன.

கார்ல் கஸ்டவ் யங் என்ற புகழ்பெற்ற மனவியல் பேராசிரியர் சொல்கிறார். இப்படி ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ள சம்பவங்கள் எதிர்பாராத சம்பவங்களாக நிகழ்கின்றன என்றால் நீங்கள் செல்லும் பாதை சரியான பாதைதான் என்று ஏதோ ஒன்று தெரிவிக்கிறது என்று ஒரு கண்டுபிடிப்பை வெளியிட்டார்.

நம் எல்லோருடைய வாழ்விலும் இத்தகைய எதிர்பாராத சம்பவங்கள் நிகழ்கின்றன. நமக்கு மேற்பட்ட ஒரு சக்தி நமக்குப் பின்னால் இருந்து நம்மை வழிநடத்துகிறது என்பதுதான் உண்மை.

(தொடரும்)

ராவணனுக்கும் ஸ்வாதிக்கும் என்ன சம்பந்தம்?

"ஒரு பத்திரிகையாளர் கூட வரவில்லை என்பது அதிர்ச்சியாக இருக்கிறது. சின்னப் பசங்க நடிச்ச சினிமாதானேன்னு அவங்க வரலியா என்னன்னு தெரியலே. இந்தப் படத்தைப் பார்க்காம விட்டுட்டோமேன்னு அவங்க நிச்சயம் வருத்தப்படப் போறாங்க."

– இயக்குநர் கே. பாலசந்தர் வருத்தப்பட்டுக் கொண்டது 'ராமாயணம்' திரைப்படத்தின் பாடல்கள் ஒலி நாடா வெளியீட்டு விழாவின்போது.

அநேகமாக எல்லா பத்திரிகையாளர்களுக்கும் அழைப்பு அனுப்பியும் ஒன்றிரண்டு பேர் மட்டுமே வந்திருந்தார்கள் என்பதில் பி.ஆர்.ஓ. ஃபிலிம் நியூஸ் ஆனந்தனுக்கும் வருத்தம்.

இத்தனைக்கும் அன்றைக்கு கேபி. பார்த்தது படத்தின் ட்ரெய்லர் மட்டுமே. அதுவே அவரை அவ்வளவு ஈர்த்து விட்டிருக்கிறது!

எட்டு கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட, முழுக்க முழுக்க 14 வயதுக்குட்பட்ட 3000 சிறுவர்கள், நடித்த இப்படத்தின் தமிழாக்கப் பெருமை தேவநாராயணனுடையது.

ஏராளமான கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் உத்திகள் படத்தின் சுவையைக் கூட்டுகின்றன.

ராமனாக நடித்த சிறுவன் என்.டி. ராமாராவின் பேரன்! மாஸ்டர் என்.டி. ராமாராவ்!

ராவணனாக?

ஸ்வாதி!

ஆமாம், சிறுமி!

– பிரபுசங்கர்



• ராவணனாக ஸ்வாதி....

கசமுசா மேடையில் கபில்!



கபில்தேவ், சென்னை வந்திருந்தார். இந்திய - ஆஸ்திரேலிய டெஸ்ட் மாட்சுக்காக, சிதம்பரம் மைதான பிட்சை சோதனை செய்வதற்காக மட்டுமல்ல; 'Straight Bat' என்ற சென்னை நகர கிரிக்கெட் செய்திகளைத் தருகின்ற மாதப் பத்திரிகையின் முதல் ஆண்டு விழாவில் கலந்து கொள்ளவும்.

காலையில் இந்திய போர்டு நடத்திய 'இந்திய டெக்னிகல் கிரிக்கெட் கமிட்டி'யின் கூட்டத்தில் (மும்பையில்) கலந்து கொண்டு விட்டு, மாலையில் விமான நிலையத்தில் இருந்து நேராக விழாவிற்கு வந்தார் கபில்.

விழாவில் கபில் தேவுக்கு நல்லி குப்புசாமி 70,000 ரூபாய் மதிப்புள்ள நவரத்தின மோதிரம் ஒன்றைப் பரிசளித்தார்.

கபில் தேவ் தொடர்ச்சியாக 131 டெஸ்டுகள் ஆடி 434 விக்கெட்டுகளை எடுத்து உலக சாதனையைப் புரிந்ததற்காகப் பாராட்டு விழா என கூறப்பட்டது. (கபில், இச் சாதனையைப் புரிந்தது 1994-ல்!)

விழாவில், பழைய முன்னாள் டெஸ்டு வீரர்களும் பிரபலங்களுமான ராம்சிங், கோபிநாத், பாலு அழகண்ணன், பிரபாகர் ராவ், டி.ஏ. சேகர் ஆகிய வீரர்களும், டி.வி.எஸ் ரத்னம், வினு மாமன் (எம்.ஆர்.எஃப்) ஆகியோரும் கலந்து கொண்டனர். ஆனால் இன்றைய பிரபலங்களும், நாளைய பிரபலங்களும் மிஸ்ஸிங்!

'இந்து' ராம், கிரிக்கெட் போர்டை மறைமுகமாகத் தாக்க, விழா அமைப்பாளரான என்.ஆர். ஜெகன்னாதன், தமிழக கிரிக்கெட் சங்கத்தை நேரிடையாகவே தாக்கிப் பேசினார். இந்த இரண்டு தாக்குதல்களையும் கபில் தேவ் மிக சீரியஸாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

“ஜெகன்னாதனும், சுந்தரவதனமும் இந்தப் பத்திரிகையை நடத்துவதே தமிழக கிரிக்கெட் சங்கத்தைத் தாக்குவதற்கும், தற்போதைய நிர்வாகிகளைத் திட்டுவதற்கும்தான்! எனவே விழாவைப் புறக்கணிக்கிறோம். இதில் கபில் எப்படிக் கலந்து கொண்டார் என்பதே ஆச்சர்யம்” என்று த.நா. கிரிக்கெட் சங்கத்தினர் பொரும, “நிச்சயமாக இவ்விழா தமிழக கிரிக்கெட் சங்கத்தைத் தாக்கும் களமாக இருக்கும் என நினைத்து இருந்தால், நான் கலந்து கொண்டிருக்கவே மாட்டேன்” என கபில் விழாவிற்கு பிறகு, தமிழக கிரிக்கெட் சங்கத்தின் முக்கிய புள்ளிகளிடம் கூறியதாகப் பேசிக் கொண்டார்கள்.

“இதற்காக நான் வருத்தப்படுகிறேன்” என்று கபில் கூறியதாகவும் தகவல்.

ஆஸ்திரேலியாவின் வார்னே, கபில்தேவின் சாதனையை முறியடிக்க முயற்சி செய்வேன் என கூறியதால், தோஷங்களை நீக்கும் நவரத்தின மோதிரம் கபில் தேவுக்குப் போடப்பட்டது என்றும், யாரும் அவரது சாதனையை முறியடிக்க முடியாது என்றும் ஜெகன்னாதன் கூற, அதை அப்பொழுதே கபில் மறுத்து, “ரிக்கார்ட் என்பதே முறியடிக்கத்தான்; என் ரிக்கார்ட்டை யாராவது முறியடிக்கும் பட்சத்தில் நிச்சயம் சந்தோஷப்படும் முதல் நபர் நானே!” என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

கபில் தேவுக்கு முதல் முதலில் விளம்பரம் மூலம் பணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது சென்னையில்தான் என்றும், கபில் முதன் முதலில் விளம்பரத்திற்குக் கையெழுத்துப் போட்டது சென்னையைச் சேர்ந்த என்பீல்டு கம்பெனியின் புல்லட்டுக்குதான் என்பதும் விழாவில் கிடைத்த செய்தி.


ஆனால் அந்த வண்டியை ஓட்டக் கூடாது என அவரது குடும்பத்தினர் அவரைத் தடை செய்து விட்டார்களாம். கபிலே சொன்னது இது!

— மாஸ்டர்




• விழா மேடையில்...

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

கிரக சஞ்சாரமெல்லாம் அனுகூலமா இருக்கறதால, நீங்க எடுத்த முடிவுங்களை மத்தவங்க பாராட்டுவாங்க. பிசினெஸ், கொடுக்கல் - வாங்கல் எல்லாமே லாபகரமா இருக்கும். எதிரிங்க கப்சிப் ஆயிடுவாங்க. சில வீடுங்கள்ல திருமணப் பேச்சுகளைத் துவங்குவாங்க. வீடு, நிலம், மனை, வாகனம் எல்லாமே லாபத்தைத்தான் தரும். வார மத்தியில கொஞ்சம் செலவு வரும். பயப்படற மாதிரி இல்லே. விருந்தாளிங்க வருவாங்க, அவ்ளோதான். சின்னச் சின்னப் பிரச்னைகள் வரும்னாலும் சமாளிச்சிடுவீங்க.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

துணிச்சலா செயல்படுவீங்க. அதனாலயே எடுத்த காரியம் எதுவானாலும் பிரச்னைங்க இருந்தாக்கூட ஜெயிச்சிடுவீங்க. எதிரிங்க விலகி ஓடிடுவாங்க. கலைத் துறைல இருக்கறவங்க ஜோரான பலன்களை எதிர்பார்க்கலாம். இயந்திரம், மின்சாரம் மாதிரியான பணியாளர்களுக்கும் தீப்பெட்டித் தொழிற்சாலை, காஸ் ஏஜென்ஸி மாதிரியான தொழில் செய்யறவங்களுக்கும் வக்கீல், போலீஸ் மாதிரியானவங்களுக்கும் ஜோரான வாரம். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்தது நடக்காது. அரசியல்வாதிங்களுக்கு ஏகப்பட்ட சவாலுங்க வந்து முன்னால நிக்கும்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

குருவோட பார்வை பளிச்சினு படறதால உங்க மனசுல ஒரு தெளிவு, ஒரு சாதுர்யம் எல்லாமே ஜொலிக்கும். முயற்சிங்க எல்லாம் ஜெயிக்கும். குடும்பத்துல சுப காரியங்கள் - இல்லேன்னா அதுக்கான பிள்ளையார் சுழி போடறதாவது நடக்கும். சிலர் வீட்டு மனையோ ஃப்ளாட்டோ வாங்கற சான்ஸ் இருக்கு. அரசாங்க உத்தியோகஸ்தருங்க, ஆசிரியருங்க, விவசாயிங்க, பொறியியல், இரசாயனத் துறைக்காரங்க எல்லோருக்கும் பிரகாசமான வாரம் இது. பெண்களுக்குன்னு குறிப்பா சொல்லணும்னா சேலை நகைன்னு வந்து சேர்ற வாரம்.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

பளிச்சினு சொல்றா மாதிரி கிரக சஞ்சாரம் இல்லீங்க. எதுவானாலும் ஒரு தடவைக்கு ரெண்டு தடவை யோசிச்சு நிதானமாச் செய்யுங்க. புது முயற்சி எதுவுமே வேணாம். கஷ்டப்பட்டு உழைக்கணும். அப்பவும் சிலருக்கு சோதனைங்க வரலாம். பயணத்துல - குறிப்பா டூவீலர்ல போகும் போது ரொம்பவும் எச்சரிக்கையா இருங்க. பண விஷயமும் சீரா இருக்காது. சிலர் கடன் வாங்கவும் நேரும். அதுல மனஸ்தாபம் கூட வரலாம். தண்ணியில்லாக் காட்டுக்கு மாத்தறதுன்னு சொல்லுவாங்களே... அப்படிக்கூட சிலருக்கு மாறுதல் கிடைக்கலாம். எதுக்கும் பக்கத்திலிருக்கிற ஆஞ்சநேயர் கோயிலுக்கு ஒரு நடை போயிட்டு வாங்களேன்.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

குருவும் சூரியனும் உங்க பக்கம் இருக்கறதால உங்க அந்தஸ்து லோர்ந்து, வாழ்க்கைத் தரம் வரைக்கும் எல்லாமே ஓசந்து நிக்கும். போடற இட்டமெல்லாம் ஜெயிக்கும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் துறைக்காரங்களுக்கு மனத் திருப்தியும் பாராட்டும் கிடைக்கும். எக்ஸிபூடிவ்களுக்கு ஜோரான புதுப் பாதை தெரியும். கல்யாணமாகாதவங்க வீட்டுல அந்தப் பேச்சு நடக்கும். வயித்துவலி மாதிரி ஏதாவது சின்னச் சின்ன உபாதைங்க வரும். பாத்துக்குங்க.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

துணிச்சலாவும் தன்னம்பிக்கையோடவும் செயல்படுவீங்க. அதனாலயே எல்லாத்துலயும் ஜெயிச்சுக் காட்டுவீங்க; எதிரிங்களை ஜகா வாங்க வெப்பீங்க. கேஸ் விஷயம் எதுனா இருந்தா அதுல ஒரு நல்ல திருப்பம் வரும். போட்டி, பந்தயம், லாட்டரி எல்லாமே பலனைத்தான் கொடுக்கும். ஆனாலும் வீடு, மனை விஷயமெல்லாம் இந்த வாரம் வேணாம். பண விஷயம் தாராளமாவே இருக்கும்னாலும் வீண் செலவு செஞ்சிடாதீங்க. சிலருக்குப் பயணத்தால ஆதாயம் கிடைக்கும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

அக்னிசர்மா பக்கம்


பிப்ரவரி 11 முதல் 17 வரை

எடுத்த காரியத்துல வெற்றி, சீரான உடல்நிலை, தெளிவான மனநிலை.. எல்லாம் வாய்க்கிற வாரங்க இது. அப்புறம் என்ன! பயணத்தால அனுகூலம்; வியாபாரிங்க, கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ், இரசாயனத் துறை மற்றும் ஆராய்ச்சித் துறையில இருக்கறவங்களுக்கு அமோகமான பலன்கள்; வக்கீல்கள், போலீஸ், ராணுவத்துறைக் காரங்களுக்கு எடுத்த காரியத்தில ஜெயம்... இது போதாதுங்களா! சிலருக்கு ஃபாரின் டூர் போற சான்ஸும் இருக்கு. பண விஷயமும் சீராவே இருக்கு. மகன், மகள் முன்னேற்றத்தால பெத்தவங்களுக்கு சந்தோஷம் வரும். ஜமாயுங்க!




விருச்சிகம் : *(விசாகம் 4- ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

வேத்து மொழிக்காரங்க அல்லது மதத்துக்காரங்களால இந்த வாரம் உங்களுக்கு ஏகப்பட்ட உதவிங்க கிடைக்கும். உங்க திறமை வெளிப்படும். குறிப்பா அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி - இறக்குமதி தொழில் செய்யறவங்களுக்கு லாபகரமான வாரம். மீனவர்களுக்கும் வலைய வீசினாலே மீன்கள் குவியற வாரம் இது. பயணத்தாலயும் ஆதாயம் கிடைக்கும். விருந்து, கேளிக்கை, பிக்னிக்குன்னு ஜமாய்க்கிற சான்ஸும் இருக்கு. பண விஷயத்திலும் பிரச்னை இல்லை. ஸ்பெகுலேஷன் வேணாம். சுப காரியங்களுக்குக் குடும்பத்தில வாய்ப்பிருக்குன்னாலும் அந்த சந்தோஷத்தில தாயாரோட உடல் நலத்தை கவனிக்காம விட்டுடாதீங்க.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

செவ்வாய், புதன், கேதுன்னு மூணுமே உங்களுக்கு அனுகூலமா இருக்கறதால வெற்றிப் பாதை பளிச்சுனு தெரியும். எதிர்ப்பையெல்லாம் ஊதித் தள்ளிடுவீங்க. வழக்கு, பந்தயம் எதுவானாலும் ஜெயம்தான். வியாபாரிங்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். கன்னி எழுத்தாளர்களுக்கு முதல் கதையோ கவிதையோ பிரசுரமாகற யோகம் இருக்கு. வீடு, மனை, வாகன விஷயங்கள்ல யோசிச்சு செயல்படுங்க. கலைத் துறையில உள்ளவங்களுக்கு புதிய வாய்ப்புகள் வரும். குடும்பத்தில சந்தோஷம் பொங்கும்னாலும் கொடுக்கல் வாங்கலில் கவனமா இருங்க.




மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

பண விஷயம் அப்படியும் இப்படியும் இருந்துதுங்களா... இந்த வாரம் ஸ்டெடி ஆயிடுங்க. ஸ்பெகுலேஷன், ஷேர், பந்தயம் எல்லாத்துலயும் வெற்றிதான். தொழிலதிபர்கள், விவசாயிகள் எல்லோருக்குமே நல்ல ஆதாயம்தான். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிங்க பாராட்டைப் பெறுவாங்க. குடும்பத்தில கல்யாணம் மாதிரியான மங்கள காரியங்கள் நடக்கும். சிலர் புதுசா ஏதாவது பொருள்கள் வாங்குவாங்க. வீடு, நிலம், வாகனத்தாலயும் லாபம் வரும். வெளிநாட்டுலேர்ந்து நல்ல சேதி வரும்; சந்தோஷமாவீங்க.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

எந்த விஷயமானாலும் சரிங்க. ரொம்பவும் நிதானம் காட்டுங்க. அவசரம்கிற பேச்சுக்கே இந்த வாரம் இடம் இல்லே. ஷேர், லாட்டரி, பந்தயம், கூட்டு வியாபாரம்... இத்தனை ஏன், தனியா இருந்தாலும் புது முயற்சிங்க எதுவுமே இந்த வாரம் வேணாம். மத்தவங்களும் உதவ மாட்டாங்கங்கறதால மனசுல சஞ்சலமும் குழப்பமும் இருக்கும். செலவும் அது பாட்டுக்கு வரும். பேச்சிலும் எச்சரிக்கையா இருக்கணும். குடும்பத்துலயும் திடீர்னு ஏதாவது பிரச்னைங்க வரலாம். கணவன் - மனைவிக்குள்ள விட்டுக் கொடுத்துப் போகாட்டி பிரச்னைதான்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

உங்க திட்டங்களெல்லாம் வெற்றிப் பாதையைப் பார்த்தே நிக்குதுங்க. சில எதிர்ப்புங்க இருந்தாலும் சமாளிச்சிடுவீங்க. கவர்மெண்ட் உத்தியோகஸ்தரா? இடமாற்றம் இருக்கலாம். தொழிலதிபர்கள், வியாபாரிகள், மருத்துவம், விஞ்ஞானத் துறையினர் ஆகியோருக்கு அமோகமான வாரம். பொருளாதார வசதி சீரா இருந்தாலும் திடீர்ச் செலவுகளுக்கும் சான்ஸ் இருக்கு. உடல் ஆரோக்கியத்தில அக்கறை காட்டுங்க. குடும்பத்துல சிறு சிறு விஷயங்கள்ல அபிப்பிராய பேதம் வரலாம். உஷாரா இருங்க.

சமீபத்துல தமிழக அரசோட 'பாரதி விருது' வாங்கியிருக்கும் சிம்மராசிக்காரரான கவிஞர் மதிவண்ணனுக்கு வாழ்க்கைத் தரம் ஜோரா உசரப் போகுதாம்! பாராட்டுகளுக்குப் பஞ்சமில்லைன்னு கிரக அமைப்பு சொல்லுது!







• நெய்ச் செலவு!

• வீரமற்ற சிங்கம்!

● ஆர். ஜெஸ்மின் ரமேஷ், மதுரை - 20

? பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தால் ஹிந்தியைத் திணிக்கத் தயாராவார்கள் என்கிறாரே நாஞ்சில் மனோகரன்?

! திணிக்கப்படுவது ஹிந்தியாக மட்டும் இராது; புதிய பொருளாதாரக் கொள்கைகள், புதிய சிவில் சட்டங்கள், புதிய கோயில்கள், அணுகுண்டு, ஜனாதிபதி ஆட்சி முறை....

● சுப்பு வேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.

? டாக்டர் ஹண்டே - வாழப்பாடி ராமமூர்த்தி ஒப்பிடுக...

! அபத்தக் காரியங்களை அளவில்லாமல் செய்தாலும் ராஜாஜி பெயரை வாழப்பாடி இழுப்பதில்லை என்பதால் அவருக்கு ஹண்டேவைக் காட்டிலும் சற்று நல்ல பெயர்.

● ஆ. கமல்ராஜ், தாரமங்கலம்.

? சோனியா ரொம்ப உருக்கமாகப் பேசுகிறாராமே?

! அந்த உருக்கத்துக்காகத்தானே காங்கிரஸ் அவரைக் கெஞ்சி, கூத்தாடி அரசியலுக்கு இழுத்திருக்கிறது? அவர் உருக உருக வோட்டு பெருகும் என்ற நம்பிக்கை!

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? சாதத்தில் நெய்யைப் பயன்படுத்துவது போல் தேர்தலுக்கு செலவு செய்வேன் என்று காளிமுத்து பேசியுள்ளது குறித்து?

! 'ஜெ'யிடம் கரண்டி, நெய் வாங்கிவிட்டு, தேர்தல் சாதத்தில் முட்டை நெய் மட்டும் பயன்படுத்தினால் மிச்சம்தானே!



• ஒப்பு நோக்க....



• ...சற்றே மேல்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? 'பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவிகிதம் ஒதுக்கீடு' என்று பேசிய கட்சிகள், இப்போது மக்களவைத் தேர்தல் வேட்பாளர்கள் தேர்வில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லையே?

! பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி இட ஒதுக்கீடு செய்துவிடுவது சுலபம். ஆனால் அந்த இடங்களை நிரப்பத் தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுப்பது கஷ்டம் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கும் நிகழ்ச்சி. உணர்ச்சி பூர்வமான சிந்தனைகளை ஒதுக்கி, அறிவு பூர்வமாக நம் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். அப்போது தான் பலவிதமான ஏற்றத் தாழ்வுகளையும் படிப்படியாக நீக்க முடியும்.

● கு. கணேசன், பனங்கோட்டூர்.

? 'பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அரவணைத்துச் செல்ல வேண்டும்; சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை மதித்து நடக்க வேண்டும்..' என்ற கருணாநிதியின் அறிவுரை குறித்து...?

! எல்லாமே தேர்தல் ஸ்டண்ட்! பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்ற பாகுபாடே இல்லாமல் போக வேண்டும் என்று ஏன் சொல்வதில்லை...?

வாக்குரிமை பெற்ற சோனியா வெளிநாட்டவரா...?

● என். ஜெயராமசந்திரன், வினுகொண்டா (ஆந்திரா).

? ராஜீவ் கொலை வழக்கின் தீர்ப்பு காங்கிரஸுக்கு பலம் சேர்க்குமா?

! விடுதலைப் புலிகளின் திட்டமிட்ட பழிவாங்கலை - தேசத் தலைவரின் படுகொலையைக் கூட அரசியல் பண்ணி ஆதாயம் காண நினைக்கும் காங்கிரஸுக்குக் கொலை வழக்கின் தீர்ப்பு சம்மட்டி அடி. தீர்ப்பு, பலம் சேர்ப்பது தி.மு.க.வுக்குத்தான்.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி.

? 'லோக்சபாவுக்கு நாற்பது ஐம்பது ஆடுகள் செல்வதைவிட ஒரு சிங்கம் செல்வது சிறந்தது'' - சு. சுவாமி கூறியுள்ளது பற்றி...?

! ஓர் அரசியல் (அ)சிங்கம்தான் இப்படிப் பேச முடியும்!

● க. கந்தையா, நாகர்கோயில் - 1.

? 1984 தேர்தலின்போதே இந்தியருக்கான

வாக்குரிமை பெற்ற சோனியா காந்தியை இன்னமும் வெளிநாட்டுக்காரர் என்று சொல்வது சரிதானா?

! அயல்நாட்டவரொருவர் திருமணத்தின் மூலம் இந்நாட்டின் குடியுரிமையும் வாக்குரிமையும் பெறுவது என்பது வேறு... ஒரு தேசியக் கட்சியின் தலைமை ஏற்பது, பிரதமராவது என்பது வேறு, முன்னது தனிமனிதனின் உணர்வு தொடர்பானது; பின்னது 90 கோடி மக்களின் உணர்வைச் சார்ந்திருப்பது. அந்த உணர்வு எப்படிச் செயல்படும் என்பதைத் தேர்தல் முடிவுகள்தான் தெரிவிக்கும். வாக்காளர்கள் அவளை நினைத்துக் கொண்டு உரலை இடித்தாலும் ஆச்சர்யமில்லை. அதுபோல் ஏற்கெனவே நடந்திருக்கிறதே!

● **ஆர். சரோஜா, நாட்டரசன்கோட்டை.**



? 'சீட் தராதது நியாயமற்றது.. காலம் வரும்போது நான் பேசுவேன்...' என்கிறாரே நரசிம்மராவ்?

! வேறு எத்தனையோ ஊழல் பேர்வழிகளுக்கு டிக்கெட் தரப்பட்டிருக்கும் போது ராவுக்கு மட்டும் மறுக்கப்படுவது நியாயமில்லைதான். அதிலும் பப்ரி மஸ்ஜிதைக் காக்கத் தவறினார் என்று கூறி மறுப்பது அக்கிரமம்; அநீதி! ஆனால், நரசிம்மராவ் 'காலம் கனியட்டும் பேசுவேன்..' என்று சொல்வது மழுப்பல். அப்படிக் கனியும்போது, இவரைப் பற்றிய வண்டவாளங்களையும் அல்லவா பேசுவார்கள்!

● **நீடா சி. இளஞ்செழியன், சாலியமங்கலம். ❑**

? பொற்கோயிலில் ராணுவம் புகுந்ததற்கும் மசூதி இடிக்கப்பட்டதற்கும் காங்கிரஸார் இப்போது வருத்தம் தெரிவிப்பது ஏன்...?

! சம்பந்தப்பட்ட

• உருக்கமும் பெருக்கமும்!



• சொல்லாமல் விட்டது...!



• அப்பா வழியில்

மதத்தவரை 'சென்டிமென்டலாக' 'டச்' பண்ணத்தான்... வேறென்ன! மதவாதக் கட்சி என்று பி.ஜே.பியை வைதுவிட்டு இவர்களும் மதவாத அரசியல்தான் நடத்துகிறார்கள் என்பதை வாக்காளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

● **எம். பிச்சைக்கனி, திருமால்பூர்.**

? படிப்பறிவு - பகுத்தறிவு – என்ன வித்தியாசம்?

! எல்லா தலைவர்களின் அறிக்கைகளையும் எல்லா கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளையும் வாக்குறுதிகளையும் படிப்பது படிப்பறிவு... பின்னர், படித்தவற்றை அசைபோட்டு, நல்லது கெட்டதை ஆராய்ந்து வாக்களிப்பது பகுத்தறிவு.

● **வீ. முத்தையா, திருநெல்வேலி - 6.**

? ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்துக்குப் பிறகு வேறு எந்தக் கூட்டத்திற்கும் ப்ரியங்கா வராதது ஏன்...?

! ஏன் வரவில்லை? ப்ரியங்கா மட்டுமின்றி இளவல் ராஹுல் கூட வருகிறாரே! - அசல் அப்பா இமேஜுடன் - அதே போன்ற உடை, அங்கவஸ்திரம்... வாக்காளரைக் கவரப் பலரும் எத்தனையோ வேஷம் போடும்போது, ராஜீவ் வேஷத்தை ராகுல் போட்டால் என்ன!

● **கே.வி. ராமன், சென்னை - 73.**

? தேர்தல் நெருங்குகிற சமயத்தில், பாபர் மசூதிக்கும், 'ஆபரேஷன் ப்ளு ஸ்டாருக்கும்' மன்னிப்புக் கேட்கிறார்களே... நடந்த ஊழல்களுக்கு எந்தத் தலைவராவது தாமாக முன் வந்து மன்னிப்புக் கேட்பாரா?

! அப்படிக் கேட்பது ஒன்றும் உலக மகா அதிசயம் அல்ல.. நம் நாட்டிலேயே நடந்திருக்கிறது. உதாரணம்: இந்திரா காந்தி, கருணாநிதி.

● **யமுனா ரெங்கநாதன், மடிப்பாக்கம்.**

? நம்பி வந்தவர்களைக் கழுத்தறுக்கும் ஒரு சிலரைப் போல என் வாழ்நாளில் நான் நடந்து கொண்டதேயில்லை என்கிறாரே ஜெயலலிதா?

! முன்பு, நம்பி வோட்டுப் போட்ட மக்களை என்ன செய்தாராம்?! ●

ரூ. 50 பரிசு பெறுபவர்:
❑ நீடா. சி. இளஞ்செழியன்,
3/256, வாணியத் தெரு,
சாலியமங்கலம் (அஞ்சல் நிலையம்)
தஞ்சை மாவட்டம் - 613 504.

– தராசு

சென்னையின் மூன்று தொகுதிகளிலும் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து விட்டது! தி.மு.க. பிரசாரத்தில் சூடு சற்று அதிகம். மக்கள் தரப்பு ரியாக்ஷனும் அதற்குத்தான் அதிகம்.

"சேப்பாக்கம் கலைஞர் தொகுதி, ஆயிரம் விளக்கு ஸ்டாலின் தொகுதி... இப்படி அவங்க ஏரியாலேயே மாறனை நிறுத்தி, அவங்களே வோட்டுப் போட்டு ஜெயிக்க வைக்கிறதில என்ன பெருமை இருக்கு?" என்று கேட்கிறார் அமைஞ்சிக்கரைவாசி சிவக்குமார்.

மாறன் பாதுகாப்பான இடத்தில் போட்டியிட்டாலும், சென்ற தேர்தலைப் போல் காற்று ஒரே பக்கம் வீசாமல் ஆங்காங்கே சுழன்று சுழன்றுதான் வீசுகிறது. மத்திய சென்னையில் இவரை எதிர்த்துப் போட்டியிடும் டி. ஜெயக்குமார், அ.தி.மு.க. வளாகத்திலேயே ஊழல் புகாருக்கு உள்ளாகாத ஒரே நபர்! அது மட்டுமல்ல; "இன்னைக்கு ஜெயிச்சிட்டுப் போயிட்டா அடுத்தத் தேர்

சென்னை தொகுதிகள் :

ஜெயிக்கப் போவது யார்?

தலுக்கு வோட்டுக் கேட்கத்தான் மாறன் வருவாரு. ஜெயக்குமார் எதுவும் செய்யலைன்னா கூட, தொகுதிப் பக்கமாவது அடிக்கடி தலை காட்டுவாரு" என்கிறார் கீழ்ப்பாக்கம் ராஜ சேகர். (அவசரமாக ஒரு துணுக்குச் செய்தி. ஜெயகுமார் இன்டர்நெட் மூலமாகவும் தம் பிரசாரத்தைத் தொடங்கியிருக்கிறார்!)


மாருதி கார் நிறுவனத்தில் தற்போது இருக்கும் மானேஜிங் டைரக்டரைத் (பாஸ்கருடு) தூக்கி விட்டு, வேறொருவரை மாறன் கொண்டுவர முயற்சித்ததாகப் பேச்சு அடிபட்டது. இப்படி மூக்கு நுழைத்த மாறனைத் தோற்கடித்தே ஆகவேண்டும் என்று வெளிநாட்டுப் பணம் தொகுதிக்கு இறங்குவதாகவும் வதந்தி! மாருதி விற்பனையாளர்களிடம் விசாரித்தபோது, "இப்படி ஒரு விஷயம் உண்மையிலேயே எங்களுக்குத் தெரிஞ்சவரை இல்லை" என்கின்றனர். கட்சிக்காரர்களே கிளப்பி விட்ட புரளியாக இருக்கும் என்கிறார்கள்.

மாறன் செல்லும் இடங்களில் ஸ்டாலின் பக்கபலமாக நின்று வோட்டுக் கேட்கிறார். சரவெடிகள் வெடிக்க, தி.மு.க. கொடிகளை ஏந்திய தொண்டர் வரிசையும் வருகிறது. தி.மு.க. பிரசாரப் பாடல்களைக் கலைக் குழு பாடி முன் செல்கிறபோதே, தெருவில் கூட்டம் கூடி விடுகிறது! அந்தந்தக் கிளைக் கழகங்கள் முன்னதாகவே தெருக்களில் தோரணங்களையும் கொடிகளையும் கட்டி ஜமாய்க்கின்றன.

இந்த அளவு ஆரவாரம் அ.தி.மு.க., காங்கிரஸ், ம.தி.மு.க. கட்சிகளிடையே இல்லை. சுவர் விளம்பரங்களிலோ சுவரொட்டிகளிலோ கைச்சின்ன வேட்பாளர்களைக் காணவே முடியவில்லை!

கொரட்டூரில் ஜெயலட்சுமி என்ற பெண்மணியிடம், "யாருக்கு வோட்டுப் போடுவீர்கள்?" என்று கேட்டோம்.

"இதுவரைக்கும் கைச் சின்னத்துக்குத்தான் போட்டேன். இப்போ அந்தக் கட்சியே தேர்தலில் நிக்கலையே? அதுதான், கருணாநிதிக்குப் போடலாம்னு இருக்கேன்!" என்றார்.



• ஜனா கிருஷ்ணமூர்த்தி



• டி.ஆர். பாலு

வடசென்னையில், போட்டியிடும் செ. குப்புசாமி, தென் சென்னையில் போட்டியிடும் டி. ஆர். பாலு (தி.மு.க.) இருவரும் கூட மாறனின் பிரசார முறைகளையே பின்பற்றுகின்றனர். மாநகரப் போக்குவரத்தின் தி.மு.க. தொழிற்சங்க ஊழியர்கள் கருப்பு சிவப்புத் தொண்டர் உடையில் அணிவகுத்து, வாக்கு சேகரிக்கின்றனர்.

குப்புசாமியை எதிர்த்துப் போட்டியிடும்



• மத்திய சென்னையில் மாறன் பிரச்சாரம்....

ம.தி.மு.க. வேட்பாளர் சபாபதி மோகன், படித்தவர் என்பதால் பரவலாக மரியாதை இருக்கிறது. ஆனால் குப்புசாமி அளவு மக்களிடம் அடையாளம் தெரிந்த முகமாக இல்லை. தொகுதியில் குப்புசாமிக்கு நல்ல பெயர் என்றாலும் தி.மு.க. அரசு மீது மக்கள் அலுப்புக் கொள்கின்றனர்.

"என்னாங்க, இந்த ரேசன் கார்டு வருமா வராதா? மூணு தடவை தர்றோம்னு சொல்லிட்டாங்க. ஆனா இன்னும் தரலை" என்கிறார் பார்வதி என்ற பெண்மணி.

கீழ்த்தட்டு மக்களிடம் அன்றாடத் தேவைகள் பெரிய பாதிப்பை நிகழ்த்துவது தெரிகிறது.

நடுத்தர மக்களின் ஆதங்கம் வேறுவிதமாக இருக்கிறது. தொலைபேசி, கார் வைத்திருப்பவர்கள் வரி கட்ட வேண்டும் என்று மத்திய அரசாணை வந்து விட்டதால் இந்த அரசு மீது முணுமுணுக்கின்றனர்.

"எழுபத்தையாயிரத்துக்கு ஒரு ஓட்ட கார் வாங்கியிருக்கோம். நானும் என் ஒய்பும் சேர்ந்து மாசம் எட்டாயிரந்தான் வாங்குறோம். குழந்தைகளை ஸ்கூலுக்கு சரியா அனுப்ப முடியலைங்கிறதால வாங்கினோம். இப்போ வரி கட்டணுமாம். பிள்ளைகளுக்கு பரீட்சை முடிஞ்சதும் வித்துடப் போறோம்!" என்கிறார் அம்பத்தூர் முருகன்.

தென் சென்னையில் டி. ஆர். பாலுவுக்கும் பி.ஜே.பி வேட்பாளர் ஜனா கிருஷ்ணமூர்த்திக்கும் நேரடிப் போட்டி நிலவுகிறது.

கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் வாக்கு டி.ஆர். பாலுவுக்கு அப்படியே சாயும் என்கிறார்கள். ஆனால் இந்துக்களில் கணிசமானோர் கருணாநிதியிடம் கோபித்துக் கொள்கின்றனர். நேரடியாகக் கட்சி உறுப்பினராக இல்லாமல் இதுவரை தி.மு.க. அனுதாபியாக இருந்து வந்த ந. வடிவேலு, "வர வர இந்துக்களைக் கலைஞர் புண்படுத்துறாருங்க. முஸ்லீம் குண்டு வச்சாக்கூட இந்துக்கள் செயலா இருக்குமோன்னு சொல்றாரு. இது நல்லா இல்லை! அப்புறம் சாமி கும்பிட்டா கிண்டல் பண்றாரில்லை? மத்த மதத் துக்காரரை இவர் கிண்டல் பண்ண முடியுதா? அதனால நான் இந்தத் தடவை தி.மு.க.வுக்கு வோட்டுப் போட மாட்டேன்" என்கிறார். பலர் இதையொத்த வேறு காரணங்களைச் சொல்கின்றனர்.

தி.மு.க.காரர்களிடம் கேட்டால், "அதிகாரிக கலைஞர் அரசுக்கு ஒத்துழைக்க மாட்டேங்கிறாங்க. கார்ப்பரேஷனிலிருந்து குப்பையை அள்ளச் சொன்னா வண்டி ரிப்பேர்னு பொய் சொல்றாங்க. போக்குவரத்துக் கழகங்களிலும் இதே கதிதான். வண்டி சும்மா இருக்கும். கேட்டா ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கணும்னு சொல்றாங்க. இப்படி ஒவ்வொரு துறையிலும் அதிகாரிங்க மெத்தனமா இருக்காங்க. கைகுளிர லஞ்சம் வாங்குனவங்கதான் இந்த மாதிரி பண்றாங்க!" என்கிறார்கள்.

தேர்தல் கூட்டணிகளிலும் பெரிதாக நெருக்கம் இல்லை. மாறன் தொகுதியிலேயே

பா.ஜ.க(ர்ள்னர்) :

இரண்டு நாளைக்கு இரண்டு லட்சம்! எஸ்.வி. சேகரின் எலெக்ஷன் ரேட்!



● "பா.ஜ.கவுக்குப் பிரசாரம் செய்ய நான் தயார். எனக்கு நீங்கள் சீட் கொடுக்க மாட்டீர்கள்; தெரியும்! இரண்டு நாள் பிரசாரத்துக்கு இரண்டு லட்சம் தரமுடியுமா?" என்று கேட்டாராம் எஸ்.வி. சேகர். மூச்சடைத்துப் போய் விட்டார்களாம் தமிழக பா.ஜ.க. மூக்கியஸ்தர்கள். "நேரம்யா!" என்று அங்கலாய்த்தார் ஒரு (சீட் எதிர்பார்த்து ஏமாந்த) வி.ஐ.பி.

● கௌதமி பா.ஜ.கவில் சேர்ந்தது மட்டும் தானே இதுவரை நியூஸ்? ஏதாவது பிரசாரக் கூட்டம்? வோட்டு வேட்டைப் பயணம்?



ம்ஹூம்! "அட ஏங்க... கட்சித் தொண்டர்களோடவே அவங்க பழகறது, பேசறது இல்லை. மேலிடத் தலைகளோடதான் பேச்சு வார்த்தையெல்லாம்! இவங்க என்னத்த வந்து... என்னத்த பிரசாரம் பண்ணி..." என்று கன்னையா பாணியில் இழுக்கிறார்கள், தொண்டர்கள். கௌதமியின் அரசியல்ரீதியிலான எந்தவொரு நடவடிக்கையையும் முன்னதாகத் திட்டமிட்டு, செய்யப் பணிப்பவர் சுகுமாரன் நம்பியார்தான் என்கிறது பா.ஜ. வட்டாரம்.

● சமீபத்தில் நடைபெற்ற பா.ஜ.க. ஊழியர் கூட்டத்தில், "நாம் ஆட்சிக்கு வந்தால் காஷ்மீருக்கு விசேஷ அந்தஸ்து அளிக்கும் அரசியல் சாசனத்தின் ஆர்ட்டிகின் 370ஐ ரத்து செய்து விடுவோம். ஆனால், அடுத்த நொடியே காஷ்மீர் காணாமல் போய்விடும். சசிகலா அதை உடனடியாக வாங்கிவிட்டிருப்பார்!" என்று ஜோக் அடித்தாராம் இல. கணேசன்! என்ன துணிச்சலப்பா!

– ஜில்லு.

வி. சிவக்குமார் என்பவர் சுயேட்சையாக நிற்கிறார். அவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலேயே எஸ்.யு.சி.ஐ. என்ற பிரிவைச் சேர்ந்தவர். (வங்காளத்தில் பரவலாகச் செல்வாக்குடைய கட்சி. அதாவது ஜோதிபாசுவுக்கு எதிரான இயக்கம்.) தி.மு.க. மார்க்ஸிஸ்ட்டுக்கு இடம் ஒதுக்காததால் மத்திய சென்னை மார்க்ஸிஸ்டுகள் சிவகுமாருக்கு வாக்களிப்பார்கள். ஆனால், சங்கரய்யா தலைமையிலான மார்க்ஸிஸ்ட் தனியாக ஜீப் எடுத்து மாறனுக்கு வாக்குக் கேட்டதையும் பார்க்க முடிந்தது.

த.மா.கா. தொண்டர்களுக்குக் கருணாநிதி மீதுள்ள கோபம் குறைந்தபாடில்லை.

"நம்ம தலைவர் பிரதமராக விடாம காலை வாரி விட்டுட்டாரே" என்கிறார் அண்ணா நகர் வைரமணி.

அதே போல் அ.தி.மு.க. – ம.தி.மு.க. தொண்டர்களிடையே நல்லதொரு சுமுகமான இணக்கம் இல்லை.

"அஞ்சு இடந்தான்னு முன்னமே தெரிஞ்சிருந்தா வை.கோ. விலகி இருப்பாருங்க. எங்க கட்சி சிதைஞ்சதுக்கு இந்த அம்மா பண்ணின காரியம்தான் காரணம். ராமதாஸ் வந்து குட்டையைக் குழப்பிட்டாரு. இந்தத் தேர்தல் முடியறவரைக்குந்தாங்க கூட்டு! முடிஞ்சதும் இந்தம்மா கூட இருந்தா மக்கள் காரித்துப்பிருவாங்க. ஆனா ஒண்ணுங்க! எந்த ம.தி.மு.க. தொண்டனும் இரட்டை இலைக்கு வோட்டுப் போட மாட்டான்" என்றார் ம.தி.மு.க.வில் முக்கியப் பொறுப்பில் இருக்கும் ஒருவர்.

இந்தத் தேர்தலில் ரஜினியின் மௌனம், வாக்காளர்களின் அதிருப்தியை உண்டு பண்ணியிருக்கிறது.

"என்னாங்க இவருபாட்டுக்கு சொல்லிட்டு போயி ஒக்காந்திட்டா வோட்டுப் போடணுமா? தீவிரமா ஏதாவது செய்ய வேணாமா?" என்கிறார் பாடி கதிரேசன்.

பொதுவாக, சென்னையில் மூன்று தொகுதிகளிலும் தி.மு.க. ஜெயிப்பதில் சிக்கல் இருக்காது என்கிறார்கள். ஆனால் சென்ற தேர்தலில் கிடைத்ததைக் காட்டிலும் வாக்குகள் கணிசமாகக் குறையும் என்பது பரவலான கணிப்பு. கீழ்த்தட்டு, நடுத்தர வகுப்பினர் எல்லாம் தி.மு.க.வைப் பாராட்டுவது ஒரே ஒரு சாதனைக்காக!

ஓரளவு ஊழலை ஒழிக்க முழு மூச்சாக இறங்கி இருப்பதை எல்லோரும் வரவேற்கின்றனர். சாதி, கட்சி, மதம் பேதமற்று பாதிப் பேர் இதற்காக இந்தத் தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்களிக்கத் தயாராக உள்ளனர்.

ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியின் ஜாதி வோட்டுக்கள் அ.தி.மு.க. கூட்டணிக்கு வலு சேர்ப்பதையும் மறுக்க முடியாது. ●

- யுகாந்தன்













பட்ஜட் மீறினால் சம்பளம் கட்!

நான்கு ஹாலிவுட் படங்களுக்குத் திரைக்கதை எழுதும் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார், நம் ஊர் எழுத்தாளர் ராண்டார்கை. இது தொடர்பாக ஹாலிவுட்டிற்குப் போய் வந்து கொண்டிருக்கும் அவர், அங்குள்ள படப்பிடிப்பு முறை பற்றிச் சொன்னார்.

● ஹாலிவுட்டிலும் படப் பிடிப்பைப் பார்க்க மக்கள் கூடி விடுகிறார்கள். ஆனால் வரம்பு மீறாமல் தங்கள் அபிமான நடிகர், நடிகைகள், தொழில் நுணுக்க வல்லுநர்களின் பணியைப் பார்த்து, ரசித்துவிட்டுப் போகிறார்கள். படப்பிடிப்பு நடக்கும் இடத்தைச் சுற்றி ஒரு எல்லையாக கயிறு கட்டி வைத்து விடுகிறார்கள்.

அதற்கு வெளியே இருந்தபடி மக்கள் படப்பிடிப்பைப் பார்க்கலாம்; அதற்குள்ளாக அவர்கள் எப்போதும், எதற்காகவும் வருவதேயில்லை!

● முதலில் முழு திரைக்கதையையும் தயாரித்து வைத்துக் கொண்டுதான், படப் பிடிப்பிலேயே இறங்க வேண்டும். அன்றன்றைக்கு வந்து, அங்கேயே திரைக்கதை எழுதி, நடிக்க வைத்துப் படமாக்குவதெல்லாம் அங்கே செல்லுபடியாகாது. ஒரே ஒரு காட்சியில் நடிக்கும் நடிகரானாலும் அவருக்கும் முழு திரைக்கதையைக் காட்ட வேண்டும்.

● எல்லாமே அங்கே ஏஜெண்டுகள் மூலமாகத்தான் நடைபெறுகின்றன. கதாநாயகனை ஒப்பந்தம் செய்வது முதல், அந்தப் படத்திற்காகப் பணியாற்றும் எல்லா பிரிவினரையுமே ஏஜெண்ட் மூலமாகத்தான் நாம் பெற முடியும் – நேரடித் தொடர்பு மூலமாக ஒப்பந்தம் செய்ய முடியாது.



• ராண்டார்கை

உதாரணமாக, நடிகர்கள் தேவை என்றால் இதற்கென்றே காஸ்டிங் டைரக்டர் என்ற ஒருவரிடம் அந்தப் பொறுப்பைக் கொடுத்து விட வேண்டும். அவர் முழுத் திரைக்கதையையும் படித்துப் பார்ப்பார். எத்தனை நடிகர்கள் தேவை என்பதைக் குறித்துக் கொள்வார். பிறகு தயாரிப்பாளரிடம் நடிகர்களின் புகைப்படங்களைக் கொண்டு வந்து காட்டுவார். பிரதான பாத்திரங்களுக்கான நடிகர்களைத் தேர்வு செய்யும்போது அவர்களுடைய வீடியோ படம் இருந்தால் அதையும் போட்டுக் காட்டுவார். தயாரிப்பாளரின் ஒப்புதலுக்குப் பிறகுதான் சம்பளம் பேசுவதெல்லாம். ஆக, கதாநாயக நடிகரை தயாரிப்பாளரோ, இயக்குநரோ பல வடிகட்டல்களுக்குப் பின்னர்தான் நேரில் பார்க்க இயலும்!

எல்லா ஏஜெண்டுகளும் மிகவும் நாணயமாகவும் மிகவும் உதவியாகவும் இருப்பதுதான் ஹாலிவுட் படங்களின் வெற்றிக்குப் பெரிய காரணம்.

● பட்ஜட் போடுவது இன்னொரு மகத்தான பணி. இதற்கென்றே 'மூவி மாஜிக் சாஃப்ட்வேர்' போன்ற கம்ப்யூட்டர் சாதனங்களும் உண்டு. இவற்றின் மூலம் குறிப்பிட்ட படத்திற்கு எப்படியெல்லாம் செலவுகள் இருக்கும்; என்னென்ன வகைகளில் செலவு என்று எந்தச்சிறு நுணுக்கமும் விட்டு விடாத வகையில் விவரங்கள் இருக்கும். இதை வைத்தே கூட ஒரு படத்திற்கான செலவுகளை முறை செய்து கொள்ளலாம்!

இந்தக் கச்சிதமான கணக்கு எங்கேனும் தப்பினால் – செலவு இனம் கூடினால் – அதற்கு யார் பொறுப்போ, அவருடைய சம்பளத்திலிருந்து இந்தக் கூடுதல் செலவுத் தொகை கழித்துக் கொள்ளப்படும்!

ஒரு படத்தில் பணியாற்றும் யாரும் தன்னுடைய அந்தப் பொறுப்பு முற்றிலுமாக முடிவடைந்த பின்னரே அடுத்தப்பட ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியும்!

ஒரு திரைப்படத் தயாரிப்பின் மொத்த வேலைகள், தயாரிப்புச் செலவு, நடிகர்கள், என்று எல்லா தயாரிப்புத் திட்டங்களும் புத்தகமாக உருவாகும்; அது பலருக்கும் உதவக்கூடியதாக இருக்கும். ●

படம், பேட்டி : பிரபுசங்கர்

மும்பை மசாலா:


அவியலா? கூட்டா?

சென்றமுறை மும்பையில் ஆறு பார்லிமெண்டரி சீட்டுகளையும் பி.ஜெ.பி – சிவசேனைக்குத் தாரை வார்த்த வெறுப்பில், இம்முறை எப்படியேனும், எங்கேயாவது தலை எடுக்க வேண்டுமென்பதில் தீவிரமாயிருக்கிறார் சரத்பவார். அதனால், மத்தியில் எந்த ஐக்கிய முன்னணியைக் கவிழ்த்தார்களோ, அதே அணியின் ஒரு இளையான சமாஜ்வாதி கட்சியுடன் ஒரு பிணைப்பு – எந்த தலித்துகள், தமக்கு துரோகமிழைக்கப்பட்டு விட்டதாகப் புலம்புகின்றனரோ, அவர்கள் பெருவாரியாக உள்ள RPI (ரிபப்ளிகன் பார்ட்டி ஆஃப் இந்தியா) கட்சியுடன் ஒரு இணைப்பு – என்று புதிதாக ஒரு காங்கிரஸ் (3), எஸ்.பி (2), ஆர்.பி.ஐ (1) அவியலைச் சமைத்திருக்கிறார். ஆனால் ஐக்கிய முன்னணியின் பிரிதொரு இளையான ஜனதா தளம், தனக்கு வஞ்சனை புரிந்த சமாஜ்வாடி கட்சிக்கு சமாதி எழுப்பத் தயாராகிக் கொண்டிருக்கிறது! சமாஜ்வாடி கட்சிக்குள்ளேயே, இரண்டு சீட்டுகளில் ஒன்று துஷார் காந்திக்கு அளிக்கப்பட, அதன் முன்னாள் வேட்பாளர் 'இக்கட்சியைத் தீர்த்துக் கட்டாமல் விட்டேனா பார்' என சூளுரைத்துக் கொண்டிருக்கிறார். இந்த அழகில், சரத்பவாரின் அவியல், ஆளும் கட்சியின் கூட்டை எவ்வாறு முறியடிக்கப் போகிறதோ?

காத்திருந்த கல்மாடி

“சோனியா என்ன, அவர் மாமியாரே வந்து அழைத்தாலும் கூட, காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தே விட்டாலும் கூட, நான் இனி காங்கிரஸுக்குத் திரும்ப மாட்டேன்” எனத் தலையிலடித்து சத்தியமே செய்து கொண்டிருந்தார், காங்கிரஸிலிருந்து விலகி, சுயேட்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்த சுரேஷ் கல்மாடி! பி.ஜே.பி.யும் அவரை ஆதரிக்கத் தயாராக இருந்தது; ஆனாலும் தாக்கரே மசியவில்லை! சரத்பவாரின் சீடரான கல்மாடி, தேர்தலில் வெற்றி பெற்ற பின் மறுபடியும் தாய்க் கட்சிக்கே திரும்பி விடுவாரோ என்ற சந்தேகம் உள்ளூர அவரைப் பிராண்ட, அசைந்து கொடுக்காமலிருந்தார் சிவசேனைத் தலைவர். கடைசியில், தாக்கரேவை நேரில் சந்தித்து, தன் சத்தியப் பிரமாணங்களைப் பேப்பரில் எழுதி, கையெழுத்தும் போட்டுக் கொடுத்த பின்னரே, கல்மாடி மீது கொஞ்சமாக இவருக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது. 'அவர் வார்த்தை தவறினால், அடுத்த நிமிடமே இந்தக் கையெழுத்துப் பிரதி பிரஸ்ஸுக்குப் போய் விடும்' என்ற பயமுறுத்தலோடு, ஒருவழியாகத் தன் ஆதரவைத் தெரிவித்து விட்டார் தாக்கரே!

சுரேஷ் கல்மாடியின் சத்திய வாக்குமூலம்!



• சுரேஷ் கல்மாடி

இதுதான் ட்ரான்ஸ்பரன்ஸியா?

தொழிலதிபர் ஏ.கே. ஜெயின், என்ஃபோர்ஸ்மெண்ட் டைரக்டரேட் காரர்களிடம் பட்ட அல்லல்களைத் தொடர்ந்து, தினம் பத்தி பத்தியாக, ஏனையோர் அனுபவித்த கஷ்டங்கள், கண்ணீர்க் கதைகளாக வெளிவந்து, மும்பையின் பிஸினஸ் வர்க்கத்தையே கலக்கிக் கொண்டிருக்கிறது. நிதி அமைச்சகத்துக்கும், சிதம்பரத்திற்கும் மனித உரிமை இயக்கத்திற்கும் தந்திகள் பறக்கின்றன. அதுவும் மும்பையைச் சேர்ந்த பிரபாகர் மேத்தாவின் கதை சற்றே கொடுமை! இவர் மைத்துனர் பெயரில் 'FERA' சம்பந்தமான வழக்கிருக்க, இவரை விசாரிக்கிறேன் பேர்வழி என்று, நரிமன் பாயிண்டிலுள்ள ED அலுவலகத்தில், ஆடைகளை எல்லாம் நீக்கி, அடித்து, உதைத்திருக்கிறார்கள். அடுத்த அறையில் அவர்கள் ஆனந்தமாக போஜிக்க, இவரை அம்மணமாக, காற்றை மட்டும் சுவாசிக்க



• பால் தாக்கரே



• சரத்பவார்

விட்டிருக்கிறார்கள்! பாபுலால் தசோலியின் கதை கொஞ்சம் கூடுதல் கொடுமை. இவரைத் துகிலுரித்து, துன்புறுத்திய துச்சாதனர்களிடமிருந்து தப்பிக்க, இவர் கிருஷ்ணனைத் தேடி வைகுண்டமே சென்று விட்டார்! தாராளமயமாக்கத்தை ஒட்டி, இனித் தொழிலுலக நடவடிக்கைகளிலெல்லாம் ஒரு 'ட்ரான்ஸ்பரன்ஸி' இருக்கும் என்று சிதம்பரம் கூறினாரே – இப்போதல்லவா புரிகிறது 'ட்ரான்ஸ்பரன்ஸி' என்று அவர் எதைக் குறிப்பிட்டார் என்று!

பறவையும் புரவியும்

மும்பையிலுள்ள தபால் துறை, பேசாமல் அந்தக் கால ஸ்டைலில் புறாக்களுக்குப் பயிற்சி கொடுக்க ஆரம்பித்து விடலாம்! அதில் எவ்வளவோ நன்மைகள் – புறாக்கள் ஸ்பெஷல் அலவன்ஸ் கேட்காது! ஆண் புறாக்கள் குடித்து விட்டு வேலைக்கு வரும் அபாயமில்லை! பெண் புறாக்கள், குடிகார சகாக்களைப் பற்றி 'கம்ப்ளெயின்ட்' கொடுக்க வழியில்லை! குற்றம் சாட்டும் பெண் புறாக்களை, 'ட்ரான்ஸ்ஃபர்' செய்தால் தானாயிற்று என்று மற்ற ஆண் புறாக்கள் போர்க்கொடி உயர்த்தவும் வாய்ப்பில்லை! ஹூம்... முன்பு வாஷி; இப்போது ஜோகேஷ்வரிக்கும் மீரா ரோடுக்குமிடைப்பட்ட பகுதி; நாளை பூரா மும்பையுமே தபால் ஸ்டிரைக்கால் பாதிக்கப்படப் போகிறது. இதே போல், விமான சர்வீசுகளை நம்பிக் கொண்டு, நாட்கணக்கில் ஏர்போர்ட்டே கதி என்று கிடப்பதைவிட, நம் மூதாதையர் போல் குதிரை மீதேறி, காற்றினும் கடுகிச் சென்று விடலாம்! குதிரை கண்ட்ரோலர்கள் ஸ்டிரைக் கெதுவும் இருக்க முடியாதே! முணுக்கென்றால் வேலை நிறுத்தம் செய்து பொதுமக்களை அல்லல்படுத்தும் தபால் துறை, விமானத் துறை ஊழியர்களைவிட, புரவியும் பறவையும் எவ்வளவோ மேல்!

இனிமையான அதிர்ச்சி

மும்பைக்கு வருபவர்கள் இங்கேயே தங்கி விடுகிறார்கள் என்று புலம்பும் தாக்கரேவுக்கு பிரிதொரு (இனிய) அதிர்ச்சி! இதுகாறும் மற்ற மாநிலங்களிலிருந்து வந்த இந்தியர்கள்தான் இங்கே 'டேரா' போட்டார்கள். இப்போதோ, அமெரிக்காவிலிருந்து வந்துள்ள ஓர் அந்நியர் 'மும்பையே கதி' என்று அமெரிக்கா திரும்ப மறுக்கிறார்! USISன் முன்னாள் டைரக்டரான ஜெர்ரி பிரென்னிங்குக்கு, பணிக் காலம் முடிந்த பின்னும், மும்பையின் பனிக் காலமும், வேனில் காலமும், மழைக் காலமும் ரொம்ப ரொம்பப் பிடித்து விட்டதாம்! இங்கேயே, கொலாபாவில் ஒரு ஃப்ளாட் எடுத்துத் தங்கி, அமெரிக்காவிலிருந்து இந்தியாவுடன் தொடர்பு கொள்ள விரும்பும் மல்டி நேஷனல் கம்பெனிகளுக்கு, 'கன்சல்டண்ட்'டாக இருக்கப் போகிறாராம்! நம் கலை, கலாசாரத்துடன் பழக்க வழக்கங்களையும், 'தால் ஃப்ரை', (பருப்புக் கூட்டு), 'பிண்டி மசாலா' (வெண்டைக் கறி) எல்லாம் செய்யக் கற்றுக் கொண்டு விட்டார். "இந்தச் சப்பாத்திதான் வரவே மாட்டேனென்கிறது" என்கிறார். நம்மவரிடையேயும் பலருக்கு இந்தப் பிரச்னை உண்டு என்பதை யார் இவரிடம் தெரிவிப்பது? ●

— ஜெயஸ்ரீ ராஜ்

மனசோட நிறம்

தென்னங் கீற்றுக் கூரையும் மூன்று பக்கம் அதே வித மறைப்புமாய் இருந்தது அந்த ரெஸ்டாரெண்ட். பெரும்பாலான டேபிள்களில் நாற்காலிகள் உட்புறம் தள்ளப் பட்ட நிலையில் காலியாக இருந்தன. மற்றும் இரண்டு டேபிள்களில் சிலர் டிஃபன் சாப் பிட்டுக் கொண்டிருந்தனர். ஒரு மூலையில் இருந்த டேபிளின் நடைவழியை ஒட்டின நாற் காலியில் ரெக்கார்டுகள், டிஃபன் பாக்ஸ் மற் றும் மணிபர்ஸ் முதலான தாராவின் சுமைகள் வைக்கப்பட்டிருந்தன. அடுத்ததில் அமர்ந்திருந் தான் அவன். அவனுக்கெதிரான நாற் காலியில் மனோஜ்.

ட்ரேயுடன் வந்த பேரர், ஒரு டேபிளுக்கு காப்பி டபராக்களை விநியோகித்து விட்டு இவர்களிடம் வந்தான். தட்டுகளில் பிளாஸ்டிக் உருண்டைகளாக ஐஸ்க்ரீமும் அதன் ஸ்பூன் களும் வைக்கப்பட்டன. ஐஸ்க்ரீமைத் திறக்க முயற்சித்தபடியே மனோஜ், "உன் பர்த்டே அன்னைக்கு வந்திருந்தா உன்னோட சினிமா வுக்கே போயிருக்கலாம். இல்லையா?" என் றான்.

"ம்... என்னோட ஃப்ரன்ட்ஸ் எல்லாரும் உங்களப் பாக்கணும்னு சொல்லியிருக்காங்க. வந்திருந்தீங்கன்னா அவங்களும் பாத் திருப்பாங்க."

"அது சரி. அவங்களோட சேந்தா நாம சினி மாவுக்குப் போறது? நாம மட்டும் போயிருக் கலாமேன்னு சொன்னேன்."

"வந்திருந்தாப் போயிருக்கலாம்..."

"இன்னைக்குப் போலாமா?"

"அய்யோ... நான் வர்லப்பா."

"ஏம்ப்பா?"

"ம்ஹூ்ம்..." என்று தலையை ஆட்டி மறுத் தாள். அவளுக்கு இன்று ஏதோ டெஸ்ட் இருக் கிறதாம். ரொம்பத்தான் படிப்பில் அக்கறை. டுட்டோரியல்தானே. ஒரு டெஸ்ட் எழுதா விட்டால் என்ன குறைந்து விடப்போகிறது?

அவனால் மூடியைத் திறக்க முடியவில்லை. வலுவாக முயற்சித்ததில் விரல் நகக் கண்கள் வலித்தன. கையை உதறிக் கொண்டான்.

"குடுங்க, நான் ஓப்பன் பண்ணித் தர்றேன்." தாரா வாங்கி, அதை எளிதாகத் திறந்து கொடுத் தாள். இத்தனை நேரம் ரெஃப்ரிஜி ரேட்டரில் இருந்த குளுமையில் ஐஸ்க்ரீம் மிருதியான உறைவில் இருந்தது. ஸ்பூனில் கிளறிவிட்டுக் கொண்டார்கள். கரையக் கரைய சாப்பிடத் தொடங்கினார்கள். தாரா அணிந்திருந்த க்ரீம் நிற சுடி தாரை உன்னித்தவாறே,

"இது- பர்த்டே ட்ரஸ்ஸா? புதுசா இருக்கே" என்றான்.

"இது வழக்கமா எடுத்ததுதான். பர்த்டேக்கு ஒரு வொய்ட் ஜீன்ஸும் டி-ஷர்ட்டும். எங்கண்ணா... சேலத்துல இருக்காரே. அவர் எடுத்துக் குடுத்தாரு. அதப் போட்டுட்டுத்தான் அன்னைக்கு சினிமாவுக்கெல்லாம் போனேன். உங்ககிட்ட காமிக்கணும்னு நெனச்சிட்டே இருந்தேன். இன்னைக்குக் கூட க்ளாஸ் இல்லன்னா போட்டுட்டு வந்திருக்கலாம். ரெண்டு பேருமே ஜீன்ஸ்ல இருந்திருப்போம்." தாரா புன்னகைத்தாள்.

"ஜீன்ஸா எடுத்த? அதுவும் வொய்ட்ல... உனக்கு நல்லா


காதலர் தின சிறப்புச் சிறுகதை

இருக்காதே."

"நல்லாத்தான் இருந்தது. நெறையப் பேரு சொன்னாங்க, தெரியுமா?"

"மத்தவங்க சொன்னா உடனே நம்பிடறதா?" என்றதும் அவள் முகம் மாறியது. சலிப்புடன், "நான் எது பண்ணினாலும் நீங்க குத்தம் சொல்லுவீங்க" என்றாள்.

"அப்படியில்லம்மா. ஒவ்வொருத்தருக்கு ஒவ்



வொரு விதமான ட்ரஸ் நல்லாருக்கும். உனக்கு சுடிதார், ஓ.கே. இல்லன்னா... நேத்து நீ வீட்ல போட்டுட்டிருந்த மாதிரி பாவாடை சட்டை" என்றவன் குரலைத் தணித்து முன்னால் உடம்பைக் குனிந்து கொண்டு, "எனக்கு உன்னை பாவாடை சட்டைல பாக்கறதுதான் ரொம்பப் பிடிக்குது தாரா. ஏன்னா..." என்பதற்குள் அவள் கையை அடிக்கிற பாவனையில் ஓங்கினாள். அவன் தடுத்துப் பின் வாங்குகிற பாவனை செய்தான்.

"தெரியும், தெரியும்... நீங்க என்ன சொல்லுவீங்கன்னு" என்றவள் யோசனைக்குப் பிறகு, "சரி..., நான் மிடியாவது எடுத்துக்கட்டுமா? சுடிதாரே போட்டுப் போட்டு போரடிக்குது. உங்களுக்கு மிடியாவது பிடிக்குமா?" என்றாள்.

மனோஜிற்கு மிடியில் இளம் பெண்களைப் பார்ப்பது விருப்பமானதுதான். சற்றே பூசினாற் போன்ற உடம்பு வாகுள்ளவர்களுக்கு, கெண்டைக்கால் வரை தெரிகிற அந்த உடை நன்றாகவே இருக்கும். தாராவும் அப்படி உடம்புவாகு கொண்டவள்தான். ஆனால் அதை அவள் அணிவது அவனுக்குப் பிடிக்கவில்லை. "உனக்கு அது வேண்டாம் தாரா" என்றான்.

"ஏன், அதுவும் நல்லாருக்காதா எனக்கு?"

"ஆமா."

"கௌசிகா கூட போட்டிருக்காளே. அவளுக்குன்னா நல்லாருக்குதும்பீங்க" என்றபோது அவள் கோபித்துக் கொண்டது தெரிய,

ஷாராஜ்

முகம் வாட்டமுற்றிருந்தது. தாரா இப்படித் தான். அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறாள். அதை அவளது முகம் உடனே வெளிக்காட்டியும் விடும். எனவே, அவள் புரிகிற விதமாகப் பேச வேண்டியது அவசியம். அது மனோஜிற்குத் தெரியுமாதலால் நிதானமாக அவளுக்கு விளக்கினான்.

"அப்படியில்ல தாரா. ஒரு சிலருக்கு பாவாடை தாவணி நல்லாருக்கும். அவங்களே சுடிதார் போட்டா நல்லாருக்காது. ஒவ்வொருத்தருக்கு சுடிதார், ஒவ்வொருத்தருக்கு மிடி... ஒரு சிலருக்கு மட்டும்தான் எந்த ட்ரஸ் ஸானாலும் நல்லாருக்கும். கௌசிகா அந்த மாதிரி. அதெல்லாம் அவங்களோட ஒயரத்தையும் ஸ்ட்ரக்சரையும் பொறுத்தது."

"நீங்க எப்பப் பார்த்தாலும் மத்தவங்களத்தான் பாராட்டிப் பேசறீங்க. என்னை மட்டும் குறை சொல்லிட்டே இருக்கறீங்க" என்றவளுக்குப் பேசப் பேசக் கண்கள் கலங்கின.

"ஏய்... என்ன தாரா இது! இதுக்குப் போயி..."

தாரா எதுவும் பேசாமல் தலையை குழந்தைகள் 'போ' என்கிற மாதிரி அசைத்தாள். அதற்குள் கண்களில் கண்ணீர் நிறைந்து வழியலாயிற்று. மனோஜ் டேபிள் மீது தாழ்ந்து அவளைத் தேற்ற முயன்றான். அவள் தன் நாற்காலியில் பின்னகர்ந்து கொண்டாள். அவனது கை எட்டாதபடி கண்ணைக் கசக்கியவாறு விசும்பவும் தொடங்கினாள் அவள்.

"தாரா, ப்ளீஸ்... அழாதம்மா. யாராவது பாக்கப் போறாங்க" என்றவன், அங்கிருந்த மற்றவர்களை கவனித்தான். இடைவெளி சற்று அதிகம். தவிர அவர்களுக்கு தாரா முதுகு காட்டியபடியும் இருந்தாள். அதனால் அவர்களுக்கு தாராவின் விசும்பலோ, அவனது பேச்சோ கேட்கவில்லை போலும். அவர்கள் இங்கே கவனிக்காததில் அது தெரிந்தது.

இப்போது அவள் தலையைக் கவிழ்த்துக் கொண்டு முகம் பொத்தி அழலானாள். அங்கிருந்து எழுந்து வந்து அவளின் பக்கத்து நாற்காலியிலிருந்த ரெக்கார்டு நோட்டுகளை டிஃபன் பாக்ஸ் மற்றும் மணிபர்ஸுடன் எடுத்துக் கொண்டு அங்கே அமர்ந்தான். அவற்றைத் தன் மடியிலேயே வைத்துக் கொண்டு.

"நான் சொல்றதக் கொஞ்சம் கேளேன் தாரா. இல்ல, வேண்டாம். உனக்கு வேணும்னா... நீ... தாராளமா மிடி போட்டுக்க. நான் சும்மா... ஒரு பேச்சுக்காக சொன்னேன். அத நீ சீரியஸா எடுத்துட்டு... ப்ளீஸ்மா. அழாத. கண்ணத் தொடச்சிக்க. கர்ச்சீப் தரட்டுமா?"

அவன் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த கர்ச்சீப்பை எடுக்கும்போது அவளே தன் கைக்குள்ளிருந்த மடித்த கைக்குட்டையால் கண்களை ஒற்றிக் கொண்டாள். அழுந்தத் துடைத்துவிட்டு நிமிர்ந்து அமர்ந்தாள். பின்னால் சற்றே திரும்பிப் பார்த்ததில் யாரும் இது வரை கவனிக்கவில்லை என்பது உறுதியானது அவனுக்கு.

அதெப்படி, இந்தப் பெண்களுக்கு நினைத்தால் உடனே அழுகை வந்து விடுகிறது. முன்பு பல தடவைகளும் தாரா கோபித்துக் கொண்டதுண்டு என்றாலும் அவள் அழும்படியாக இவன் நடந்து கொண்டதில்லை. இப்போதும் இந்த அளவுக்கு ஆகுமென்று தெரியாதே. அவனுக்கு அதை நினைக்க, சங்கடமானது.

"உன்னோட ஃப்ரண்ட்ஸ மட்டும் சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போனயே... எனக்கு பார்ட்டே இல்லையா?" என்று நேற்றுக் கேட்கவும்தான் அவன், "காலைல வாங்க. கேக் வாங்கித் தர்றேன்" என்றிருந்தான். அதன் படியே அவன் தாரா கிளம்புகிற நேரம் வரை



காத்திருந்து, அவளுடன் இங்கே வந்தது. கேக்கை சாப்பிடும்போது ஒன்றுமில்லை. அவளுக்காக ஐஸ்க்ரீமும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் இப்படி ஆகிவிட்டது.

தாராவிடம் மன்னிப்புக் கேட்கலாமா என்று மனோஜிற்கு யோசனை. திரும்பவும் அதையே பேசினால் அவள் மீண்டும் தனது வாதங்களையே தொடர்வாள். அதனால் வேறு எதையாவது பேசி இயல்புக்குக் கொண்டு வர வேண்டியதுதான்.

எதைப் பேச ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டே அவளைப் பார்த்தான். தாராவின் முகத்தில் இன்னும் ஒரு விதமான வெறுமை. ஐஸ்க்ரீமை சிரத்தையேயின்றி கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்ததுமே முன்தீர்மானத்திற்கு மாறாக, "இன்னும் கோபம்

தீரலியா?'' என்று கேட்டுவிட்டான். அவன் அது காதில் விழாத மாதிரி இருந்தாள். "இன்னும் தீரல போல இருக்கு" என்றபோதும் சிறு மாற்றமாவது உண்டாகக் காணோம்.

"எம் மேல கோபம்னா திட்டிடு தாரா. இப்படி பேசாமயே இருந்தின்னா என்ன அர்த்தம்?''

தாரா மசிகிறபாடில்லை. ஐஸ்க்ரீமைப் பிடுங்கினாலாவது பேசுவாளா என்று அதையும் செய்து பார்த்தான். மேலும் அவள் முகம் இறுகிக் கொண்டது. திரும்பவும் தட்டை அவளிடமே நகர்த்திவிட்டு ஐஸ்க்ரீமைச் சாப்பிடலானான். இனி அவளுக்கு எப்போது பேசத் தோன்றுகிறதோ அப்போது பேசட்டும். அது வரை எத்தனை முயற்சி எடுத்தாலும் அவளிடம் பலிக்காது.

பில்லுக்குப் பணத்தைக் கொடுக்கும் போது, ''நான் தர்றேன்.'' என்றாள் அவசரமாக. அவளை மறுத்துவிட்டு அவனே கொடுத்தான்.

வெளியே வந்து நடக்கத் தொடங்கினர். அவன் தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான். காலைப் பரபரப்பில் மனிதர்களும் வாகனங்களுமாய் இருந்தது தெரு. தாராவின் டுட்டோரியலுக்குச் செல்கிற பாதை பிரியும் இடத்தை அடைந்தனர். அவன் அங்கே நின்று, "சரி... தாரா. நான் போயிட்டு வர்றேன்" என்றான்.

''நானும் பஸ் ஸ்டான்ட் வரைக்கும் வர்றேன்."

''அந்த எழுத்தாளர் பிரசுரிக்காமல் திரும்பி வந்த ஜோக்ஸை எல்லாம் என்ன செய்வார்?"

''எல்லாவற்றையும் தொகுத்து நகைச்சுவைத் தொடர் எழுதி விடுவார்!"

— இரா. கணேசன்

''உனக்கு க்ளாசுக்குப் போக நேரமாகலையா?"

"பத்து, பத்தே காலுக்குப் போனாக் கூடப் போதும்'' என்றவள் அவனுடன் நடக்கலானாள். அதன் பிறகு அவள் பேசவில்லை. இதற்கு அவள் அங்கேயே பிரிந்து சென்றிருக்கலாமே. ஆனால் இப்போது அவளுக்குக் கோபம் குறைந்துவிட்டது போலத்தான் இருந்தாள். அதுவே அவனுக்கு ஆறுதலானது.

நாற்சந்தியிலும் சிறிது நேரம் நிற்க வேண்டியதாயிற்று. தானியங்கி சிக்னலை கவனித்தபடியே ஒரு புறம் வாகனங்கள் தேங்கியிருக்க, இவர்கள் கடக்க வேண்டிய சாலையில் அடுத்தடுத்து வாகனங்கள் வந்து கொண்டே இருந்தன. கிடைத்த இடைவெளியில் மனோஜ் நகர்ந்தான். இடது கையில் மடக்கிப் பிடித்த ரெக்கார்டுகளுடன் இருந்த தாரா அப்போது அவனது கையை முழங்கைக்கு மேலாகப் பற்றிக் கொண்டாள். அந்தத் தொடுகையும் பற்றிப் பிடித்தலும் இதமளித்தது அவனுக்கு. மிகுந்த நெரிசலான ஒரு அகலப் பாதையில் அவள் இப்படியே தன்னைக் கை பிடித்து வர, தான் அவளைப் பத்திரமாக எதிர்ப்புறம் கொண்டு சேர்க்கிற மாதிரி வாய்க்க வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

சாலையைக் கடந்ததுமே தாரா கையை விட்டு விட்டாள். அவனுக்கு அந்த இழப்புணர்வு உறுத்தியது. இன்னும் சற்று தூரத்துக்காவது அவள் கையை விடாமல் இருந்திருக்கலாம். சாலையைக் கடக்கும்போதே அவளது கையைத் தன் கை விரல்களில் கோத்துக் கொண்டிருந்தாலாவது விடுவிக்காதபடி இறுக்கிக் கொண்டிருக்க முடிந்திருக்கும்.

பஸ் ஸ்டான்டில் வெளியூர் பஸ்கள் நிறுத்துமிடத்திற்கு வந்தனர் அவர்கள். இருக்கைகள் நிரம்பியிருந்தன.

''கூட்டமில்லாத பஸ்ல போய்க்கறேன் தாரா. உனக்கு லேட்டாகுதா?"

அவன் தன் மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்து, ''பரவால்ல'' என்றாள்.

வால்பாறை பஸ் ஒன்று தயங்கித் தயங்கி ஊர்ந்தது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த தாரா, "போன மாசம் வால்பாறை போயிருந்தோம். எங்க பாட்டி வீட்டுக்கு" என்றாள்.

"அப்படியா? என்ன... ஏதாவது விசேஷமா?"

"விசேஷம் ஒண்ணும் இல்ல. பூஜா ஹாலிடேஸ்ல ரெண்டு மூணு நாள் லீவ் இருந்ததால போனோம்" என்றாள். அதோடு நிறுத்திக் கொள்வாளோ என்று யோசித்துக் கொண்டிருக்கையில் அவள் பேச்சைத் தொடர்ந்தது மனோஜிற்கு ஆசுவாசமாக இருந்தது. அவளது உறவினர்கள் பற்றியும் டீ எஸ்டேட்டுக்கு அவளின் மாமா அழைத்துச் சென்றது பற்றியும் சொல்லத் தொடங்கினாள். கல்லூரியில் படிக்கிற அவளது மாமா பையன் நன்றாகப் பாடுவான் என்றாள். பாலாஜி கோயிலுக்கு அவன் தான் அவர்களை அழைத்துச் சென்றானாம்.

பாலாஜி கோயிலின் தனிமை, அங்கே போக நடந்து செல்ல வேண்டிய டீ எஸ்டேட்டுகளுக்கு ஊடேயான மரங்கள் அடர்ந்த பாதை, திரும்பி வரும்போது பெய்த பனித் தூறல், அதனூடே தூர வளைவில் மங்கலான ஒளிப் புள்ளிகளாகத் தெரிந்து வரும் வாகனங்



"ஆனாலும் அந்த கிரிக்கெட் டீம் கேப்டன் ரொம்பத்தான் பெருமை அடிச்சுக்கறார்!"

"என்னான்னு?"

"'மாட்ச்சுல தோத்தா என்ன, டாஸ்ல நாங்கதான் ஜெயிச்சோம்'னு சொல்றார்!

— சக்தி. சரவணன்

கள்...

தாராவின் முகம் உற்சாகமாக இருந்தது.

"வால்பாறையும் அப்படித்தான். வெயிலடிச்சுட்டே இருக்கும். திடீர்னு தூறல் போடும். காலையிலயும் ராத்திரியிலயும் மிஸ்ட் விழுந்துட்டிருக்கும். ரொம்பக் குளிரு அங்க" எனும்போது இரு கைகளையும் சேர்த்து ரெக்கார்டு நோட்டுகளை இறுக்கிக் கொண்டாள். வால்பாறைக் குளிர் அதன் மலைகளிலிருந்து இறங்கி இங்கேயே வந்து விட்டது போல.

"அடிக்கடி உங்கள நெனச்சுக்குவேன்" என்று சிரித்தாள்.

"நான் அங்க இருந்திருந்தா உனக்குக் குளிரடிக்காமப் பாத்துட்டிருப்பேன்" என்றதில் அவன் முறைத்தாள். "ஆனாலும் உங்களுக்கு லொள்ளு ஜாஸ்தி." அந்த முறைப்பு அப்படியே மாறி உதடுகளில் முறுவலானது. சிகரெட் புகைக்க வேண்டுமாய் உணர்வு ஏற்பட்டது அவனுக்கு. தாராவிடம் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

புத்தகக் கடையை ஒட்டி ஒரு அம்மாள் வெற்றிலை, பாக்கு மற்றும் பீடி, சிகரெட்டுகளுடன் கடை விரித்திருந்தாள். சிகரெட் வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டு வரும்போது, "உங்ககிட்ட ரொம்ப நாளாவே ஒண்ணு கேக்கணும்னு இருந்தேன்."

"கேளு..."

"உங்களுக்கு எங்கிட்ட என்ன புடிச்சிருக்கு?"

பதிலுக்கான ஆவலுடன் அவனைப் பார்த்தாள். மனோஜிற்கு அவளைச் சீண்டிப் பார்க்க வேண்டும் போல இருந்தது. "உன்னை எனக்குப் புடிச்சிருக்குதுன்னு நான் சொன்னதில்லையே" என்றான்.

தாரா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். முகம் வாட்டமுறலானது. பார்வையையும் மாற்றிக் கொண்டு சுற்றுப் புறத்தை வெறித்தாள். மனோஜ் சுவாரஸ்யமாக சிகரெட்டைப் புகைத்தவாறே அவளது அந்த மாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

"நான் போகட்டுமா?" என்றாள் தாரா, சன்னமான குரலில்.

"அதுக்குள்ள என்ன அவசரம்? நான் பஸ் ஏறினதுக்கப்புறம் போனாப் பத்தாதா?"

"நான் எதுக்கு உங்களுக்கு எடைஞ்சலா இருக்கணும்?" என்று தலையைக் குனிந்து கொண்டாள்.

"யார் சொன்னாங்க அப்படீன்னு."

"யாரும் சொல்லல. எனக்கே தெரியுது. எப்பப் பாத்தாலும் உங்களோட நான் சண்டை போட்டுட்டே இருக்கிறேன். நேத்தும் உங்கள சங்கடப்படுத்தினேன். இன்னைக்கும் அதே மாதிரி ஆயிருச்சு. எந்த விதத்துல பாத்தாலும் நான் உங்களுக்கு பொருத்தமில்ல தான?" நிமிர்ந்த அவளின் கண்களில் நிராசை படிந்திருந்தது. உதடுகள் மெலிதாகத் துடித்துக் கொண்டிருந்தன.

தான் பேசியது வினையாகி விட்டதை உணர்ந்தான் மனோஜ்.

எப்படியேனும் தான் சொன்னது வெறும் விளையாட்டு என்பதை அவளுக்குப் புரிய வைத்து விட வேண்டும் என அவன் தீர்மானித்துக் கொண்டிருந்தான். தாரா மிகவும் களைப்புற்றவளாகக் காணப்பட்டாள். பக்கவாட்டில் திரும்பி அவனைத் தவிரவும் மற்ற மனிதர்கள், இடங்கள், பொருட்கள் மீது நிலையற்று அலைந்தது பார்வை. அவளின் சோகம் கூட ஒரு வகையில் அவனுக்கு நன்றாகவே இருந்தது. இன்னும் கொஞ்ச நேரமாவது அதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்று மனோஜிற்குத் தோன்றியது. அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தாரா கடைக் கண்களில் அவனை கவனித்தாள். உடனே அவனுக்கு நேராகத் திரும்பி முறைத்தாள்.

"உங்களுக்கே என்னைப் புடிக்கலன்னு சொல்லிட்டீங்கில்ல? அப்புறம் எதுக்கு இப்படி உத்துப் பாத்துட்டிருக்கீங்க?" குரலில் வேகமும் எதிர்ப்பும் தொனித்தது. அவன் ஆச்சரியமாகி, மேலும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னைப் புடிக்காதவங்க என்னைப் பாக்கக் கூடாது" என்றாள் தாரா. அதைச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே அவளுக்குச் சிரிப்பும் வந்து விட்டது. அதை வெளிக் காட்டக் கூடாது என்கிற முனைப்பில் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொள்ளவும் கீழ் உதட்டைக் கடிக்கவும் செய்தாள். அவளால் முடியவில்லை.

ஆகவே அவன் புன்னகைத்தான். அதனால் அவளும் சிரித்தாள். ●

பெண்ணுலகம்

பத்துப் பன்னெண்டு வாரம் சாப்பாட்டுராமியாட்டம், சாப்பாடு சம்பந்தமா எழுதிட்டேட. முன்ன, அழகு – ஆரோக்கியக் குறிப்புகள் மாதிரி ஒரு 'சீரீஸ்' பண்ணேன. ஒரு சேஞ்சுக்கு, 'டோட்டலி நியூ'ன்னு சொல்றாப்பல ஏதாவது எழுதேன் சுமின்னு கல்கி எடிட்டர் கேட்டாங்க. நான் ஒழுங்கா படிப்பை முடிச்சுட்டு, டாக்டராவேனோ என்னவோ, பாப்புலர் கட்டுரையாளினியா ஆயிடுவேன் போலிருக்கு. எனி ஹவ், இப்பப் பாருங்க, நீங்களெல்லாம் என்னை ஒரு நல்ல ஃப்ரெண்டா ஏத்துக்கிட்டிருக்கீங்க. இந்த சுமி அப்பப்போ கிண்டலடிச்சாலும் ரசிக்கிறீங்க. நிறையப் பேர் டீஸன்ட்டான லெட்டர்ஸ் வேறே போட்டு, எனக்கு அங்கங்கே வாசகர் சங்கம் (ரசிகர் மன்றம்னு சொன்னா நல்லாவா இருக்கும்) இருக்கிறமாதிரியான பிரமையை எல்லாம் ஏற்படுத்தியிருக்கீங்க. ஆனா ஒரு பொண்ணு சொன்னா அதைக் கேட்டுக்க எவ்வளவு நாடுகளிலே தயாராயிருப்பாங்க? அங்கே இங்கேன்னு புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படிச்சுப் பார்த்ததிலே பிற நாடுகளிலே பெண்கள் நிலைமை எப்படின்றது தெரிஞ்சது. உடனே மிளகாயைக் கடிச்ச மாதிரி இருந்தது! இதைப் பத்தியே எழுதலாமேன்னு தோணிச்சு.



• தாலிபன் தீவிரவாதிகள்



முதல்லே ஆப்கனிஸ்தான். அதுதாங்க, நம் நாட்டின் தலைக்கு மேலே, பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் நடுவிலே இருக்கே அதுதான்! அங்கே தாலிபன்ற அமைப்பைச் சேர்ந்தவங்க செய்துக்கிட்டு வர்ற அட்டூழியம் கொஞ்சம் நஞ்சம் இல்லே, தெரியுமா?

இந்தத் தாலிபன் அமைப்பு பாகிஸ்தானிலே ஆரம்பிச்சது. ஈரானை ஆதரிக்கும் எந்த அமைப்பும் இதுக்குப் பிடிக்காது! ஆப்கானிஸ்தான் அரசு ஈரானை ஆதரிச்சதும், ஆப்கானிஸ்தானிலிருக்கிற தாலிபன் குழுவினர் கிளர்ச்சியிலே இறங்கினாங்க. அமெரிக்காவும் மூக்கை நீட்டினது. அதற்கும், ஈரானுக்கும்தான் நம்ம மனோஜ் பிரபாகருக்கும், இந்திய கிரிக்கெட் போர்டுக்குமிடையே இருக்கிற மாதிரி எட்டாம் பொருத்தமாச்சே! தாலிபனை அமெரிக்கா பலவிதங்களில் சப்போர்ட் செஞ்சது – மறைமுகமாகத்தான். இதெல்லாம் அரசியல், ஒழியட்டும்! ஆனால் இந்த தாலிபன் ஆட்கள், ஆப்கானிஸ்தான் மக்களிடையே இஸ்லாம் கோட்பாடுன்னு சொல்லி, எதெதையோ திணிக்கிறாங்க பாருங்க. அதுதான் அக்கிரமம்! டீனேஜ் தாண்டின பசங்களெல்லாம் தாடி வச்சுக்கிட்டே ஆகணுமாம். இல்லேன்னா நடுத்தெருவிலே சவுக்கடி. ஏங்க, சில பேருக்கு ஷம்மி கபூர், பிரணாய் ராய் மாதிரி தாடி சிக்குனு இருக்கும். சிலருக்கு நம்ம டி. ராஜேந்தர் மாதிரி இருக்கும். சிலருக்கு தாடியே வராது. அதனாலே தாடி விஷயத்திலே சாய்ஸ் வேண்டாம்?

சரி, இதுவாவது சோட்டா விஷயம். அங்கே பெண்களோட நிலைமை எப்படி இருக்குன்றதைக் கேட்டால் எம்.ஆர். ராதாவோட மாஸ்டர்பீஸே வரும் – அதுதாங்க ரத்தக் கண்ணீர்!

சுரிதார், மாக்ஸி, மிடின்னு எந்த உடையையும் போட்டுக்கலாம்னு க்ரீன் சிக்னல் கொடுத்து வளர்க்கப்பட்ட ஒரு பொண்ணு திடீர்னு, "நீ இனிமே சேலை மட்டும்தான் கட்டிக்கணும்"னா அவளுக்கு எப்படி இருக்கும்? அது மாதிரிக் கூத்துதான் ஆப்கானிஸ்தானிலே நடக்குது.

பெண்கள் முன்னேற்றத்திலே கொஞ்சம் உன்னதமான கருத்துக்கள் கொண்ட நாடுதான் அது. அமானுல்லான்ற ராஜா அந்தக் காலத்திலேயே அங்கே கோ-எஜுகேஷன் கல்விமுறையை அறிமுகப்படுத்தினார். சில பேர் எதிர்க்க, முன்னேறிய பல இஸ்லாம் நாடுகளை உதாரணம் காட்டி, அவங்க வாயை அடைச்சிருக்காரு. அவர் மனைவி 'சுரையா ராணி'க்கும் இதில் முக்கியப் பங்கு உண்டு. பெண்கள் முன் னேற்றத்துக்குத் தான் ஒரு உதாரணமாக இருக்கணும்னு நினைச்சு அந்தக் காலத்திலேயே பர்தா போடறதைத் தவிர்த்திருக்காங்க அந்தம்மா.

பரிதவிக்கும் பெண்கள்!

இந்த சுதந்தரப் பொறி பரவி, பட்டப் படிப்பைத் தாண்டி டாக்டர், என்ஜினீயர்னு பெண்கள் வெளுத்துக் கட்டத் தொடங்கினாங்க. ஆனா பாவம், இப்ப எல்லாரும் வீட்டிலே முடங்கிப் போய் வெந்ததைத் தின்னு விதி வழியே கிடக்கிறாங்க. பெண்கள் யாரும் வேலைக்குப் போகக் கூடாதுன்னு சட்டம் போட்டிருக்காங்க, தாலிபன் ஆளுங்க! சில விதவைப் பெண்கள் வேலைக்குப் போய்த்தான் தங்கள் குடும்பத்தைக் காப்பாத்திக்கிட்டிருந்தாங்க. இப்ப அவங்க பிழைப்பிலே மண்ணும் கல்லும்! அடுப்பிலே 'மியாவ் மியாவ்'!

போன மாசம் ஒரு பெண்மணி மார்க்கெட்டுக்குப் போயிருந்தாரு. வெங்காயம் வாங்கிக்கிட்டு திரும்பி வரும்போது ஒன்னு அழும்படியான நிலை வந்துருச்சி அவருக்கு! வெங்காயத்தின் விலையை நினைச்சு இல்லே. வழியிலே சில தாலிபன்காரங்க அவரைப் பிடிச்சு அடிச்சிருக்காங்க. கூடையைப் பிடுங்கிக் கீழே எறிஞ்சிட்டு "இஸ்லாமிய முறைப்படி கண்களைத் தவிர, முழு உடலையும் மறைக்கும்படியான பர்தாவை நீ ஏன் போட்டுக்கலை? அதனால்தான் இந்த தண்டனை"ன்னு கத்தியிருக்காங்க.

"நான் ஒரு நிஜமான முஸ்லிம். என் தலைமயிர் முழுவதும் மறையும்படி தலையைச் சுற்றி அங்கியை அணிந்து கொண்டிருக்கிறேனே" என்ற அவரது கதறல் எடுபடலையாம்.



• பயத்தில் ஆப்கன் பெண்கள்

இதெல்லாம் எந்த மூலைக் குன்றும்படியான அனுபவம் ஏற்பட்டது எம்மா போனினோ என்ற பெண்மணிக்கு. அதுவும் சாதாரணமானவரா அவர்? ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதியான அவருக்கு, ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் நேர்ந்த அவமானங்கள், "பெண்களுக்கு எதிரான கொடுமைகளிலே இதுவே உச்சம்"னு அவரைச் சொல்ல வெச்சது. அது பத்தி அடுத்த வாரம் சொல்றேனே...

— சுமி

புதுதில்லியில் நடந்த உலகப்பட விழாவைத் தமிழ்த் திரையுலகமே புறக்கணித்திருக்க, பார்த்திபன் மட்டும் அதில் கலந்து கொண்டு விட்டுச் சமீபத்தில் சென்னை திரும்பினார். திரையுலகமே போட்ட தீர்மானத்தை மீறி இருப்பதற்குக் கண்டனம் ஏதாவது வந்ததா என்று அவரிடம் கேட்டோம்.

"இடைவிடாத வேலைகளுக்கிடையே எனக்குக் கொஞ்சம் ஓய்வு வேண்டியிருந்தது. அதே வேலை நெருக்கடியால்தான் செய்திகளை அறிய முடியாமல் போனது. அதனால்தான் நான்பாட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டேன். எதையும் மீற வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் நிச்சயமாக இல்லை. நான் திரும்பி வந்து, விஷயம் அறிந்து, என் தரப்பை விளக்கியதும் அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். எதிர்ப்பு ஏதும் இல்லை!"

"நீங்கள் ரெகுலராகப் பட விழாவுக்குப் போகிறவர் என்று தெரியும். இம்முறை வித்தியாசமான அனுபவம் ஏதாவது?"

"பொங்கல் தினத்தன்று, விழா அரங்கிலேயே ஒரு பொங்கல் பானையைக் கொண்டு வந்து, அதிலேயே வாழ்த்துக்களை எழுதச் சொன்னேன். அறுநூறு பொங்கல் பாக்கெட்களை விசேஷமாக ஆர்டர் கொடுத்துத் தயாரிக்கச் சொல்லி, விநியோகித்ததும் இனிய அனுபவம்."

"பார்த்த படங்களில் குறிப்பிடும்படி எத்தனை இருந்தன?"

"சில படங்கள் என்னை மிகவும் பாதித்தன. 'பேப்பர் ஏரோப்ளேன்' என்கிற ஈரான் தேசத்துப் படமும் 'கான்ஸெப்ட் ஆஃப் லைஃப்' என்ற ஹாங்காங் படமும் அவற்றுள் ரொம்ப முக்கியம். மலை ஜாதி மக்களுக்குச் செய்திப் படம் காண்பிக்கப் போன ஒரு குழுவின் மாறுபட்ட அனுபவங்களைச் சொல்லும் படம் 'பேப்பர் ஏரோப்ளேன்.' 'கான்ஸெப்ட் ஆஃப் லைஃப்' ஒரு பியானோ இசைக் கலைஞனின் வாழ்வில் குறுக்கிடும் காதலைப் பற்றியது. அந்தப் பியானோ ஆசிரியரின் மாணவியே, அவரது இசையில் மயங்கிக் காதலி ஆகிறாள். ஆனால், கருத்து வேறுபாடுகளால் பிரிந்து விட, அவர் இசை, சோகமயமாகி விடுகிறது. பிறகு, அவர் தம் கலையை வேறொரு மாணவனுக்குப் பூரணமாக போதிக்க, அவன் பிரமாதமாக வரும் வேளையில் இவரைப் புற்று நோய் தாக்குகிறது. இசையும் காட்சியும் பிணைக்கப்பட்டிருந்த நேர்த்தியில் ரசிகர்கள் கிறுகிறுத்துப் போய் இரண்டு நாளைக்கு இந்தப் படத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்."

"இத்தனை ஆர்வமாக நீங்கள் பட விழாக்களுக்குப் போவதன் காரணம் என்ன?"


"நாம் என்னதான் சாதித்தாலும் மற்றவர்களின் சாதனை உயரம் என்ன என்பதை அவ்வப்போது தெரிந்து கொள்வது அவசியம். மேலும் கொஞ்சம் புதுப் புது ஐடியாக்கள் கிடைக்கலாம். அதைவிட முக்கியம் - உலக அளவில் சினிமாவின் தொழில் நுட்பம் எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதைக் கண்டு கொள்ள முடியுமே!"

"இயக்குநராக இருந்து, இப்போது அந்த சமாசாரத்தையே சுத்தமாக மூட்டை கட்டி வைத்து விட்டு, முழுநேர நடிகராகி விட்டீர்களே?"

"சுகமும் சோகமும் கலந்த இயக்குநர்

‘வெயலன்ஸெட்ன்’ வருகிறேன்!

— பார்த்திபன்



பணியைத் தாற்காலிகமாகத்தான் நிறுத்தி வைத்துள்ளேன். இந்த வருடம் நிச்சயம் என் இயக்கத்தில் 'வயலன்ஸ்' என்ற படம் வரும்."

"டைட்டிலே மிரட்டுகிறதே?"

"தலைப்புதான் அப்படி. படம் வந்ததும் - பார்த்தீர்களானால் அதன் பொருத்தம் புரியும்."

"கருப்பண்ணசாமியும் சோத்துக் கட்சியும் என்ன ஆயின? பிரமாதமாக விளம்பரமெல்லாம் செய்தீர்களே?"

"சில பூர்வாங்க வேலைகளில் ஏற்பட்ட சிக்கல்களால், கருப்பண்ணசாமியைத் தொடங்கியபோது சில லட்சங்களை இழக்க வேண்டியதாயிற்று. அதனால்தான் தொடர முடியவில்லை. 'சோத்துக்கட்சி' நின்றதற்கு நான் காரணமல்ல. அந்த நேரத்தில் நான் நடித்துக் கொண்டிருந்த 'அரவிந்தன்' படம் ஏற்படுத்திய தாமதம்தான் காரணம். 'கௌரவத் தோற்றம் - பத்து நாளில் உங்கள் போர்ஷன் முடிந்து விடும்' என்று உறுதி சொன்னார்கள். ஆனால் மாதக் கணக்கில் இழுத்து விடவே, அடுத்தடுத்த கமிட்மெண்ட்களால் சோத்துக்கட்சியைத் தொடர முடியாமல் போய் விட்டது!"


"இப்போதெல்லாம் கௌரவ வேடங்களைத் துணிந்து ஏற்கிறீர்களே?"


"இமேஜ் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. நான் ஏற்கிற பாத்திரம் அழுத்தமானதாக இருக்க வேண்டும்; அவ்வளவுதான். வெளியாகப் போகிற கே.எஸ். அதியமானின் 'சொர்ணமுகி'யில் கூட எனக்குச் சிறிய பாத்திரம்தான். ஆனால் அதற்கான முக்கியத்துவம் அதிகமாக இருக்கும். இன்று வட இந்தியப் பட உலகைக் கவனித்தீர்களானால், பெரும்பாலான முன்னணி நடிகர்களெல்லாம் இத்தகைய கண்ணோட்டத்துடன்தான் நடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்!"

"இறுதியாக ஒரு விஷயம். இடைவிடாமல் உங்களைப் பற்றிய கிசுகிசுக்கள் வந்து கொண்டே இருக்கின்றனவே!"

"சினிமா தோன்றியது முதல் கிசுகிசுவும் தோன்றி விட்டது. ஆனால் இதன் விளைவுகள் சில சமயம் வரம்பு மீறும்போது மனசு ரொம்பக் கஷ்டப்படுகிறது. அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுத்து, படு சாதாரண விஷயத்தைக் கூடப் பெரிதாக்கி விடுகிறார்கள். வருத்தப்படுகிறேன்; அவ்வளவுதான்!" ●

சந்திப்பு : **ஏ.எம்.எஸ். கணபதி**


அரசியல் நடிப்பு!
பார்லிமெண்ட்
சார் சார்.. டப்பிங் ஆர்டிஸ்டையெல்லாம் உள்ளே அனுமதிக்க முடியாது! நீங்கதான் சொந்தக்குரல்ல பேசியாகணும்!
இந்த பேப்பர்காரங்க நம்ம கட்சிக்கு எதிராவே செய்தி போடறாங்க தலைவரே!..
..புரிஞ்சுக்காம அடம் பிடிக்கிறாருங்க.. ஹாலிவுட் ஜோடிதான் தனக்கு வேணுமாம்!
என்ன ஆச்சு!
எம்.கே.டி பாகவதர், பி.யு. சின்னப்பா வெல்லாம் நம்ம கட்சியில் சேர்ந்திருக்கிறதா நியூஸ் வந்திருக்கு!
ஒரு குட்டி நடிகையாவது நம்ம கட்சிக்கு அழைச்சிட்டு வரணும்னு நீங்க தானே சொன்னீங்க தலைவரே!



சினிமாவிலே இருந்தப்போ எல்லா ஏரியாவும் அவரேதான் ரிலீஸ் பண்றது வழக்கமாம்.. அதே மாதிரி நாப்பது தொகுதியிலேயும் நான்தான் நிப்பேன்னு அடம் பிடிக்கிறாருங்க!
சினிமா ஷூட்டிங் இல்ல.. ஹீரோவை வேட்பாளரா அறிமுகப் படுத்தறாங்க!
ஐயா.. நம்ம ஹீரோ எவ்வளவு டக்கரா வந்து மனுதாக்கல் செய்யறாரு பார்த்தியா?!
மேடைக்குப் பேசறதுக்குக் கூப்பிட்டா 'மேக்கப்மேன்' வந்து 'மேக்கப்' போட்ட பிறகுதான் வருவாராம்!



DOUBLE TEAM

வான் டேமின் (Van Damme) மற்றொரு சாகஸப் படம். தீவிரவாதிகளுக்கு எதிராகக் கடும் முயற்சிகள் எடுக்கும் ஹீரோ, ஒருவழியாக எதிரிகளின் கையில் சிக்கிக் கொள்கிறான். இவன் தப்பி விடாதிருக்க அவனது மனைவியையும் குழந்தையையும் வேறு, தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொள்கிறார்கள் வில்லன் கோஷ்டியினர். ஆயுத சப்ளை செய்யும் டெனிஸ் ராட்மெனின் உதவியோடு வில்லன்களைத் தீர்த்துக் கட்டுகிறார், ஹீரோ.

கதையில் ஓட்டடை நெடி. என்றாலும் இது போன்ற படங்களில் கணிப்புக்கு உள்ளாவது சாகஸங்களின் அளவும், காட்சிகள் ஏற்படுத்தும் பிரமிப்பும்தானே.

பலமும் குரூர புத்தியும் கொண்ட வில்லனின் திட்டத்தைத் தகர்ப்பதற்கு முதல் கட்டமாகத் தன்னைத் தயார் செய்து கொள்கிறார், ஹீரோ. குளியல் தொட்டிக்குள் நீருக்குள் மூச் சடக்குகிறார். பக்கெட்டில் கல்லைப் போட்டு அதை மீண்டும் மீண்டும் காலால் தூக்குகிறார். நிலைப்படியின் மேல் உள்ள க்ரில் அமைப்பில் தலைகீழாக நடக்கிறார். பாத் டப்பையே தண்டாலாகப் பயன்படுத்தி தோளுக்கு உரமேற்றிக் கொள்கிறார். சிகரெட்டைப் பற்ற வைத்து விட்டு அது முழுவதும் எரிந்து அணைவதற்குள் இவற்றைச் செய்வதுதான் நேரக் கணக்கு.

குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு முறை ஹீரோ தனது கட்டை விரலை ஒரு ஸ்விட்சில் அழுத்த வேண்டும். இப்படி ஒரு ஏற்பாட்டை வில்லன் செய்திருக்கிறான் - ஹீரோ தப்பிவிடவில்லை என்பதை உறுதி செய்வதற்காக. ஹீரோவோ, தன் கட்டைவிரலின் மேல்பகுதித் தோலை அப்படியே வெட்டி எடுத்து ஒரு கருவியில் பொருத்தி, குறிப்பிட்ட நேரம் வரும்போதெல்லாம் ஸ்விட்ச்சில் அந்தத் தோல் பகுதி அழுத்துவது போல் பதில் ஏற்பாடு செய்கிறார்! (கை ரேகை மாறினாலும் விஷயம் தெரிந்துவிட்டிருக்கும்.)

வெறும் மசாலாப் பிரியர்களுக்கான ஹாலிவுட் சரக்கு இது. விஷுவல் எஃபெக்ட்களைத் தவிர, ரசிக்க வேறொன்றுமில்லை!

— ஜி.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

கரும்பு சுவைக்க சன்மானமும் உண்டு!

ஸ்ரீராம் டிரஸ்ட் வழங்கும் சந்தா முதலீட்டுத் திட்டம்!

**ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ. 10,000 முதலீடு செய்யுங்கள்.
5 ஆண்டுகளில் ரூ. 20,000 (இரு மடங்கு)
பெற்றுக் கொள்ளுங்கள்.**

அந்தாடன்

● 4 இலக்கிய பொக்கிஷங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் ●



1. 'கல்கி' வார இதழ் 5 ஆண்டுகளுக்கு (260 வாரங்களுக்கு) உங்கள் இல்லம் தேடி வரும்.
2. 'கல்கி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்கு பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.
3. பொன்விழாக் காணும் 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ் 5 ஆண்டுகளுக்கு உங்கள் இல்லம் தேடி வரும்.
4. 'அமுதசுரபி' தீபாவளி மலர் 5 ஆண்டுகளுக்குப் பதிவுத் தபாலில் உங்களுக்குக் கிடைக்கும்.



ரூ. 10,000 (ரூ. பத்தாயிரம்) 'ஸ்ரீராம் டிரஸ்ட்' பெயருக்கு செக்/டிராப்ட் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஸ்ரீராம் டிரஸ்ட்', ஏ-7, இரண்டாவது அவென்யூ, அண்ணாநகர் கிழக்கு,
சென்னை - 600 102. தொலைபேசி எண் : 628 6869, 628 7879

---

1. முழுப்பெயர் : திரு/திருமதி/செல்வி...
முகவரி :...
....
....

2. கூட்டாக இடப்பட்டால் அவர்கள் பெயர் :
முழுப்பெயர் :..

3. வாரிசுதாரர் :...

4. கல்கி, அமுதசுரபி இதழ்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி :..................
....
....

CHEQUE/D.D. No. Dt. ON

Rs. .... அன்புள்ள

இடம் ....

தேதி .... முதலீட்டாளர் கையொப்பம்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / MS (S) M4392/97" Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 " Registered as a Newspaper in Srilanka

L.R.SWAMI / P.P